உ

கடவுள் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

கோவலன்கதை.

பெரிய எழுத்து

மதுரை, வடக்காவணிமூலவீதி, புத்தகவியாபாரம்

இ. ராமசாமிக்கோனாரால்,

மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1922 [அணா-6

முந்துங்கள்! புத்தகத்திற்கு முந்துங்கள்!!

மதுரைத்தமிழ் வித்வான்,

ஸ்ரீ: நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் இயற்றிய

சங்கீத பாகவதம் அல்ல

சம்பூர்ண

ஸ்ரீ: கிருஷ்ணலீலா.

தற்கால நாகரிக வர்ணமெட்டுக்களிலமைந்த செஞ்சொற் பாக்களுடனும், இனிய செந்தமிழ் வசன நடையுடனும் வெளிவந்துளது.

முதல் இரண்டு பாகம் தனித்தனி	விலை அ	0—4—0

ஷை யாரியற்றிய

,, சாவித்ரி சத்யவான் 1, 2 பாகம் தனித்தனி	,,	0—4—0
,, நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகம் தனித்தனி	,,	0—4—0
,, இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து	,,	0—2—0
,, ஷை காந்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன்	,,	0—1—0

முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸவர்களியற்றிய

இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் 1, 2 பாகங்கள்	விலை அ	0—6—0
புதிய பெரிய பக்திரஸக் கீர்த்தனங்கள்	,,	0—5—0
ஷை இரண்டாம் பாகம்	,,	0—5—0
லலிதாங்கி சரித்திரம் ஷை யாரியற்றியது	,,	0—8—0
வள்ளியம்மை சரித்திரம் ஷை	,,	0—6—0
அதிரூப அமராவதி ஷை	,,	0—6—0
சகுந்தலா 1, 2 பாகங்கள் ஷை	,,	0—8—0

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

இராமநாடகம் (படங்களுடன்)	விலை ரூ	2—0—0
பக்திரஸ கீர்த்தனங்கள், 1, 2-பாகம் தனித்தனி		0—5—0
விநோதவிகடசிந்தாமணி இரண்டாம் பாகம். நினைக்கும்போதெல்லாம் சிரிப்பையுண்டாக்கும் சிறந்த கதைகள்		0—8—0

அம்பாசமுத்திரம் சுப்புசாமி அய்யரவர்களியற்றிய

இராமாயணச் சிந்து		0—2—0

அருணகிரிநாதசுவாமிகளியற்றியருளிய

திருப்புகழ் பெரிது முதல் பாகம் (642) பாடல்களுடன்		2—8—0
ஷை 2-ம் பாகம் (611) பாடல்களுடன்		2—8—0

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை.

உ

கடவுள் துதி.

கோவலன் கதை.

விநாயகர் துதி.

முந்திமுந்திவிநாயகரே முக்கணனார் தன்மகனே
ஐந்துகரத்தோனே அருளுடையாள்புத்திரனே
விக்கினவிநாயகரே வெண்ணெயுண்டோன் தன்மருகா
முக்கணனார்பெற்றெடுத்த மூஷிகவாகனரே
வெட்பாலைக்குள்ளிருக்கும் சப்பாணிபிள்ளையாரே
சப்பாணிபிள்ளையாரே பொற்பாதம் நான்மறவேன்
கோவலனார் தன் கதையை மனமகிழ்ந்து நான்பாட
விக்கினங்கள்வாராமல் விநாயகரேமுன்னடவாய்

சுப்பிரமணியர் துதி.

ஆறுமுகவேலவரே அச்சுதன்மருமகனே
சிவகாமிபுத்திரனேதெய்வானை நாயகனே
வள்ளியைமணம்புரிந்த மகாதேவர் தன்மகனே
புள்ளிமயிலேறும் பூங்குறவர்மருமகனே
இக்கதையான்பாட இன்பமாயென்னாவில்
ஒக்கவே நீயிருந்து உகந்தருளும்வேலவரே

சொக்கர்மீனாட்சி துதி.

சோலைமலருடைய சொக்கேசர்மீனாட்சி
ஆலவிடமுண்ட ஆலவாய்ச்சுந்தரரே
அந்தமாயிக்கதையை அன்பாகப்பாடுதற்கு
எந்தனுடனாவி லினிதாய்க்குடியிருந்து
தப்புகள்வாராமல் தற்காருந்தாயாரே
ஒப்பும்படியாக உத்தமரேகாத்தருளும்

திருமால் துதி.

ஆலிலைமேற்பள்ளிகொண்ட ஆதிநாராயண
பால்வெண்ணெய்தயிருடனே பரிவாகவுண்டவரே
பாற்கடலில்பள்ளிகொண்ட பத்மவுலாசனரே
தீர்க்கமாயென்னாவில் தீவிரமாய்வந்திருந்து
குற்றங்கள்வாராமல் கோவலனார்தன்கதையை
சுத்தமாய்ப்பாடுதற்கு சுந்தரனேகாத்தருளும்

சரஸ்வதி துதி.

வாணிசரஸ்வதியே மறையவனார்தேவியரே
காணிக்கையசகவேதான் களிப்பாகவுந்தனுக்கு
பால்பழமுஞ்சர்க்கரையும் பருவிளாம்பழமுடனே
கால்கண்டநாழிகைக்கு கடுகப்படைத்திடுவேன்
கோவலன்றன்கதையைக் கூசாமல்பாடுதற்கு
காலனணுகாமல் கதையொன்றுஞ்சோராமல்
பத்தினியாள்தன்கதையில் பழுதொன்றும்வாராமல்
உத்தமியாள்தன்கதையில் ஒன்றுங்குறையாமல்
பாடவேயென்னாவில் பார்வதியேயிப்பொழுது
கூடவே நீயிருந்து கூட்டிவைக்கவேண்டுமம்மா

கதையின்வரலாறு

ஆயிரம்பாண்டியர்க ளதிதிரளாம்மன்னவர்கள்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
தேனுமதுரையது தென்மதுரையாண்டிருந்தார்
இப்படிக்காண்டிருந்தார் இன்பமுடன்பாண்டியர்கள்
பட்டணமாம்பட்டணமாம் காவிரிப்பூம்பட்டணமாம்
காவிரிப்பூம்பட்டணத்தில் கனதுரையாம்வர்த்தகர்கள்
மானாகன்செட்டி மாச்சோட்டான்செட்டியென்றும்
அத்தானுமைத்துனனு மழகுகப்பலோட்டிருந்தார்
ராவோடுராதிரும்பும் நாலுலட்சஞ்சேர்ந்தகப்பல்
பகலோடுபகல்திரும்பும் பத்துலட்சஞ்சேர்ந்தகப்பல்

படலரிசிவரும் பட்டணத்துமாலைவரும்
சோங்குமிளகுவருஞ்சொர்ணகப்பலேலெலம்வரும்
இப்படிக்குத்தானிருந்தார் இன்பமுடன்வர்த்தகர்கள்
மாஞகர்செட்டிபெற்ற மன்னவன்முத்துச்செட்டி
பிள்ளையில்லையென்றும் வெகுநாள்தவமிருந்தார்
நந்தவனம்பூந்தோட்டம் நதிக்கரையும்வைத்தார்கள்
பொய்கைகள்மேல் புஷ்பவனந்தானும்வைத்தார்
கயிலையிலங்கிருந்து காமதேனுமங்குவரும்
நூலேணிகீழ்போட்டு நூதனமாய்த்தானிறங்கி
புல்லுகள்மேய்ந்து புஷ்பவனப்பொய்கையிலே
தாமரைப்பொய்கையிலே தாகமதுதானருந்தி
மன்னன்முத்துச்செட்டியைமகிழ்சியுடன்வாழ்த்தி
நூலேணிமேலேறி கைலாசஞ்சேர்ந்திடுமாம்
அன்றுபோய்மற்றுநாள் அன்பாகவரும்போது
காமதேன்தன்னைக்கொண்டு கன்றதுமேதுரைக்கும்
நீபோனவீட்டுக்கு நான்கூடவாரேனென்று
கன்றதுபின்துடர்ந்து காட்டுக்குவரும்போது
பூங்காவனந்தேடி வந்ததுகாமதேனு
புல்லுகளைமேய்ந்து சலங்களையுந்தானருந்தி
நூலேணிமேலேறி விதமாகவுடையிலே
பார்த்ததுபோல் பார்த்துவிட்டார்முத்துச்செட்டி
பட்டிமாடிங்கேவந்து பயிரெல்லாம்மேயிதென்று
கவுண்டுகல்கொண்டுமல்லோ கனமாயடிக்கையிலே
காருவதுக்குத்தப்பி கன்றுக்குப்பட்டதங்கே
கன்றுக்குப்பட்டவுடன் கடுகவிழுந்ததுகாண்
அம்மாடியென்று அலறிவிழுந்ததங்கே

காமதேனுசாபமிடல்.

காருவுங்கண்டு கடுகவேயோடிவந்து
என்பிள்ளையைக்கொன்ற படியாலேயுந்தனுக்கு
பதினாறுவயதிலே பாலகனைக்கொல்லுமே

ஆனபடியினாலே நானுமேயுந்தனுக்கு
சாபங்கொடுக்கிறேன் தக்கதவமிருந்து
உந்தன் வயிற்றிலே உதிக்கிறமைந்தனவன்
பதினாறுவயதிலே பரலோகமுற்றிடுவான்
இப்படிக்குச்சாபங்கள் இட்டதுகாமதேனு
சாபத்தைகொடுத்தாவிட்டு கயிலங்கிரிசேர்ந்ததுகாண்
மாநாகன்செட்டியார் மன்னவனாரேதுசெய்தார்
பிள்ளையில்லையென்று பெருந்தபசுசெய்தார்கள்
மைந்தனில்லையென்று மகாதபசுசெய்தார்கள்
அப்போதுசொக்கலிங்கம் ஆண்டவனாரேதுசெய்தார்
மாநாகன்செட்டிதேவி மயிலணையாள்வர்னமாலை
வர்னமாலைமயிலணைக்குமைந்தன்வரந்தான்கொடுத்தார்

மணியரசன் மைந்தர்கள் காளிக்குப்பிரார்த்தனை கூறுவது.

பட்டணமாப்பட்டணமாம் மதுராபுரிபட்டணமாம்
மதுராபுரிபட்டணத்தில் மணியரசன்வாணியனும்
மணியரசன்வாணியற்கு மைந்தர்களிரண்டுபேராம்
ஒருதாரமங்கையற்கு மைந்தர்கள்மூன்றுபேராம்
இப்படிக்குத்தானிருக்க இன்பமுள்ளவாணியனும்
சாகுமதுநாளையிலே தன்மைந்தனைவருக்கு
உண்டானதிரவியத்தை யிரண்டாப்பகுத்தாளும்
மூவருக்கொருபாகம் இருவருக்கொருபாகம்
பாகங்கள்தான்பகுந்துக் கொடுத்தானும்வாணியனும்
அன்றையபொழுதிலே மறுதாரமைந்தனவன்
எண்ணெய்க்குடமெடுத்து இன்பமுடன்வாரானே
மதுரையறுகாதம் வகையாகச்சுத்திவந்தான்
எண்ணெய்விலையாகாமல்எங்குமவன்சுத்திவந்தான்
மதுரையைக்காக்குகின்ற வடபத்திரகாளிகோயில்
முற்பிறப்பில்பாண்டியர்கள் செய்தவினையாலே
இப்பிறப்பில்தாங்களவர் இருக்கும்படியாக
காளியம்மன்சந்நதியில் கதவடைத்தார்பாண்டியர்கள்

சாத்திக்கதவடைத்துத் தாள்பூட்டிமண்ணறைந்தார்
இந்தவொருகோவிலுக்குத் திருவிளக்கேற்றினுலே
காளியம்மன்கோவிலுக்குக் கனவிளக்குவைத்தவரை
ஆர்விளக்கேற்றினுலும் ஆக்கினைசெய்திடுவோம்
எவர்விளக்கேற்றினுலும் இரண்டுதுண்டாக்கிடுவோம்
இப்படிக்குச்சொல்லியவர் எங்கும்பறையறைந்தார்
இப்படிக்குஆக்கினைகள் செய்கின்றநாளையிலே
அந்நேரவேளையிலே அந்பானவர்ணியனும்
காளியம்மன்கோவில்முன்னே கடுகெனவோடிவந்து
எண்ணெயெல்லாம்விற்றுவந்தாலேந்திழைஉந்தனுக்கு
ஆயிரந்திருவிளக்கு அன்பாகவைப்பேனென்று
பிரார்த்தனைசெய்துகொண்டு போனுனேவாணியனும்
அப்படியேயெண்ணெய்யெல்லா மன்பாகவிற்றுவிட்டு
கோவிலின்றன்னருகே வாணியனும்வந்துநின்று
பூட்டிருந்தநற்கதவைப் புண்ணியனுந்தான்திறந்து
ஆருயிரந்திருவிளக்கை யன்பாகயேற்றிவைத்து
அரண்மனைபோய்விட்டான் அன்பானவாணியனும்
ஆயிரம்பாண்டியர்கள் அந்நேரவேளையிலே
உப்பரிகைமேலே உலாவிக்கொண்டுநிற்கையிலே
காளியுடசந்நதியில் திருவிளக்கைக்கண்டார்கள்
அப்போதுபாண்டியர்கள் அன்பாகவேதுசெய்தார்
சேவகரைத்தானழைத்துச் சேதியென்னசொல்லுகிருர்
உத்தரவைத்தான்கடந்து ஆர்வைத்தார்திருவிளக்கு
கண்டுபிடித்தவனைக் கடுகவேகொண்டுவாரும்
திருவிளக்குவைத்தவனைத் தேடிப்பிடித்துவாங்கள்
அப்போதுசேவகர்கள் ஆள்தேடிவாரார்கள்
கூடப்பிறந்ததொரு கொற்றவர்களண்ணமார்கள்
காட்டிக்கொடுத்தார்கள் கனமானவண்ணமார்கள்
அப்போதுசேவகர்கள் அங்ஙனமேயேதுசெய்வார்
கட்டிப்பிடித்துக் கடுகெனவேகொண்டுவந்தார்
பாண்டியன்முன்பாகப் படைவீரர்கொண்டுவந்தார்

திருவிளக்கிட்டவனைப் பாண்டியர்முன் பிடித்துவந்தது.

கட்டிளகட்டோடு கச்சேரிகொண்டுவந்தார்
ஆருயிரம்பாண்டியர்கள் அந்நேரமேதுமேசொன்னார்
எங்களுத்தரவின்றித் திருவிளக்குவைத்ததினுல்
காளிக்குமுன்பாகக் கண்டதுண்டஞ்செய்யுமென்ருர்
அப்படியேகாவலர்கள் அங்கனமேகொண்டுவந்தார்

வாணியனும் வாணிச்சியும் மரணமடைதல்.

காளிகோயில்முன்பாகக் கடுகெனவேகொண்டுவந்தார்
திருப்பாங்குன்றக்காடு தெய்வகாளிகோயில்முன்னே
அகடக்கல்சகடபாறை அச்சமில்லாதச்சகொம்பு
வெங்கலப்பாறைமுன்னேகொண்டுவந்தார்மன்னவனை
வீசினர்வாளாலே வெட்டினுரிரண்டுதுண்டாய்
அந்நேரவேளையிலே அவன்சிரசுதானெகிரி
காளிமடியிலே கடுகெனவேதான்விழுந்து
கதறியழுகிருனே கட்டழகனப்போது
உபகாரஞ்செய்தேனம்மா அபகாரம்நேர்ந்ததுவே
அப்போதுகாளியம்மா ளஞ்சாதேமகனேயென்று
ஆதரவுசொல்லியல்லோ அடவாகப்பேசினது
ஒருவன்பழிக்குநாளை உலகம்பழிவாங்கிவைப்பேன்
மைந்தன்பழிக்குநாளை மதுரை பழிவாங்கிவைப்பேன்
என்றுமேசொல்லி யின்பமுடன்காளியவள்
அப்போதுதானிறந்த வாணியன்தன்தேவி
வாணியன்தேவியவள் மயிலணையாளோடிவந்து
மோதியலறந்துகொண்டு மொய்குழலாள்தானிறந்தாள்
சோலைமலருடைய சொக்கரதுவறிந்து
வாணியன்தன்னுயிரும் வாணிச்சிதன்னுயிரும்
தங்கச்சிமிழியிலே தானடைத்தார்சொக்கலிங்கம்
சொக்கர்முகம்நோக்கிக் காளியம்மனே துசொல்வாள்
இப்பிறப்புநீக்கி மறுபிறப்புயாண்பிறந்து

செட்டியந்தமன்னவற்கு மனையாட்டியாகவந்து
விளக்கவித்தபாண்டியரை வெட்டித்தலைசாய்த்து
மணிக்குடலைத்தான்பிடிங்கிவைத்திடுவேன்கோவிலுக்கு
என்றுமவளுரைத்து மிருந்ததேகாளியரும்
சோலைமலருடைய சொக்கராதுவறிந்து
காளியின்தன்னுயிருங்கடுகெனவேதான்பிடித்து
தங்கச்சிமிழ்தனிலே தானடைத்தார்சொக்கலிங்கம்
வாளியன்தன்னுயிரை வலிமையாய்த்தான்பிடித்து

கோவலன் கர்ணகி மாதகி இம்மூவர்கள் உற்பத்தி.

வர்னமாலைகெர்ப்பமதில் மைந்தனுயுண்டுபெண்ணுர்
வர்னமாலைதன்வயிற்றில் மைந்தனவர்தான்பிறந்தார்
கோவலன்செட்டிஎன்று கொடுத்தாரேபேருமப்போ
ஐயனுர்சொக்கரைப்போல் ஆணழகுமன்னவனும்
தேமல்பிறையழகன் தெள்ளுமணிவாசகனுர்
உருமாலைக்கட்டழக னுத்தமனுர்கோவலனும்
அள்ளித்தெளித்ததுபோல் அழகுசிறுதேமல்

மாங்காய்முடியழகர் மாதளம்புமேனியனும்
செக்கர்சிவந்தழகன் செங்கிளைத்தண்டழகன்
ஐயனுர்சொக்கரைப்போல் ஆணழகுமன்னவர்தான்
சோமன்கட்டிவீதிவந்தால்சொக்கரென்பாரெல்லவரும்
மடிகட்டிவீதிவந்தால் மாமதுரைச்சொக்கரென்பார்
பார்த்தால்முதலியென்பார் பார்ப்பாரச்சாதியென்பார்
இப்படிக்கோவலரும் வளர்ந்துவருநாளையிலே
அப்போதுபாண்டியர்க ளன்பாகவேதுசெய்வார்
மைந்தன்வரம்வேண்டுமென்று மலைமேல்தவமிருந்தார்
பிள்ளைவரம்வேண்டுமென்று பெருந்தவசுதானிருந்தார்
இராசகன்னிகோவிலிங்கி நலமாகத்தானிருந்தாள்
அப்போதுசொக்கலிங்கம் ஆண்டவனுமோடிவந்து
காளியுடதன் னுயிரைக் கடுகெனவேதான்பிடித்து
எலுமிச்சங்கனியாக்கி ஈந்தாராஞ்சொக்கலிங்கம்
இராஜகன்னிகோவிலிங்கி நலமாகத்தவமிருந்தாள்
பட்சணஞ்செய்தாளாம் பாங்கானகோவிலிங்கி
அதுவேகெர்ப்பந்தானுச்சு அரிவையந்தமாதுவுக்கு
பத்துமாதஞ்சென்று பைங்கொடியாள்மாதுவுக்கு
வலதுகால்செஞ்சிலம்பு இடதுகால்செப்போடு
கழுத்திலேபூமாலை கன்னவழியாக
கன்னவழியாகக் கட்டழகிபெண்பிறந்தாள்
அப்போதுபாண்டியர்கள் சோதிடரைத்தானழைத்து
நாழிகைபொருத்தமது நலமாகப்பாருமென்றார்
அப்போதுசோதிடர்கள் அன்பாகவேதுசொல்வார்
மாலையிட்டுத்தான்பிறந்தால் மதுரைதனக்காகாது
கொடியிட்டுப்பெண்பிறந்தால் கொடிமதுரைக்காகாது
வாய்விட்டழுதாலே வடமதுரைக்காகாது
தேம்பியழுதாலே தென்மதுரைவெந்துவிடும்
பெட்டியிலேதானடக்கி வைகையிலேதள்ளுமென்பார்
அப்போதுகோவிலிங்கி அழுதுபுலம்பலுற்றுள்
குழந்தையைத்தான்பார்த்துக் கோவிலிங்கிபுலம்புகிருள்

தங்கத்தாம்பாளத்தில் தையலரைத்தான்வளர்த்தி
பாலேக்கறந்து பக்கத்தில்தானும்வைத்தாள்
தாதிமார்கையில் தான்கொடுத்தாள்குழந்தைதன்னை
தாதியர்கள்தானெடுத்துத் தையலர்களோடிவந்து
பாண்டியர்முன்பாகப் பக்குவமாய்வைத்தார்கள்
அப்போது பாண்டியர்கள் அந்தக்குழந்தைதன்னை
பாண்டியர்கள்தான்பார்த்துப் பாங்காகத்தானெடுத்து
தவமா தவமிருந்து தையலைப்பெற்றெடுத்தோம்
பெற்றமகள்தன்னைப் பெட்டியிலேவையுமென்றார்
பேழையானபெட்டியில் பிறந்தபெண்ணைவைத்தார்கள்
எட்டுக்கட்டுக்கட்டி இயலாகச்சீலுமிட்டார்
வைகையில்தள்ளுமென்று வகையுடனேசொன்னார்கள்
அந்நேரவேளையிலே ஆரணங்கைக்கொண்டுவந்து
வைகையருகினிலே மன்னவர்கள்கொண்டுவந்தார்
ஓடுகிறவெள்ளத்திலே உத்தமியைத்தள்ளிவிட்டார்
வைகைபெருகியே வாராளேகர்ணகியாள்
ஒருமீன்சுழண்டுவர ஓலேவண்டுகீதம்பாட
கயல்மீன்கரைபுரண்டு காவிரிப்பூவருகுதங்கே
அஞ்சுதலைநாகம் அலைந்துகொண்டுவருகுதங்கே
பேழையைக்கண்டு பெட்டெனவேயோடிவந்து
பெட்டியின்மேலேறி வருகுதுகாண் நாகமது
காவிரிப்பூம்பட்டணத்தின் கரையிலொதுங்குதுகாண்
அப்போ-குவ்வாகுவ்வாவென்றுகுழந்தையழுகுதுகாண்
பெட்டியைத்தான்திறந்து பொட்டெனவே நாகமது
குழந்தையைத்தான்பார்த்துக் குணமுள்ள நாகமது
கோடிசூரியன்போலக் குழந்தையைக்கண்டது
நாகரத்தினங்கக்கி நலமாகவக்கையிலே
எங்கும்பொருந்தவில்லை இன்பமுடன்குழந்தைக்கு
வலதுகால்சிலம்பில் வைத்ததுகாண்ரத்தினத்தை
அதிலேபொருந்திற்று அன்பானரத்தினமும்
நாகரத்னச்சிலம்பென்று நலமாகப்பெயர்கொடுத்து

ஐந்துதலைநாகமது அந்தக்குழந்தைதனை
காளியென்றுதானிருந்துகனமாகவேதுசெய்யும்
கன்னவழியாய்ப்பிறந்த கட்டழகிகுழந்தையென்று
கர்ணகியாளென்றுசொல்லிக்கனமாய்ப்பெயர்கொடுத்து
பெட்டியைக்கட்டியல்லோ வைகையிலேதள்ளிவிட்டு
வைகைபெருகி வரண்டமணல்திரண்டோட
காவிரிப்பூம்பட்டணமாம் கரையிலேதள்ளியது
மைத்துனனுமைத்துனன்வா துகப்பலோட்டிவந்தார்
அத்தானுமைத்துனனு மழகுகப்பலோட்டிவந்தார்
பெட்டிவருகிறதைக் கண்டாரேமாநாகன்
கட்டுமரம்கட்டி கடுகெனவேதானேறி
பெட்டியைத்தானெடுத்துப் பிரியமுடனேவந்து
சித்ரமுகச்சாவடியில் சீராககொண்டுவந்தார்
பெட்டியுமென்னதென்றார் புண்யனார்மாச்சோட்டான்
அப்படியேநல்லதென்று அன்பாகக்கொண்டுவந்து
பெட்டியைத்திறந்தார்கள் புண்யனாரந்நேரம்
சூரியனைப்போலத் துலங்குதுகுழந்தையது
அந்தக்குழந்தையை அன்பாகக்கொண்டுவந்து
வைத்துவளர்த்தாரே வகையுடனேமாநாகன்
இப்படித்தானிருக்க இன்பமுடன்மாநாகன்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
திருக்கடையூர்பட்டணத்தில் தேன்மொழிவசந்தமாலை
பிள்ளையில்லையென்றுபெருந்தபசுதானிருந்தாள்
அப்போதுசொக்கலிங்கம் ஆளுடையவனாரேதுசெய்தார்
எலுமிச்சங்கனியாக்கி யின்பமுடன்தான்கொடுத்தார்
பட்சணஞ்செய்தாளே பைங்கொடிவசந்தமாலை
அதுவேகுளியாக ஆரணங்குமங்கையற்கு
பத்துமாதஞ்சென்று பைங்கொடியாள்பெற்றெடுத்தாள்
அழகுதுலங்குது ஆனந்தம்கொஞ்சுது
வடிவுதுலங்குது வடிவழகுகொஞ்சுதுபார்
அழகில்மிகுந்தவள்தான் ஆரணங்குமங்கையவள்

சோதிடரைத்தானழைத்துச் சாதகங்குறியுமென்றுள்
அப்போதுசோதிடர்கள்சாத்திரத்தைத்தானுரைப்பார்
சாத்திரத்தைத்தான்பார்த்துசாதகங்கள்தானுரைப்பார்
அஞ்சுவயதிலே அரியசிலம்பெடுத்து
நாட்டியங்கள்கற்று நலமுடனேமாதகியும்
யானையின்மேல்கம்பம்நட்டு ஆடுவாள்மாதகியாள்
தித்தியென்னமத்தளங்கள் திமிதியெனக்காற்சிலம்பு
ஒத்திவைப்பாளோரடியை யோலமிடும்பொற்சிலம்பு
பத்தாம்பிராயத்திலே பைங்கொடியாள்மாதகியாள்
ஆணலழகன் அழகுடையவணிகன்தன்னை
செப்புச்சிலையழகன் செங்கீரைத்தண்டழகன்
அப்பெரியகொற்றவனை அழைத்துவருவாள்காண்
பனிரண்டுதன்வருஷம் பைங்கொடியாள்மாண்டிடுவாள்
பதிமூன்றும்பிராயம் பைங்கொடியாள்மாண்டிடுவாள்
இப்படிக்குஜாதக மின்பமுடன்தானுரைத்தார்
காவிரிப்பூம்பட்டணத்தில்கனதுரையாம்மன்னவர்கள்
மாநகன்செட்டியும் மாச்சோட்டான்செட்டியும்
பெரியதனவர்த்தகர்கள் புண்ணியர்களிருவருமாய்
ஆயிரந்தலைக்கட்டு அதிகாரிமன்னவர்கள்
மாநகன்செட்டிவீட்டில் மயிலனையாள்பெண்ணரசி
நாளொருமேனியாக நட்சத்திரம்போல்வளர்ந்தாள்
பொழுதொருமேனியாப் பெண்கொடிதான்வளர்ந்தாள்
மாணிக்கக்கல்லிழைத்து மயிலனையைதான்வளர்த்தாள்
நித்தமொருபட்டுடுத்தி நேரமொருபூச்சூட்டி
மாணிக்கம்போலே மயிலனையைவளர்த்தார்கள்

கோவலருக்கும் கர்ணகிக்கும் தாம்பூலம்மாற்றி விவாகஞ்செய்தல்.

காவிரிப்பூம்பட்டணத்தில் கனத்தநல்லவர்த்தகர்கள்.
அன்றையப்போதிலே அடைவாகமூத்துச்செட்டி

மாணாகன்வீட்டுக்கு வந்துநின்றார்மூத்துசெட்டி
அப்போதுபெண்குழந்தை அருகாகவருகையிலே
யாருடையபெண்ணென்று அன்பாகக்கேட்கையிலே
என்னுடையபெண்ணென்றுஎடுத்துரைத்தார்மாணாகன்
என்னுடையமைந்தனுக்கு இன்பமுடன்தாரீரோ
அப்படியேதாரோமென்று அன்பாகவாக்களித்தார்
பரியங்களென்னவென்று பண்பாகக்கேட்கலுற்றார்
ஆயிரம்பொன்கொடுத்தா லரிவையரை நான்தருவேன்
அப்படியேசம்மதித்தார் அன்பானமூத்துசெட்டி
ஆயிரம்பொன்பரியம் அப்போதுதான்கொடுத்தார்
இன்றைக்குப்பரியம் இயலாகச்செய்யுமென்றார்
இன்றெட்டாநாளையிலே இசைந்தமுகூர்த்தமென்று
நாளிட்டுக்கொண்டாரே நலமுடனேமூத்துசெட்டி
அவர்போனமற்றுநா ளப்செட்டிவந்தாராம்
அன்னமயில்போல அரிவையரைக்கண்டாராம்
ஆரிதுகுழந்தையென்று அன்பாகக்கேட்டாராம்
என்குழந்தையென்று யெடுத்துரைத்தார்மாணாகன்
என்னுடையமைந்தனுக்கு உன்பெண்ணைத்தாரீரோ
அப்படிக்குத்தாரேனென்று சம்மதித்தார்மாணாகன்
பரியமென்னகொடுப்பீர் பண்பாகச்சொல்லுமென்றார்
ஆயிரம்பொன்பரியமென் றன்பாகத்தான்கொடுத்தார்
பரியங்கொடுத்துவிட்டுப் பண்பாகப்போய்நடந்தார்
அவர்போனமற்றுநாள் லிங்குசெட்டிவந்தாராம்
கர்ணகியைத்தான்பார்தது கன்னியிவளாரோவென்றார்
எனதுகுழந்தையென்று எடுத்துரைத்தார்மாணாகன்
என்னுடையமைந்தனுக்குஉன்பெண்ணைத்தாரீரோ
அப்படி நான்தாரேன் பரியமென்னவென்றுசொன்னார்
ஆயிரம்பொன்பரியமென் றன்பாகத்தான்கொடுத்தார்
நாளிட்டுக்கொண்டுமவர் நலமுடனேபோய்நடந்தார்
மாணிக்கச்செட்டியவர் மன்னவனுமங்குவந்தார்
இவர்-அரண்மனைக்குள்ளாக அன்பாகவந்தாரே

மாணிக்கச்சிறிய மயிலணையைக்கண்டாரே
இதுயாருடையபெண்ணென்று அன்பாகக்கேட்டாரே
என்னுடையபெண்ணென் றெடுத்துரைத்தார்மாநாகன்
என்னுடையபிள்ளைக்கு ஏந்திழையைத்தாரீரோ
அப்படியேதாரேனென்றார் ஆணழகன்மாநாகன்
என்னபரிய மெடுத்துரையுமென் றுசொன்னார்
ஈராயிரம்கொடுத்தா லேந்திழையைத்தாரோமென்றார்
அப்படியேதான்கொடுத்தார் அழகானசெட்டியவர்
அவர்போனமற்றநாள் அநேகம்பேர்வந்தார்கள்
இப்படியாக இவரிருக்கும்நாளையிலே
அன்றையவேளையிலே ஆனதொரு முத்துசெட்டி
தாம்பூலங்கொண்டுமெள்ள தனஞ்சயருமோடிவந்தார்
மாச்சோட்டான்செட்டியண்டை வாரார்முத்துசெட்டி
தாம்பூலங்கொண்டு தனஞ்சயருப்முன்னேவைத்தார்
கலியாணமென்று கட்டழகன்கூறினார்
ஆருக்குகலியாணமென்று அன்பாகக்கேட்கலுற்றார்
என்மைந்தனுக்கென்று அடைவுடனேதானுரைத்தார்
ஆருடையபெண்ணென் றடைவுடனேதானுரைத்தார்
மாநாகன்பெண்ணென்று வகையுடனேதானுரைத்தார்
மாச்சோட்டான்செட்டியார்க்கு கோபம்பெருகுது
கோபம்பெருகுது கொள்ளிகொண்டுவீசுது
என்னுடையபெண்ணையவன் எப்படித்தான்கொடுப்பார்
உன்னுடையபெண்ணென்று எப்படித்தான்தெரியும்
மாச்சோட்டான்செட்டியும் மன்னன்முத்துசெட்டியும்
இருவருமொன்றாக வந்தார்கள்முன்பாக
மாநாகன்முன்னேவந்து மன்னவர்களேதுசொல்வார்
என்னுடபெண்ணை யெப்படிக்குநீர்கொடுப்பீர்
எந்தனுடபிள்ளைக்கென்று நேமகஞ்செய்திருக்க
ஒருவருக்குநீர்கொடுக்க நீதியுண்டோமன்னவரே
ஒருத்தர்க்கொருத்த ருகந்தசண்டைசெய்தார்கள்
பஞ்சாயத்தார்முன்பாகப் பாங்காகவிழுந்தார்கள்

திருவுளச்சீட்டு சிறப்புடனேபோடுமென்றார்
ஆருக்கமைப்போ அவர்களுக்காகுமென்றார்
அப்போதுபஞ்சாயத்தார் அனைவோருங்கூடினார்
திருவுளச்சீட்டு சிறப்போடுபோடுமென்றார்
கோவிலர்பேர்வழிக்கு வந்ததுசீட்டதுவும்
அவனுடையபாரியென்று அனைவோருந்தாமுரைத்தார்
அப்படியேசம்மதித்தார் அன்பாகச்செட்டிமார்கள்
அப்போகலியாணம் அன்பாகச்செய்யவென்று
பந்தலலங்கரித்தார் பாங்காகவப்போது
முத்தாலேகால் நிறுத்தி முக்காதம்பந்தலிட்டார்
பவளத்தால்கால்நிறுத்திப் பதிங்காதம்பந்தலிட்டார்
வெற்றிலையாலேயவர் விஸ்தாரம்பந்தலிட்டார்
எங்குமலங்கரித்தா ரெத்திசையு நீர்தெளித்தார்
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்குச்சுவிட்டார்
பந்தலின்முன்பாக யிருவரையுங்கொண்டுவந்தார்
சீக்குகழித்தார்கள் சீராயிருவருக்கும்
பெண்ணையும்மாப்பிள்ளையும் அழகாயலங்கரித்து
மணவரையின்மேலாக யிருவரையுந்தானமர்த்தி
தாலிதரித்தாரே தனஞ்செயனார்கோவிலரும்
அம்மிமிதித்தார்கள் அருந்ததிகண்டார்கள்
சாலுங்கரகமுஞ் சந்திரனைத்தொழுதேதன்
மாலைதரிக்கையிலே வாய்விட்டுத்தானழுதாள்
மாங்கனியைத்தான்கொடுத்துமாலையிட்டார்கோவலனார்
மாலைகொண்டுவந்ததொரு மடத்தாண்டிபோகவில்லை
கூறைகொண்டுவந்ததொரு கொற்றவனும்போகவில்லை
சாலுகொண்டுவந்ததொரு சாலியன்போகவில்லை
உற்றார்க்குசோறிட்டலை உறன்முறைக்குபாக்கிடலை
பந்திவழங்கியே வந்தஜனம்போகவில்லை
இப்படிக்குத்தானிருக்க யின்பமுடனந்நேரம்
வடிவார்வடிவழகன் மன்னர்கோவலன்தோழன்
சிலைபோல்வடிவழகன் செட்டிமகனேதுசொல்வான்

கலியாணப்பந்தலிலே கச்சேரிவேண்டுமென்றார்
மாலையிடும்பந்தலிலே சதுர்வைக்கவேண்டுமென்றான்
ஆரைக்கொண்டுவைப்போமென் றங்குள்ளவர்த்தகர்கள்

மாதகி சதுருக்குவந்து கோவலரை அழைத்துப்போகுதல்.

திருக்கடையூர்பட்டணமாம் தெய்வரம்பைமாதகியாள்
அவளையழைத்துவந்து ஆடல்வைக்கவேண்டுமென்றார்
அஞ்சாம்பிராயத்தில் அழகுசிலம்பங்கற்பித்து
அழகுசிலம்பங்கற்பித்து ஆடுவாள்மாதகியாள்
என்றுமேயங்கொருவ ரெடுத்துரைத்தாரப்போது
அப்படியேயாமென்று அனைவோருந்தாமுரைத்தார்
அப்போதுமாச்சோட்டா னழகுதுரைமன்னவனும்
எண்ணுதுமெண்ணுகிறார் எண்ணிமனங்குண்ணுகிறார்
சாதகமும்பொய்யாது தலைவிதியுந்தப்பாது
பன்னிரண்டுபிராயத்தில் பைங்கொடியாள்மாதகியாள்
மாதகியண்டையில் மன்னவன்போவானென்று
சாதகமுரைத்தது சரியாகஆச்சுது
எப்படிநாமவளை இங்குவந்துஆட்டிவைப்போம்
என்றுமேசொல்லி வருத்தமுற்றான்மாச்சோட்டான்
அப்போதுகோவலனு ரணழகனேதுசொல்வார்
மங்கையிளங்கொடியாள் மாதகியாள்வந்தாலே
வந்தாலேயல்லது வல்லுயிர்போக்கிடுவேன்
அப்படியேயழையுமென்று ஆணழகர்சொன்னாரே
சேமக்குருத்தோலை சிறப்பாகத்தான்வாரி
ஈழப்பனையோலை இருபக்கந்தான்வாரி
தாழப்பனையோலை தலைப்பக்கங்காம்பரிந்து
கணபதிமுன்பாகக் காப்பிட்டுக்கொண்டாரே
முத்துப்பதித்ததுபோல் மூன்றுவரிதானெழுதி
பவளம்பதித்ததுபோல் பத்துவரிதானெழுதி
திருக்கடையூர்பட்டணம் தேன்மொழியாள்மாதகிக்கு
வக்கணையுமொப்பனையும் வைத்துஎழுதுகிறான்

கலியாணப்பந்தலிலே கச்சேரிவைக்கவேண்டும்
ஓலைகண்ட நாழிகைக்கு வரவேண்டும்மங்கையரே
என்றெழுதினு ரின்பமுள்ளமன்னவர்கள்
ஓலையைத்தான்படித்து செந்திரிக்கம்போட்டார்கள்
காலாளுஞ்சேவகரைக் கட்டழகர் தானழைத்து
சுருளோலைதானெடுத்து சேவகர்கைகொடுத்தார்
ஓலையைத்தான்வாங்கி யோடினருத்தமர்கள்
பட்டணமாம்பட்டணமாம் திருக்கடையூர்பட்டணமாம்
வசந்தமாலைமுன்பாக வந்துநின்றுமன்னவர்கள்
ஓலைச்சுருளையந்த வசந்தமாலைகைகொடுத்தார்
அதிலிருந்தமர்மமெல்லாம் அரிந்தாளேவசந்தமாலை
இன்பங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
பூரித்திருதோளும் பொன்னுபரணமின்ன
அடியென்மகளே அரிவையரேமாதகியே
வாருமெனத்தானழைத்துமங்கையவளேதுசொல்வாள்
கஞ்சிகொண்டுகளைபறிக்குங் காவிரிப்பூம்பட்டணத்தில்
சோறுகொண்டுமதவடைக்குஞ் சொர்ணகிரிநன்னுடு
காவிரிப்பூம்பட்டணத்தில் கனதுரையர்வர்த்தகர்கள்
மாளுகன்செட்டியார் மாச்சோட்டான்செட்டியார்
வரவேண்டுமென்றுசொல்லி வரவிட்டாருத்தாங்கள்
இட்சணமேபோய்வாரு மேந்திழையேமாதகியே
அப்படியேநல்லதென்று ளாரணங்குமாதகியாள்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
எற்றகச்சைஎழுமுழம் எட்டுசுத்தாய்பிகுவெடுத்தாள்
தட்டிவரிந்துகட்டி தானணிந்தாள்பொற்சரிகை
இழையாயிரம்பொன்பெற்ற இந்திரவர்ணப்பட்டாடை
உள்ளாடைபாவாடை மேலாடைப்பட்டாடை
குடுத்தினிரவிக்கை குசும்பாவும்பொற்சீலை
பிகுவெடுத்தவொட்டியாணம் மெல்லியிளங்கொடியாள்
ஆடைகளாபரண மடங்கலுந் தானணிந்து
ஆனையின்மேல்கம்பமது அடைவாகத்தானிருத்தி

:

நட்டுவனைத்தானழைத்தாள் நலமானமாதகியாள்
மத்தளமுஞ்சுத்திகளும் வகையாகத்தானெடுத்து
தாயாருகில்வந்து தான்பணிந்துதெண்டனிட்டு
முக்காலடிவணங்கி மூவிருகால்தெண்டனிட்டு
போய்வரஎந்தனுக்குப் புகழ்ந்துவிடைதாருமென்ருள்
அப்போதுவசந்தமாலை அன்னையற்கேதுரைத்தாள்
இளநீரினூரவைத்த யின்பக்களிப்பாக்கும்
தங்கச்சிமிளில் தான்கொடுத்தாள்மையுமொன்று
மாதுஇளங்கொடியாள் மாதகியேதுசொல்வாள்
என்னமாய்நான்கொடுப்பே னேந்திழையேதாயாரே
வெற்றிலையில்மைதடவி மெல்லியரே நீகொடுத்தால்
தொடர்ந்துவருவார்காண் தோகையரேயுன்பிறகே
என்றுசொல்லிவாழ்த்தி யின்பமுடனனுப்பிவிட்டாள்
ஏறினளானையின்மே லேந்திழையாள்மாதகியாள்
அப்போதுதாதிமார் அடைவாகச்சூழ்ந்துவர
ஆனையைத்தான்துரத்தி யன்பாகவாராளே
காவிரிப்பூம்பட்டணத்தில் கரைதுறையும்வாராளே
கலியாணப்பந்தலிலே கட்டழகிவந்துநின்ருள்
அருகிருக்கும்வர்த்தகரை அனைவரையுந்தான்பார்த்து
கைகூப்பித்தெண்டனிட்டுக் கட்டழகிகும்பிட்டாள்
மாநாகஞ்செட்டி மாச்சேட்டடாரேடிவந்து
உனக்கென்னதான்வேண்டுமென்று ஏந்திழையேகேளு
என்கூடப்பிறந்ததொரு பொன்னுருவிமாலைதன்னை
கழட்டியெறிவேன்காண் கட்டழகர்வர்த்தகர்மேல்
ஆர்மீதுவிழுந்தாலு மழைத்துக்கொண்டுபோவேனே
அதற்குசம்மதிதானென்று தாம்பூலந்தாருமென்ருர்
சம்மதிப்பட்டார்கள் தாம்பூலந்தந்தார்கள்
சிலைபோல்வடிவழகர் செட்டிபிள்ளைகோவலனை
அந்தப்புறந்தனிலே ஆணழகனையொளித்து
தாயார்வர்னமாலைதனை மைந்தனுக்குக்காவல்வைத்தார்
வெளியிலனுப்பாதே மெல்லியிளங்கொடியே

வாசலிலிருந்துகொண்டு மன்னவரைக்காருமென்றார்
அப்போதுசபையிலே அனைவோரும்வந்து நின்று
ஆடுமெனமன்னவர்களனைவோரும்விடைகொடுத்தார்
தித்தியெனமத்தளமும் திமிர்தமென்றாள்காற்சிலம்பை
ஒத்திவைத்தாளோரடியை ஓலமிட்டாள்காற்சிலம்பை
மத்தளமும்மணிக்குரலும் வர்த்தகர்கேட்டார்கள்
சங்கீதவாத்தியத்தைச் சபையோர்கள்கேட்டார்கள்
சந்தோஷமாகவே சகலமானவர்த்தகர்கள்
ஆடையுமாபரணம் அன்பாகத்தான்கொடுத்தார்
வர்த்தகரைத்தான்பார்த்து மயிலனைவதுசொல்வாள்
என்கூடப்பிறந்ததொரு பொன்னுருவிமாலைதன்னை
கழட்டியெறிவேனான் கட்டழகர்வர்த்தகர்மேல்
என்றுசொல்லிமாதகியாள் இயலானமாலைதனை
கையிலெடுத்துக்கொண்டு கட்டழகியேதுசொல்வாள்
மாலையைத்தான்பார்த்து மயிலனையாளேதுசொல்வாள்
எனக்கேற்றநாயகனா ரேந்திழையே நீபார்த்து
மனதுக்கிசைந்ததொரு மன்னவராய்த்தான்பார்த்து
அவர்கழுத்திலேமாலை மனமாகவிழவென்று
மாலைகழட்டியே மயிலனையாளெறியலுற்றாள்
அப்போதுபொன்மாலை அங்ஙனமேயேதுசெய்யும்
மாதகிக்கேற்றதொரு மணவாளர்தன்கழுத்தில்
வந்துவிழுகவென்று மன்னவரைத்தேடுகுது
அந்தச்சமயத்தில் அழகானகோவலரும்
மாளிகையிற்பூட்டிருக்கும் மன்னவனார்கோவலரும்
மத்தளமும்மணிக்குரலும் மன்னவனார்கேள்விப்பட்டு
பெண்குரலுஞ்சத்தமும் புண்ணியருங்கேள்விப்பட்டு
கூத்துப்பார்க்கலாமென்றுகொற்றவருந்தானெழுந்தார்
தாயாரந்தவர்ணமாலை தையலருந்தான்தடுத்தாள்
கதவைத்திறந்துவிடு கட்டழகிமாதாவே
இல்லாமற்போனாலே என்னுயிரைமாய்த்திடுவேன்
அப்போதுகதவைத் திறந்துவிட்டாள்கட்டழகி

அப்போதுகோவலனும் ஆணழகன்தானெழுந்து
சேலத்துருமாலே செகதாடும்பொன்சரிகை
காங்கிவுருமாலே கள்ளர்கட்டுமுண்டாசு
ஒருபொன்னெருமுழமாம் ஒற்றைக்கல்பிசோமன்
திருநெல்வேலிசோமன் சேர்த்திருக்கிக்கட்டினரே
தங்கமிதியடியாம் தனிக்குழல்ரத்தினமாம்
முத்துமெருவடியாம் மூகக்குழல்ரத்தினமாம்
மூத்துமெருவடியை தொட்டுநடந்துவாரார்
ஆலமரப்பிள்ளையார் கோவலன்டைதேடிவாரார்
தங்கநாற்காலிமேல் தனஞ்செயனுருட்கார்ந்து
தாம்பூலம்போட்டுத் தனஞ்செயனாங்கிருந்தார்
அவரழகைப்பார்த்தால் அட்டாளுஞ்சொக்கரென்பார்
அட்டாளுஞ்சொக்கலிங்கம் ஐயரென்றுசொல்லுவாரே
மதுரைவாழ்சொக்கலிங்கம் மகாதேவரென்பார்கள்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
அப்போதுமாதகியா ளரிவையருந்தான்பார்த்து
பொன்னுருவிமாலைதனைப் பொற்கொடியும்விட்டெறிய
ஆர்கழுத்தில்வீழாமல் அட்சணமேவருகுதுபார்
கோவலனைத்தேடி வருகுதுபொன்மாலை
அவரையறியாமல் அவர்கழுத்தில்விழுந்ததப்போ
அப்போதுமாதகியா ளாரணங்குதான்பார்த்து
ஆனையைவிட்டிறங்கி ஆரணங்குமாதகியாள்
மாலையைத்தேடிக்கொண்டு வாராளேமாதகியாள்
கோவலனண்டையிலே கொம்பனையாள்வந்துநின்று
வர்த்தகனைப்பார்த்து மயிலனையாளென்னசொல்வாள்
எனக்கென்னதியாகம்நீ ரின்பமுடன்தாருமென்றாள்
அளவற்றசொர்னமதை ஆணழகன்தான்கொடுத்தார்
மாதகிவாங்கிக்கொண்டு மயிலனையாளேதுசொல்வாள்
பொன்னுருவிமாலைதனைப் புண்ணியரேதாருமென்றாள்
ஏதடிபெண்ணேயென்று இன்பமுடன்கேட்கலுற்றார்
உன்கழுத்திலிருக்கிறது கட்டழகாதாருமென்றாள்

பாராதுபோலேயவர் பார்த்துவிட்டார்கோவலரும்
வாங்கிக்கொண்டுபோடி மயிலீனயேநான்தாரேன்
கழட்டிக்கொடுப்போமென்று கட்டழகர்கைபோட்டார்
கழட்டமுடிகூடவில்லை கட்டழகர்வர்த்தகர்க்கு
இரும்புவாள்கொண்டு இன்பமாயறுக்கச்சொன்னூர்
வாளும்மழுங்குது மாலைகழளவில்லை
என்செய்வேன்மாதகியே ஏந்திழைபெண்கொடியே
மாலைகொடாமல் மன்னவரே நீபோனால்
தாம்பூலந்தாரேன் தனஞ்செயரேபோட்டுக்கொள்ளும்
அப்படியேதாருமென்றார் ஆணழகர்கோவலனுர்
வெற்றிலையில்மைதடவி விதமாகச்சுருள்கொடுத்தாள்
தாம்பூலமருந்தினபின் தனஞ்சயனுர்கோவலற்கு
மருந்துமயக்க மதிமயக்கமாகுதுகாண்
உண்டைமருந்தாலே உளறிததவிக்கிறூரே
மருந்துமயக்கத்திலே மதிமயங்கியென்னசொல்வார்
ஆசைதந்தமாதகியே அரிவையரேயுனைப்பிரியேன்
சுகந்தந்தமாதகியே தோகையரேயுனைப்பிரியேன்
நான்கூடவாரேனென்று நலமாகத்தானெழுந்தார்
மானகச்செட்டியும் மாச்சோட்டானிருவருமாய்
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தாரிருவருமாய்
அப்பாமகனேயென்று அழுதுகொண்டுவருகிறூர்கள்
எங்களைவிட்டுமெல்லோ எவ்விடத்தில்நீபோராய்
மாலையிட்டதேவி மயிலனையாள்தானிருக்க
கூரையிட்டதேவியுந்தன் கொம்பனையாளிங்கிருக்க
வாருமென்றுசொல்லி வழிமறித்துத்தானிருந்தார்
அப்போதுகோவலனு ராணழகரேதுசெய்தார்
தாயேதுதங்கையேது பெண்சாதிதானேது
எனக்காசைதந்தமாதகியா ளரிவையருமிங்கிருக்க
சுகந்தந்தமாதகியாள் சுந்தரியாளிங்கிருக்க
இவளைவிடப்பெண்சாதி யெந்தனுக்காருமில்லை
அவளுடன்செல்வேனென்ன ஆணழகன்சொல்லுகிறுன்

அப்படியேபோம்போ தனைவோரும்பின்னடந்தார்
அப்போதுகோவலனார் ஆனையின்மேலேறி
மாதகியும்கோவலரும் வாரார்கள் திருக்கடையூர்
திருக்கடையூர்தெருவில்வந்து நின்றார்களிருவருமாய்
ஆனையைவிட்டுமேவ ரன்பாகத்தானிரங்கி
அமரகண்டசர்கோவ லன்பாகவாரார்கள்
பொலிக்குடமுன்பாக பொற்கொடியும்வந்துநின்றாள்
பொலிக்குடமேந்திப் பொற்கொடியுமேதுசொல்வாள்
உன்னைவிட்டுநான்பிரியே னுத்தமனேஎன் றுரைத்தாள்
முந்தாணிபோட்டுமந்த மெல்லியருந்தாண்டினாளே
உன்னைவிட்டுவேறேயொரு மன்னவரைநான்பாரேன்
எந்தனுக்குப்பிரமாணம் இன்பமுடன்செய்யுமென்றாள்
அப்போதுகோவலனா ராணழகரேதுசொல்வார்
உன்னைவிட்டுநான்பிரியேன் உத்தமியென் றுரைத்தார்
தாயும்தந்தையும்நீயே சகலமும்நீயேயென்றார்
உன்னைவிடனானும் ஒருவர்முகம்பாரேனென்றார்
அந்தப்புரந்தேடி அரிவையவள்வாராளே
அரண்மனைக்குள்ளாக ஆணழகன்வந்துநின்றான்
தோமுத்துரைகட்டிலந்த சுந்தரியாளதான்போட்டாள்
சகசலப்பாயென்று தையலருந்தான்போட்டாள்
அதின்மேலுட்காருமென்றாள் ஆரணங்குமாதகியாள்
அப்படியேஉட்கார்ந்தார் ஆணழகர்கோவலரும்
கட்டிலின்காலொடிந்து கட்டழகர்தான்விழுந்தார்
என்னடிமாதகியே இப்படிக்குநான்விழுந்தேன்
ஆசைதந்தமாதகியா ளரிவையருமோடிவந்து
என்னதான்செய்வேன்கா ணென்னுடையபுண்ணியரே
இந்தநல்லகட்டில்விட எந்தனுக்குவேறேயில்லை
உன்னாலேயெந்தனுக்கு உண்டாகவேணுமென்றாள்
அப்படியேநல்லதென்று ராணழகர்கோவலனார்
அந்நேரவேளையிலே அரிவையந்தமாதகியாள்
பானையைத்தான்கழுவி பனிநீருலைவார்த்து

சின்னசம்பாவரிசி தீட்டியுலையிலிட்டாள்
முத்துபோல்சாதம் வடித்தாளேமொய்குழலாள்
நல்லவெல்லம்பூசினிக்காய் நாலுவிதஞ்சமைத்தாள்
கத்திரிக்காய்கொய்வாள் கருணைபுளியிடுவாள்
வாழக்காய்கொய்வாள் வழுதலங்காயருப்பாள்
ஈரப்பலாக்காயை யிளமுள்ளுபோக்கிடுவாள்
சோலைப்பலாக்காய்கள் சொளைதிருத்திவாங்கிடுவாள்
காயுங்கறிவகையுங் கனமாகத்தான்சமைத்து
வாழயிலைபோட்டு வட்டித்தான்சாதமது
அப்போதுகோவலனார் போசனங்கள்தான்பொசித்து
சாப்பிட்டிளைப்பாரித் தாம்பூலந்தான்தரித்து
வெடிமான் சிலையழகன் முத்துவிற்குவ்வியாபாரி
சேமக்குருத்தோலை செப்பொன்னெழுத்தாணி
தாளிப்பனையோலை தலைப்பக்கம்காம்பரிந்து
முத்துப்பதித்ததுபோல் மூன்றுவரிதானெழுதி
மாநாகன்செட்டியார்க்கு மன்னனெழுதுகிறார்
வக்கணையுமொப்பனையும் வைத்துயெழுதுகிறார்
திருக்கடையூர்பட்டணத்தில் தெய்வரம்பைமாதகியாள்
தெய்வரம்பைமாதகியாள் தேன்மொழிதன்னிடத்தில்
வருத்தப்படுகிறேன் மயிலனையாள்தன்னிடத்தில்
சித்ரமுகச்சாவடியில் தேடிவைத்ததிரவியங்கள்
பன்னிரண்டுகப்பல்பணம் வரவேண்டுமெந்தனுக்கு
வாராதிருந்தால்நான் மாண்டுமடிந்திடுவேன்
ஓலைகண்டநாழிகைக்கு வரவேண்டுமிட்சணமே
என்றுசொல்லிஓலையிலே யெழுதினாரப்போது
செந்திரிதான்போட்டார் தனஞ்செயனார்கோவலனார்
தூதுவனைத்தானழைத்து ஓலையைக்கைகொடுத்து
காவிரிப்பூம்பட்டணத்தில் கண்டுகொடுமென்றாரே
காடுமலைதாண்டிக் கடுகெனவேவோடிவாரார்
சில்லென்றகாடுவிட்டு செடியும்வனந்தாண்டி
ஓட்டம்பெருநடையாய் ஓடிவருகிறானே

தண்ணீர்கண்டால்குடியானே தாவுகண்டால் நில்லானே
பிள்ளையோடுமாடுகண்டாற் போனவழிபின்விலகான்
கஞ்சிகொண்டுகளைபறிக்குங் காவிரிப்பூதேடிவாரான்
சோறுகொண்டுகதவடைக்குஞ் சொர்னகிரிநன்னாடு
மாநாகன்செட்டிமுன்னே வந்துநின்றான்சேவகனும்
சேவகனுமப்போது சுருளோலைதான்கொடுத்தான்
எங்கிருந்துவந்தாய் எனக்கறியச்சொல்லுமென்றான்
அப்போதுதூதுவனும் ஆனழகனென்னசொல்வான்
திருக்கடையூர்ப்பட்டணத்தில் தெய்வாம்பைமாதகியாள்
அவளிடத்தில்தானிருக்கும் அழகானகோவலனார்
கோவலனார்தன்னுடைய குணமுள்ளதுதனையா
அவ்விடத்தில்தானிருந்து யான்வந்தேனென்றானே
ஓலையைத்தான்கொடுத்து உத்தமனும்விலகிநின்றான்
மாநாகன்வாங்கி வகையுடனேவாசித்தார்
ஓலையிலுள்ள அதிசயத்தைத்தான்பார்த்து
கோவலனார்கையெழுத்தைக் கொற்றவன்தான்பார்த்து
கண்ணிலொத்திக்கொண்டான் கட்டழகனப்போது
மாதகிதன்னிடத்தில் வருத்தம்வந்துநேர்ந்ததென்று
வந்ததொருவோலைதன்னை மன்னவனார்தான்பார்த்து

கோவலன் தன் பணத்தை யெல்லாம் மாதகிக்களித்தல்.

அப்போ-கப்பலுள்ளமாலுமியைக் கடுகவரவழைத்து
பன்னிரண்டுகப்பல்பணம் பாங்காய்ப்பயணமென்று
படவிலரிசியென்ன பட்டணத்துமாலையென்ன
சோங்குமிளகுமென்ன சொர்னக்கப்பலேலமது
இத்தனையுந்தான்கூட்டி இன்பமுடனனுப்பிவைத்து
கப்பலுக்குப்பாய்கட்டி கடுகவருகுதுபார்
திருக்கடையூர்தேடி தீவிரமாய்வருகுதங்கே
லங்கூரந்தான்போட்டு நலமாகத்திருக்கடையூர்
லாங்குபடகேரி நலமாகவந்துதங்கே

வடிவால்வடிவழகன் வர்த்தகனுர்முன்னேவந்து
சிலைபோல்வடிவழகன் செட்டியார்முன்னேவந்து
அழகுடையவர்த்தகனை ஆணழகன்கோவிலனை
கண்டுமெல்லோதெண்டனிட்டுக் கட்டழகன்மாலுமியும்
பண்ணிரண்டுகப்பல்பணம் பாங்காகவந்துதையா
படவிலரிசிகளும் பட்டணத்துமாலைகளும்
சோங்குமிளகும‌து சொர்னக்கப்பலேலமது
இத்தனையும்வந்துதென்று எடுத்துரைத்தார்மாலுமியும்
அப்போதுகோவிலனு மாணழகன்தான்மகிழ்ந்து
தங்கமிதியடியாம் தனக்குமிழ்ரத்தினமாம்
முருவடியின்மேலேறி முத்துக்குடைபிடித்து
ரேவுதுரைகரைக்கு வாராரேகோவலரும்
படவுப்பணத்தையவர் பாங்காயிரக்குமென்றுர்
அப்படியேயிரக்கினு ரானதொருமாலுமியும்
மற்றபணமெல்லாங் கப்பலிலேதானிறக்கி
இறக்கினபணமெடுத்து எந்திழையாள்வீடுவந்து
மாதகியைத்தானழைத்து வடிவழகனேதுசொல்வாள்
ஆசைதந்தமாதகியை அரிவையரைத்தானழைத்து
உனக்கென்னவேண்டுமென் றுத்தமனுர்கேட்கலுற்றுர்
அப்போதுமாதகியா ளரிவையருமேதுசொல்வாள்
பனிரெண்டுகாணிநிலம் பர்த்தாவேவேண்டுமென்றுள்
அப்படியேநல்லதென்று ஆணழகன்கோவலனும்
அந்தவூரிலிருக்கும் ஆணழகன்முன்சீப்பை
வாருமென்றுதானழைத்து வர்த்தகருமேதுசொல்வார்
பனிரெண்டுகாணிநிலம் பாங்காகவேண்டுமென்றுர்
அப்படியேதான்கொடுத்தா ரானதொருமுன்சீப்பு
மாதகிக்குவேண்டுமென்று மன்னனந்தகோவலனும்
ஏழடுக்குவுப்பரிக்கை யின்பமுடன்கட்டுகிறுர்
ஆரண்மனைகளாஸ்த்தான மன்பாகக்கட்டுகிறுர்
பூசைபண்ணுமண்டபம் பொற்கொடிக்குக்கட்டுகிறுர்
பற்றியுலாவுகைக்கு பர்னசாலையுண்டுபண்ணுர்

:

ஜன்னலெல்லாம்பொன்னாலே கதவெல்லாம்கண்ணாடி
சாந்துகளாடினார் தையலுடமாளிகைக்கு
வீதிதிரிந்துமவள் வீட்டுக்குவந்தாலே
கைகால்கழுவுமிடம் சலவைக்கல்தான்புதைத்தார்
இத்தனையுமமர்த்திவைந்தா ரிளங்கொடியாள்நாயகிக்கு
மாதகியைத்தானழைத்து வடிவழகனேதுசொல்வான்
என்னென்னவேண்டும் இளங்கொடியேகேளுமென்றார்
அப்போதுமாதகியாள் வடிவழகியேதுசொல்வாள்
உடக்குநமக்குங் கணக்குண்டோவேறுமில்லை
என்னகணக்கு இளங்கொடியேசொல்லுமென்றார்
காலைகடைசிலவுகொள்ள கால்மாக்கால்பொன்வேணும்
உச்சிகடைசிலவுகொள்ள ஒருமாக்கால்பொன்வேணும்
அந்திகடைசிலவுகொள அம்மாக்கால்பொன்வேணும்
பாக்குகொள்ளவெனக்கு பத்துலட்சம்பொன்வேணும்
வெற்றிலைக்குளதந்னுக்குவேணலட்சம்பொன்வேணும்
புகையிலைக்குளந்தனுக்கு பொன்கப்பல்பணம்வேணும்
நித்திரைக்குஆயிரம்பொன் சத்தியமாய்த்தரவேணும்
படுக்கைக்குஆயிரம்பொன் பக்குவமாய்த்தாவேணும்
பஞ்சணைக்குஆயிரம்பொன் பண்பாய்த்தாவேணும்
இப்படிக்குத்தரவேணும் இன்பமுள்ளநாயகனே
இன்னமென்னவேணும் இளங்கொடிசொல்லென்றார்
நட்டுவர்க்காயிரம்பொன் நலமாகத்தரவேணும்
மத்தளக்காரனுக்கு வளமாகத்தாவேணும்
துத்திக்காரனுக்கு சொர்ணங்கொடுக்கவேணும்
என்தாயார்வசந்தமாலைக் காயிரம்பொன்தரவேணும்
இப்படிக்குசத்தியா யெனக்குமேநீர்தாரும்
இன்னமென்னவேணுமடி யிளங்கொடியேநீகேளு
குத்தினிரவிக்கை குசும்பாவின்சேலைகளும்
பட்டுரவிக்கை பசும்பொன்னாற்சேலைகளும்
இரத்தினச்சடைபில்லையும் எந்தனுக்குவேணுமென்றாள்
அப்படிக்கேதான்செய்தா ராணழகர்கோவலனார்

கல்லிழைத்தகப் மலது கட்டழகர்செய்தார்காண்
கொப்புடனேவாளி கோர்வைமணித்தாவடமும்
முத்திழைத்தமூக்குத்தி மெல்லியர்க்குசெய்தார்காண்
எட்டுவிரலுக்கு மிசைந்தகணையாழி
வாங்கியொன்றுசெய்தார் மயிலனையாள்மாதகிக்கு
காலாழிபீலாழி கண்டசரம்மார்பதக்கம்
சவுளிப்பதக்கங்களும் கண்டசரந்தானுமின்ன
இத்தனையாபரண மேந்திழைக்குசெய்தார்காண்
இப்படிக்குகோவலனார் இருக்கின்றவேளையிலே
பன்னிரண்டுதன்வருஷம் பைங்கிளியாள்வீடுதனில்
பட்டணத்தான்கோவலர் பாங்குடனேவீற்றிருந்தார்
ஆட்டமாடிவீடுவந்தா லதிகம்மகிழ்ந்திடுவார்
பாடுபட்டுவீடுவந்தால் பக்கமெல்லாந்தான்பிடிப்பார்
தலைக்கடைக்குப்போனால் தண்ணீர்கொண்டுபோவார்
புழக்கடைக்குப்போனால் பின்தொடர்ந்துபோவாராம்
வைத்தசாதமுண்ணுவார் வழிநடந்தால்கால்பிடிப்பார்
ஆடைகளைந்துதானால் அனைத்துமெள்ளகட்டிடுவார்
சேலைகளைந்துதானால் சேர்த்துமெல்லக்கட்டிடுவார்
தலைமாட்டில்வந்துநின்று தாழம்பூசூட்டிடுவார்
இப்படிக்குத்தானிருந்தாரேந்திழையாள்தன்னிடத்தில்
அவளுக்கு-தம்பலக்காளாங்கி தலைமேல்சுமந்திருந்தார்
எச்சிற்படிக்கமதை ஏந்திருப்பார்கோவலனார்
சந்தோஷமாக தாவினார்கோவலனார்
அமரர்கள்கோவிலுக்கு ஆடயிவள்போனால்
இவள்பின்னேபோவாரா மாணழகர்கோவலனார்
பிளவுதான்கண்டுதானால் பேணிவைத்துக்கட்டுவாராம்
இப்படிக்கிஷ்டமா யிருந்தாரேகோவலனார்
பனிரண்டுவருஷமாய் பைங்கொடியாள்தன்னிடத்தில்
இன்பமுடனாக இருந்தாரேகோவலனார்
பனிரண்டுதன்வருஷம் பட்சமுடன்தானிருந்தார்
அன்னியப்பெண்ணிடத்தி லன்புடனேதானிருந்தார்

மானுங்கலைபோல மருவிவிளையாடிருந்தார்
குயிலுங்கலைபோலே கூடிவிளையாடிருந்தார்
சாரையுஞ்சர்ப்பமும்போல் சருவிவிளையாடிருந்தார்
இஷ்டமுடன் தானிருந்தார் ஏந்திழையாள் தன்னிடம்
இப்படிக்கிவரிருந்தா ரின்பமுடன்கோவலனார்

காவிரிப்பூம்பட்டணத்தில் கர்ணகியம்மன் வரலாறு கூறுதல்.

பட்டணமாம்பட்டணமாம் காவிரிப்பூம்பட்டணமாம்
கஞ்சிகொண்டுகளைபறிக்கும் காவிரிப்பூம்பட்டணமாம்
சோறுகொண்டுகளைபறிக்கும் சொர்னகிரிபட்டணமாம்
காவிரிப்பூம்பட்டணத்தில் கர்ணகியாள் தன்றனக்கு
பனிரண்டுவயதாச்சு பைங்கொடியாள் தன்றனக்கு
நாளொருமேனியும் நட்சத்திரம்போல்வளர்ந்தாள்
பொழுதொருமேனியா பொன்வண்டுபோல்வளர்ந்தாள்
இப்படிக்குத்தான்வளர்ந்தா ளேந்திழையாள் கர்ணகியும்
நாளொருபெண்களைப்போல் நாயகிதான்வளர்ந்தாள்
அப்படிவளர்ந்துவாரா ளாரணங்குநாயகியாள்
தன்புத்திதனக்குமே தையலர்க்குநேர்ந்ததுகாண்
அப்போதுதாதியரை ஆரணங்குதானழைத்து
கண்ணாடிகொண்டுவந்து கட்டழகிநாயகியாள்
தன்னழகைத்தான்பார்த்தாள் தாமக்கருங்குழலாள்
கொண்டையிலேபூவும் குவளையிலேமையழகும்
கையிலேகங்கணமும் கழுத்திலேதாலிகளும்
இடையிலேகூறையும் முகத்திலேமஞ்சளுமாய்
கண்ணின்திருவழகும் கஸ்தூரிப்பொட்டழகும்
கஸ்தூரிப்பொட்டழகைக் கண்டுவிட்டாள்கர்ணகியாள்
எந்தனுக்குத்தாலியது தந்தவரைச்சொல்லுமென்றாள்
ஆர்செய்தவேலையிது அரிவையரேசொல்லுமென்றாள்
கலியாணப்பந்தலிலே கட்டினதாலியது
இப்படிக்குக்கட்டினவ ரெங்கேயடிதாதியரே

மாமியார்வர்னமாலே மயிலனையைக்கேட்டாயானால்
அந்தவரலாற்றை அடியோடுதானுரைப்பான்

கர்ணகி மாமியாரைத் தன் புருஷன்
எங்கேயென்றுகேட்பது.

ஏறினாள்பல்லக்கு எடுத்தார்கள் தாதியர்கள்
மாமியார்வீடுதேட வாராளேமயிலனையாள்
மருமகளவருவதை மாமியார் தான்பார்த்து
பகடையைத்தானும்விட்டு பைங்கொடியாளெழுந்து
எதிர்கொண்டுவாராளே யேந்திழையாள்வர்னமாலே
மாமியைக்கண்டவுடன் மயிலனைதெண்டனிட்டாள்
வாழ்த்திஎடுத்தணைத்தாள் மருமகளேயப்போது
ஆசனமும்போட்டாளானதொருமருமகட்கு
எங்கேவந்தீரென்றிளங்கொடியாள்கேட்டாளே
மாமிமுகம்பார்த்து மயிலனையுமேதுசொல்வாள்
மாலைதரித்ததொரு மணவாளனெங்கேயென்றாள்
தாலிதரித்ததொரு தனஞ்செயனெங்கேயென்றாள்
காசுகடைவிற்கின்ற கட்டழகரெங்கேயென்றாள்
எவ்விடத்தில்காசுகடைஎனக்கறியச்சொல்லுமென்றாள்
காசுகடைபக்கத்திலே வேசிகடைகளென்று
வேசிகடைவீட்டிலே வீற்றிருப்பாருன்புருஷன்
எத்தனை நாளாச்சு என்புருஷன்வீடுவந்து
பனிரண்டுவருஷமாச்சு பைங்கிளியேவீடுவந்து
திருக்கடையூர்பட்டணத்தில் தெய்வரம்பைமாதவியாள்
அவள்வசத்திலிருக்கிறானணழகருன்புருஷன்
அவரையழையாமல் போனதென்ன அத்தையரே
வேசியுடவீட்டிற்குப் போனவனை நாமழைத்தால்
நம்மொத்தவர்த்தகர்கள் நம்மைமதியார்கள்
ஆகையினாலேநாயக னழைக்கவில்லைமங்கையரே
உன்னாலேயானுக்கா லழையுமென்றாளுத்தமியும்
அப்படியேநலமதென் றரிவையருந்தானெழுந்தாள்
தன்னுடையமாளிகைக்குத்தையலரும்வந்து நின்று

கர்ணகி தன்புருஷனுக்கு ஓலையெழுதி யனுப்புதல்.

தாளிப்பனையோலை தலைப்பக்கம்காம்பரிந்து
ஈழப்பனையோலை யிருபக்கம்காம்பரிந்து
கணபதியைத்தானினைந்து எழுந்தாணிகைப்பிடித்து
ஐந்துவயதினி லறியாதநாளையிலே
மாலையிட்டுமூலைவைத்து மாதகியாள்வீடுசேர்ந்து
தாலிகட்டிமூலைவைத்து தாசிவீடுபோய்நுழைந்து
பனிரண்டுதன்வருஷம் பாராதிருந்துவிட்டீர்
மாலையிட்டதேவிநான் மாண்டுமடிகிறேன்
தொண்டையிலேசீவன் திடுக்கிட்டுபோகுதுகாண்
உற்றார்கள்பெற்றார்கள் பொன்னுரைத்துநாவிலிட்டார்
அப்படியும்போகவில்லை அரிவையுடதன்னுயிர்தான்
கல்லென்றாலென்கணவன புல்லென்றாலென்புருஷன்
உம்முடையகையாலே துளசிதீர்த்தம்விட்டாலே
என்னுடையசீவனது இறந்துமடிந்துவிடும்
கட்டினதாலியைக் கையாலேவாங்கிக்கொண்டு
உற்றொருமைசெய்துவிட்டு உத்தமரேபோய்நடவும்
நீர்வருமளவுமெந்தனுயிர் மன்னவரேபோகாது
ஓலைகண்டநாழிகைக்கு வரவேண்டுமுத்தமரே
என்றுசொல்லிஓலை எழுதினாள்கர்ணகியும்
செந்திரிக்கைதான்போட்டு தலைபுறத்திலசுட்டாளாம்
தாதிகளைத்தானழைத்து ஓலையைக்கைகொடுத்தாள்
திருக்கடையூர்பட்டணத்தல் தீவிரமாய்நீங்கள்போய்
மாதகியையறியாமல் வடிவழகர்தன்கையிலே
ஓலையைக்கொடுத்து உத்தமனார்கையிலே
பல்லக்கிலேற்றிக்கொண்டு பாங்கியேவாருமென்றாள்
வனமாய்வனந்தாண்டி வாரார்கள்தாதியர்கள
காடுசெடிதாண்டிக் கடுகியேவாரார்கள்
சில்லென்றகாடுஞ் செடியும்வனந்தாண்டி
புல்லென்றகாடும் புலிகள்வனந்தாண்டி

வனமாய்வனந்தாண்டி வாரார்கள் தாதியர்கள்
சித்ரமுகச்சாவடியில் தேன்மொழிமார்வந்திறங்கி
பல்லக்கைவிட்டிறங்கி பாங்கியர்கள் தானிருந்தார்
அந்நேரவேளையிலே ஆணழகன்கோவலனார்
சித்ரமுகச்சாவடிக்குக் கோவலரும்வாராரே
பூசைகள்தான்முடிக்கப் புண்ணியரும்வாராரே
எதாவஸ்தானந்தேடி யிருந்தாரேகோவலனார்
ஆற்றுமணலெடுத்து ஆவிடையாருண்டுபண்ணி
தோட்டமதுதிறந்து செவ்வலரிப்பூவெடுத்து
வாசற்படிதிறந்து வர்ணலட்சம்பூவெடுத்து
கொண்டுவந்தபுட்பமதை குபுகுபென்றுதான்சொரிந்து
வாரிவந்தநல்லபுட்ப மலைபோலத்தான்சொரிந்து
அட்டாளுஞ்சொக்கரையும் அங்கயற்கண்ணம்மனையும்
அன்பாகமனதினிலே ஆணழகன்தானினைந்து
கண்ணிரண்டுமூடிக்கொண்டு கையிரண்டுமேந்தி
சிவசிவாவென்றுசொல்லிச் செயகண்டிதானடித்தார்

கர்ணகி ஓலையைக் கோவலர் காணுதல்.

செயகண்டிதானடிக்கத் தேன்மொழியாளோடிவந்து
பூசையிலேதானிருக்கும் புண்ணியனார்கைதனிலே
ஓலைச்சுருளையந்த உத்தமியார்தான்கொடுத்தார்
ஓலையைத்தான்வாங்கி யுத்தமரும்வாசித்தார்
கர்ணகிகைநாட்டைக் கட்டழகன்கண்டானே
கொம்பனையாள்கைநாட்டைக் கோவலருங்கண்டாரே
ஓலையிலுள்ளதொரு வக்கணைகள்தாமறிந்து
சிவசிவாவென்றுசொலி திருச்செவியில்கையைவைத்து
அரகராவென்றுசெல்லி அவர்செவியில்கையைவைத்து
இப்படிக்குநேரிட்டதே எந்திழையேயுந்தனுக்கு
ஈஸ்வரனார்செயலுக்கு என்னதான்செய்வேனென்று
தாதிகளைத்தானிருத்தி தனஞ்செயனார்கோவலரும்
மாதகியாள்தன்னிடத்தில்விடைபெற்றுவாரேனென்று

தலைமேலேகையைவைத்து தானழுதுவாராராம்
என்னசெல்லியழுதுவாரா ரின்பமுடன்கோவலரும்
ஐந்துவயதிலே அறியாதநாளையிலே
மூன்றுபிராயத்திலே முலைகுடிக்கும்நாளையிலே
மடிமேலெடுத்துவைத்து மாங்கனியைகைகொடுத்து
மாலையிட்டுவைத்துநான் மாதகியாள்வீடுவந்தேன்
கூறையிட்டுதனியேவைத்து கூத்தியார்வீடுவந்தேன்
மாலையிட்டதேவியவள் மாண்டுமடியலாச்சே
உன்னாலேயென்னசுகம் உத்தமியேநான்கண்டேன்
மாலையிட்டதல்லாது மற்றொருசுகமறியேன்
கூறையிட்டதல்லாது மற்றொருசுகமறியேன்
வீணுக்குத்தாலிகட்டி விருதாவாய்விட்டுவந்தேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைதஞ்சமென்பேன்
நம்பியிருந்தேனே நட்டாற்றில்விட்டாளே
தலைமேலேகையைவைத்து தனஞ்செயரும்வாராரே
மாதகியாள்வீடுதேடி வாராரேகோவலனார்
கூட்டமாய்க்காற்றடித்தால் கொம்போடுகொம்பசையும்
தனிப்புறமாய்க்காற்றடித்து தாவிப்புலம்புரேனே
முத்துப்போல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டார்
பவளம்போல்கண்ணீரை பக்கமெலாஞ்சோரவிட்டார்
இப்படிக்குத்தானழுது வந்திழையான்முன்னேவந்து
முருகுழலாளரண்மனையில் முடிமன்னன்வந்துநின்று
தலைவாசல்வந்துநின்று தனஞ்செயனார்நின்றாரே
மாதகியைக்கண்டு வடிவழகர் நிற்கையிலே
அழுதகண்ணுஞ்சிந்தையுட னணழகன் நிற்கையிலே
அப்போதுமாதகியா ளன்பாகத்தான்பார்த்து
ஆரடித்தாரேனழுதீர் அழுதகண்ணுநீர்தளும்ப
அடித்தவரைச்சொல்லுமென் றுரணங்குகேட்டாளே

கோவலர்பெண்சாதியிடம்போக மாதகியைச் செலவு கேட்குதல்.

அப்போதுகோவலரு மரிவையருக்கேதுசெல்வார்
ஆருமடிக்கவில்லை அன்னியருந்தீண்டவில்லை
ஐந்துபிராயத்திலே அறியாதநாளையிலே
கொஞ்சம்வயதிலே கொடிதானநாளையிலே
மடிமேலெடுத்துவைத்து மாங்கனியைகைகொடுத்து
மாலைதரித்ததேவி மங்கையருமாண்டாளென்று
கூறைதரித்ததேவி கொப்பனையுமாண்டாளென்று
பத்தினியுமாண்டாளென்று பட்டணைத்துதாதிவந்தாள்
உத்தமியுமாண்டாளென்று ஓலைகொண்டுதாதிவந்தாள்
மாண்டுபோனகர்ணகி மதிமுகத்தைப்பார்க்கவேண்டும்
செத்துப்போனகர்ணகி திருமுகத்தைக்காணவேண்டும்
வாழ்வுக்குதவாவிட்டால் சாவுக்குதவவேண்டும்
நன்மைக்குதவாவிட்டால் தின்மைக்குதவவேண்டும்
என்னைத்தவர்த்தகர்கள் என்னைமதியார்கள்
சரியொத்தவர்த்தகர்கள் சற்றுமதியார்கள்
ஊருமட்டும்போய்வாரேன் ஒருவார்த்தைநீசொல்லு
நாடுமட்டும்போய்வாரேன் நல்வார்த்தைநீசொல்லு
முத்தானவாய்திறந்து உத்தாரஞ்சொல்லும்பெண்ணே
அப்போதுமாதகியா ளாரணங்குமேதுசொல்வாள்
என்னிலுந்தன்னழகோ ஏதுங்கெட்டகர்ணகியாள்
கூத்தியார்நானிருக்கக் கொண்டவள்மேலாசையென்ன
வேசியவள்நானிருக்க வேறேபிரியமென்ன
தாசியவள்நானிருக்கத் தாலியுள்ளாளாசையென்ன
என்னிலுந்தன்னழகோ ஏதுங்கெட்டகர்ணகியாள்
மறந்துவிடுமறந்துவிடு மாலையிட்டாள்தன்னுசை
போட்டுமறந்துவிடு பொற்கொடியாள்தன்னுசை
பனிரண்டுதன்வருஷம் பஞ்சணையில்நாமிருந்தோம்
கூடிக்குலாவிக்கொண்டு கொற்றவனேநாமிருந்தோம்

சாரையுஞ்சர்ப்பமும்போல் சருவிவிளையாடிருந்தோம்
குயிலும்மயிலும்போல் கூடிவிளையாடிருந்தோம்
மானுங்கலைபோல் மருவிவிளையாடிருந்தோம்
எள்ளினுளெண்ணெய்போல் என்னுளுநாமிருந்தோம்
பாலுக்குள்வெண்ணெய்வேறே பதரடித்தாள்மாபாவி
எள்ளுவேறெண்ணெய்வேறே யிடாடித்தாள்மாபாவி
விட்டுதோளன்னுசை விளாம்பழத்தோடதுபோல்
வேண்டுமென்றநாளையிலே வேப்புகரும்பாயிருந்தேன்
வேண்டாதநாளையிலே வேப்பங்கசப்பானேன்
கைசட்டிவிட்டாற்போல் கைவிட்டுப்போரேனென்றீர்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
நம்பியிருந்தேனே நட்டாற்றில்விட்டீரே
ஊருக்குப்போரேனென்றீ ருத்தமனுர்கோவலரே
மனதுதான்கிட்டுமோ மன்னவரேயுந்தனுக்கு
என்னகுற்றஞ்செய்தேனுன் என்னைவிட்டுபோரீர்காண்
என்னைவிட்டுநீர்போக என்னமனந்தோணுதுகாண்
ஆசையைத்தீர்த்துவிட்டு அம்பலத்தில்விட்டீரே
மூத்துபோல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டாள்
ஆரவிட்டுகண்சலத்தைச் சோரவிட்டுதானழுதாள்
பட்டுபோல்வெம்பியவள் பவளம்போல்நின்றழுதாள்
மானழுதபாவனைபோல் தானழுதுவாடுகிருள்
அப்போதுகோவலனும் ஆணழகன்தானெழுந்து
முந்நாணிகொண்டு முகமெல்லாந்தான்துடைத்து
உன்னைவிட்டுநான்பிரியே ஞெருநாழியானாலும்
கொண்டவளைநான்பார்த்து கொம்பனையேவாரேண்டி
உற்றுரிமைசெய்துவிட்டு ஒருநொடியில்வாரேண்டி
கட்டியதாலிதன்னைக் கைமேலேவாங்கிக்கொண்டு
வைகையில்ஸ்தானம்பண்ணி வருவேண்டியுன்மனைக்கு
ஒன்றுக்குமஞ்சாதே ஒளிவுள்ளகண்மணியே
சந்தோஷமாகவே தையலரேயனுப்பிவைத்தால்

காவிரிபூம்பட்டணத்து கரைதுரைக்குப்போய்வாரேன்
என்றுசொல்லிகோவலனு ரெடுத்துரைத்தாரந்நேரம்

மாதகி கோவலரை உன்னைப்போல் பதுமைசெய்து
வைத்துப் போய்வாருமென்று சொன்னது.

அப்போதுமாதகியாள் அரிவையவளேதுசொல்வாள்
உன்னைப்போலொத்த பதுமையொன்றுசெய்துவிட்டு
சிறுபதுமைசெய்துவைத்து செட்டியரேபோய்வாரும்
மணிப்பதுமைசெய்துவைத்து மன்னரேபோய்வாரும்
அப்போதுகோவலர் ஆணழகரேதுசொல்வார்
சித்ரமுகச்சாவடியில் தேன்மொழியேநானும்போய்
களஞ்சியத்துப்பணங்களை கடுகெனவேதானெடுத்து
பதுமையொன்றுசெய்து பைங்கிளியேநான்வாரேன்
களஞ்சியத்தைத்தேடிக் கட்டழகர்வாராரே
பொன்னுமிதியடியைப் போட்டுமிகநடந்து
திருநெல்வேலிசோமன் சிராகத்தானுடுத்தி
காங்கிவுருமாலை கள்ளர்கட்டுமுண்டாசு
சேலத்துருமாலை சேர்த்திருக்கிக்கட்டினரே
சவுளிக்கடுக்கனது சதுராகசோதிமின்ன
ஒண்டிக்கல்முருகது ஒருகாதில்சோதிமின்ன
முப்புரிநூலுமது மூன்றுலட்சம்பொன்பெறுமே
செக்கச்சிவந்தவர்காண் செங்கீரைத்தண்டழகன்
மாங்காய்முடியழகன் மாதளம்பூமேனியனுர்
தானுமழகுடையார் தக்கோலந்தின்பவர்காண்
அழகாலழகனவன் அதிசயத்தவர்த்தகர்காண்
அட்டாளுஞ்சொக்கரைப்போ லாணழகன்வாரானே
மாதகிக்குபதுமைசெய்ய வாராராங்கோவலனுர்
பஞ்சணத்தார்வீடுதேடி பட்டணத்தார்வாராராம்
குட்டியென்றவாசாரி குருபுத்திரகம்மாளர்
சுப்பனென்னுமாசாரி சுத்தபுத்திகம்மாளர்
அண்ணன்தம்பியேழுபே ரானதோர்கம்மாளர்

பஞ்சணத்தார்வீடுதேடி பட்டணத்தார்வாராராம்
அப்போதுபஞ்சணத்தா ரண்ணன் தம்பியேழுபேராம்
அட்டாளுஞ்சொக்கரைப்போ லழகுடையர்வாராராம்
மதுரைவாழும்சொக்கரைப்போல்மகாதேவர்வாராராம்
நாம்கேட்டவரந்தருவார் கீர்த்தியுள்ளசொக்கரவர்
தோட்டமதுதிறந்து தொன்னைதைத்துபூவெடுத்து
வாசற்படிதிறந்து வண்ணலட்சம்பூவெடுத்து
ஓடுகிறகெங்கையிலே ஒருசொம்புஜலமெடுத்து
பாதமதுதுலக்கப் பட்டாடைதானெடுத்து
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தார்பஞ்சணத்தார்
அட்டாளுஞ்சொக்க ரையரென்றுமனதிலெண்ணி
பாதமதுதுலங்க பட்டாலடிதுடைத்து
கொண்டுவந்தபுட்பமெல்லாம் கொட்டிச்சொரிந்தாரே
வாரிவந்தபுட்பமெல்லாம் மலரடியில்தான்சொரிந்து
முக்காலடிபணிந்து முன்னிருகால்தெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை கண்டந்தகோவனூர்
சிவசிவாவென்றுசொல்லி திருச்செவியில்கைவைத்து
அரகராவென்றுசொல்லி அருஞ்செவியில்கைவைத்து
என்னைப்பணிந்தவகை எதுவகைசொல்லுமென்றார்
அட்டாளுஞ்சொக்கரென் றடிபணிந்தோமென்றார்கள்
கேட்டவரந்தருவீரென் றுகீர்த்தியுடன்பணிந்தோம்
சொக்கரல்லசொக்கரல்ல சாதியிலேசெட்டிப்பிள்ளை
நான்பதுமைபண்ணவந்தேன் பட்டணத்தார்கோவலன்
மாதகிக்குப்பூசைசெய்ய வடிவழகர்வந்தேனென்றார்
அதுஉங்களாலாகுமோ உத்தமரேசொல்லுமென்றார்
எங்களாலாகுமென்று அழைத்துவந்தாரண்மனைக்குள்
வட்டமணைபோட்டார் வடிவழகர்கோவலற்கு
வட்டமணையின்மேல் வடிவழகனுட்கார்ந்து

கோவலர் தன்னைப்போல் பதுமை செய்யச்சொல்லக்
கம்மாளர் துரிதத்தில் எங்களால் முடியாதென்றது.

என்னைப்போல்பதுமையொன்று இன்பமுடன்செய்ய
எத்தனை நாளையிலே செய்துகொடுப்பீரென்றான்
எட்டுநாளொருவாரம் இருந்தீரேயாமானல்
உம்மைப்போல்பதுமை உத்தமரேசெய்வோமென்றார்
ஒருநாழிக்குள்ளாக செய்யவேணுமென்றுரைத்தார்
எங்களாலாகாதென்று சொன்னார்கள்பஞ்சணத்தார்
என்னைப்போல்கருவுகட்டித் தாரீரோவென்றுகேட்டார்
மெழுகாலேகருவுகட்டி முடிமன்னுசெய்யவேண்டும்
அதிலேபழுதானு லாகாதுகோவலரே
மறுபடியுமுருக்கையல்லோ செய்யவேண்டுமன்னவரே
எவ்வளவுவேலைகொள்ளு மெங்களுக்கென்றுசொன்னார்
அரைநாழிக்குள்ளேசெய்ய வெங்களாலாகாது
அப்போதுகோவலனு ராணழகரேதுசொல்வார்
பொன்னையுருக்கியல்லோ புண்ணியரேதாருமென்றார்
அப்படியேநல்லதென்று கம்மாளர்சம்மதித்தார்
மூசையிலேபோட்டு வுருக்கினார்பொன்னையுமே
அப்போதுகோவிலனு ராணழகரென்னசெய்வார்

கோவலருக்குப் பொற்பதுமை யமைந்தது.

புத்துமண்ணுகொண்டுவந்து புண்ணியனுரன்னேரம்
அத்தையுருக்கல்லுபோல் ஆணழகர்செய்தாராம்
சுற்றித்திரைவளர்த்துசொர்னங்கொண்டுவாருமென்றார்
அப்போயாரை நினைக்கின்றார் அளவற்றசிந்தையிலே
பத்தாதபத்தினியே பழுதுபடாரத்தினமே
குற்றமற்றரத்தினமே கோவிலிங்கிசீர்மகளே
நீபத்தினியுமெய்யானல் பதுமையமையவேணும்
பத்தினியைத்தானினைந்து பஞ்சலோகந்தானமைத்தார்
ஓடியுருகுதங்கே உள்ளுருகிப்பாயுதங்கே
ஐந்தெழுத்தும்பாவனையும் ஆணழகன்கோவலன்போல்

பட்டணத்தார்போலாகப் பதுமையமைந்ததங்கே
பஞ்சணத்தாரைபார்த்து பட்டணத்தாரேதுசொல்வார்
கருவுகட்டிவாங்களென்று கட்டழகர் தானுஞ்சொன்னர்
அழகுதுலங்குது ஆனந்தங்கொஞ்சுது
அதினுடையதன்னழகை கண்டார்கள்பஞ்சணத்தார்
நம்மாலேயாகுமோ நலமாகச்செய்வதற்கு
அரைநாழிக்குள்ளே யங்குவைக்கக்கூடாது
பதுமையைக்கொண்டு பட்டணத்தார்கைகொடுத்தார்
பதுமையையெடுத்துக்கொண்டு பட்டணத்தார்வாராரே
மாதகியாளந்தப்புரம் வாராரேகோவலனர்
தலைக்கடைவாசலிலே வந்துநின்றார்கோவலரும்
பதுமையையங்குவைத்து பட்டணத்தாருள் நுழைந்தார்
மாதகியாள்முன்வந்து வடிவழகனேதுசொல்வான்
பொழுதேறிப்போகுதடி போகவேணுங்காவிரிப்பூ
நாளேறிப்போகுதடி நடக்கவேணுங்காவிரிப்பூ
போகவிடைதாருமென்றார் பொற்கொடிமாதகியை
அப்போதுமாதகியாள் ஆரணங்கென்னசொல்வாள்
திருப்பதுமைசெய்துவந்தா லுன்சீமையனுப்பிடுவேன்
அப்போதுகோவலனர் ஆணழகரேதுசொல்வார்
தலைக்கடையிலேபடிவந்து தையலரேபாருமென்றார்
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்துபாருமென்றார்
மாணிக்கம்போலே மணிப்பதுமைதுலங்குதங்கே
சந்தோஷமானுள் சரீரங்கள்பூரித்தாள்
கோவலனர்முன்னேவந்துகொடியிடைஏதுசொல்வாள்
பேசாதபொற்பதுமைபொற்கொடியாளேதுக்கென்றாள்
பதுமையைப்பேசவைத்தால் பட்டணம்போய்வரலாம்

மாதகிக்குக் கோவலர் பதுமையைப் பேசச்செய்தல்.

அப்போதுகோவலனர் ஆணழகரேதுசெய்தார்
புறக்கடையிலோடிவந்தார் புண்ணியனர்கோவலரும்
பச்சிலைதான்கசக்கிப் பாம்பாகத்தானெடுத்து

நெற்றிக்குத்திலதமிட்டு நேர்விழிக்குமையெழுதி
கர்ணகியைத்தானிணைந்தார் கட்டழகராப்போது
கண்ணைத்திறக்குதுபார் கற்பதுமைபேசுதுபார்
பொற்பதுமைசொல்லுகுது பெண்ணரசியைப்பார்த்து
ஆசைதந்தமாதகியே அத்தாட்சிபெண்மயிலே
அடிஒட்டிவிடுஓட்டிவிடு ஊரைவிட்டுக்காதவழி
இஞ்சிவிற்கும்செட்டிமகன் இனிதாநடப்பானே
அண்ணன்வருமளவும் ஆளடிமையுந்தனுக்கு
தமையன்வருமளவுந் தானடிமையுந்தனுக்கு
என்றுசொல்லிபொற்பதுமை யிருக்கிறவேளையிலே
அப்போதுமாதகியா ளருங்கிளியாள்தான்பார்த்து
பொற்பதுமையோடுநீர் பொருந்தஇருமென்றார்

பொற்பதுமை மாதகியை அடிப்பது.

அப்போதுபொற்பதுமை ஆங்காரக்கோபமுடன்
சவுளிப்பிரம்பெடுத்துச் சாடுதுபார்மாதகியை
கொத்துப்பிரம்பெடுத்துக் கொல்லுதுபார்மாதகியை
எழுந்தாலொருகுத்தும் விழுந்தாலொருவுதையும்
குத்துக்குழக்குரத்தம் பொப்பளித்துத்தானுமிழ்ந்தாள்

கோவலரை மாதகி ஊருக்கனுப்புதல்.

வர்த்தகனைத்தான்பார்த்து வடிவழகாபோய்வாரும்
ஊருக்குப்போய்வாரும் உத்தமரேகோவலரே
அப்போதுகோவலனார் அந்தப்புரந்தாண்டி
அந்தப்புரந்தாண்டி ஆணழகர்வாராரே
சித்ரமுகச்சாவடியில் சீராகவாராரே
தாதியரைத்தான்பார்த்துத் தனஞ்செயனார்கோவலரும்
சித்ரமுகச்சாவடியில் சீராகப்போய்ப்படுத்தார்
நித்திரைபோராரே நேரானகோவலரும்
அந்தச்சமயத்திலே ஆரணங்குமாதகியாள்
பொற்கொடிமாதகியாள் போதவேஸ்நானஞ்செய்து
அப்போதுமாதகியா ளருங்கிளியாளேதுசெய்தாள்

போசனமண்டபத்தே போய்ப்புகுந்தாள்மாதகியும்
பொற்றளிகைதான்புசித்து இருந்தாளேமாதகியாள்

கர்ணகிகோவலர் வராமையால் சாபமிடப் பதுமை யிறந்தது.

அப்போதுகர்ணகியாள் ஆரணங்கேதுசெய்தாள்
அஞ்சனம்போட்டுமவள் ஆராய்ந்துபார்க்கலுற்றாள்
மையுருகமையுருக மையழகுதோணுகுது
அறுமாருமங்கதனும் ஆரணங்குமுன்னேவந்தார்
மாதகிக்குபதுமைசெய்து வாரார்காண்கோவலநும்
என்றுசொலியஞ்சனத்தில் இன்பமுடன்தோற்றுகுது
அப்போதுகர்ணகியாள் ஆரணங்கென்னசெய்தாள்
கைமுறித்துசாபமிட்டாள் கட்டழகியப்போது
பத்தினியாள்சாபமிடப் பதுமைவாயடைந்ததங்கே
செத்துமடிந்து சிவலோகம்சேர்ந்ததுகாண்
அப்போதுமாதகியாள் ஆரணங்குஓடிவந்து
பதுமையைத்தான்பார்த்து பாவையிளங்கொடியாள்
செத்துக்கிடக்கிறது தேன்மொழியாள்கண்டுவிட்டாள்
கோபம்பிறந்ததங்கே கொம்பனையாள்தானெழுந்து
காகரென்றுதான்சுழட்டி கல்லின்மேலேயடித்தாள்
பொடியாகப்போச்சுது பொற்கொடியாள்முன்பாக
அப்போதுமாதகியாள் ஆரணங்குதானெழுந்து
தாயாரந்தவசந்தமாலை தையலருகில்வந்து
அம்மாடியென்றுசொல்லி அலரியழுதாளே
என்னடிமகளேஎன்று இளங்கொடியாள்கேட்கலுற்றாள்
பதுமையைச்செய்துவைத்து பட்டணத்தார்போனாரே
போனதின்பிற்பாடு பொற்பதுமையிறந்ததுகாண்
மோசம்பண்ணிபோனார்காண் மெல்லியிளங்கொடியை
என்று அழுகையிலே யிளங்கொடியாளேதுசொல்வாள்
அஞ்சாதேமகளேயென்று ஆரணங்குசெல்லலுற்றாள்

பதுமையிறந்ததும் தாதிகோவலரை ஓலையெழுதிவரவழைத்தல்.

தாளிப்பனையோலை தலைப்புறங்காம்பரிந்து
ஈழத்துவோலையிலே இருபுறமுங்காம்பரிந்து
முத்துப்பதித்ததுபோல் மூன்றுவரிதானெழுதி
என்னென்றுஓலையிலே எழுதுகிருள்வசந்தமாலை
மாதகியும்பதுமையுமே மஞ்சணைமேலிருந்தவர்கள்
சங்கிலிவழியாகச் சற்பமிறங்கிவந்து
பதுமையைவிட்டுவிட்டு மாதகியைக்கடித்ததுகாண்
மாண்டுமடிந்தாளே மாதகியாள்பாம்பாலே
எடுப்பாருமில்லைகாண் ஏந்திழைமாதகியை
ஓலைகண்டநாளிகைக்கு உத்தமரேவரவேண்டும்
நடுகவரவேண்டும் கட்டழகர்கோவிலரே
காணுப்பிணமாச்சு கட்டழகிதானிருக்க
என்னுலேயாகுமோ ஏந்திழையைநானெடுக்க
நீருநெருப்பாக்கி நீர்போகவேண்டுமையா
என்றுசொல்லிஓலையிலே யெழுதினுள்வசந்தமாலை
பல்லக்குத்தான்கொடுத்து அனுப்பினுள்தாதியரை
சித்ரமுகச்சாவடியில் தேன்மொழிமார்வந்துநின்றூர்
பல்லக்கின்மேலேறி பயணமிட்டார்கோவலரும்
அந்நேரவேளையிலே அறிவையர்கள்சூழ்ந்தார்கள்

கோவலர் ஓலையைக்கண்டு மாதகி யிறந்தாளென்று புலம்பிவருகிறது.

பல்லக்கைதான்மறித்து பாவையர்களோலைதந்தார்
ஓலைச்சுருளையந்த உத்தமனுந்தான்பார்த்து
கதறிவிழுந்தாரே கட்டழகர்கோவலனுர்
அடிபெண்ணேமாதகியே அரிவையரேமாண்டாயே
சுகந்தந்தமாதகியே தோகையரேமாண்டாயே
ஆசைதந்தமாதகியே அப்பவேமாண்டாயே
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்

உன்னை-நம்பியிருந்தேனே நட்டாற்றில்விட்டாயே
ஒருவரைப்பறிகொடுப்பா ருலகத்திலில்லையடி
இருவரையும்பறிகொடுத்து ஏனுகியானேனே
கூட்டமாக்காற்றடித்தால் கொப்போடேகொம்பசையும்
தனிமரமுங்காற்றடித்துத் தாவிப்புலம்புரேனே
கர்ணகியாள்மாண்டு கடைசாரிருக்கொணுதோ
பத்தினியாள்மாண்டுநீ ஒருத்தியிருக்கொணுதோ
உத்தமியாள்மாண்டுநீ ஒருத்தியிருக்கொணுதோ
பரஸ்திரியாள்மாண்டு பத்தினியிருக்கொணுதோ
இருவரையும்பறிகொடுத்து இலவுகாத்தகிளியானேன்
தலைமேலேகையைவைத்து தானழுதுகோவலரும்
கர்ணகியாள்தாதியரைக் கட்டழகன்தான்பார்த்து
ஐம்பதுபொன்னையும் அடைவாகத்தானெடுத்து
பத்தாதபத்தினியே பழுதுபடாரத்தினமே
குற்றமற்றபெண்மயிலே கோவிலிங்கிசிர்மகளே
உற்றுருமைசெய்யவென்று உத்தமன்நானும்வந்தேன்
வந்தவிடத்திலே வழக்கொன்றுஉண்டாச்சு
வழக்குகளைபற்றறுத்து வருவேனுனுன்னிடத்தில்
என்று-தாதிகளையனுப்பி தனஞ்செயனுர்வாராரே
ஆசைதந்தமாதகியே அரிவையரேமாண்டாயோ
என்றைக்குகாணுவே னேத்திழையேஉன்முகத்தை
என்றுசொல்லிக்கோவலரும் அழுதுகொண்டுவாராரே
மாதகியாளந்தப்புரம் வந்துநின்றுர்கோவலரும்
அப்போதுமாதகியா ளாரணங்குமேதுசெய்தாள்
உண்டுபசியாறி ஒருசொம்புநீர்குடித்து
தாம்பூலம்தானருந்தி தையலிளங்கொடியாள்
கானகத்திலேயனுப்பிக் கழுத்தறுக்கஆளேவிட்டாய்
இலையிலேசாதமிட்டு இன்பமுடன்தூக்கிவிட்டாய்
என்றுசொல்லிகோவலரும் இனிதாகக்கேட்கலுற்றுர்
அப்போதுமாதகியா ளன்பாயெழுந்திருந்து

கோவலர் வந்தாரென்று மாதகி தன்தாயாரிடத்தில் சொல்ல அவரைவிடாமல் பத்திரப்படுத்தென்று கிழவி சொல்லுகிருள் மாதகி கோவலரை இம்சைப் படுத்தல்.

வசந்தமாலைமுன்பாக மயிலனையாள்வந்து நின்று
கோவலச்செட்டியார் கொழுநரும்வந்தாரம்மா
அப்போவசந்தமாலை அரிவையருக்கென்னசொல்வார்
தாசிவீடுவந்தவர்கள் தலைதப்பிப்போகிறதோ
வேசிவீடுவந்தவரை வீட்டுக்கனுப்புவதோ
பாதாளந்தேடியவனைப் பக்குவப்படுத்தவேண்டும்
ஈரமண்வெட்டி யிருகப்புதைக்கவேண்டும்
என்றுசொல்லிவசந்தமாலை ஏதுரைப்பாளப்போது
அப்போதுமாதகி அருங்கிளியாளேதுசொல்வாள்
என்னதான்செய்கிற தேந்திழையேசொல்லென்ருள்
துவசந்தமாலை அரிவையற்கேதுசொல்வாள்
ஆபரணங்களுண்டோ அரிவையரேசொல்லுமென்ருள்
ஆபரணங்களுண்டு அரிவையரேயென்றுசொன்னுள்
தட்டிப்பறியுமென்ருள் தையல்வசந்தமாலை
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குவோடிவந்து
செட்டியார்முன்பாகத் தேன்மொழியாள்வந்து நின்று
என்கணவாவர்த்தகரே எனக்கிசைந்தபுண்ணியரே
பார்த்தாப்போல்பார்த்திருக்க பாக்குபைதாருமென்ருள்
இதுவோசிலபாரம் இந்தாடிபெண்ணேயென்ருர்
இந்தாடிஎன்றுசொல்லி எடுத்துமெள்ளகைகொடுத்தார்
கண்டாப்போல்கண்டு கரண்டகத்தைதாருமென்ருள்
இதுவாசிலபாரமென்றுஎடுத்துமெள்ளகைகொடுத்தார்
கண்டாப்போல்கண்டிருக்க கணையாழிதாருமென்ருள்
அப்படியேதான்கொடுத்தா ராணழகன்கோவலரும்
மேலுருமால்தாருவென்ருள் மெல்லியிளங்கொடியாள்
அத்தனையுந்தான்கழட்டி ஆணழகர்கைகொடுத்தார்
மேலுஅங்கவஸ்த்ரம் மெல்லியர்க்குத்தாருமென்ருள்

இதுவேர்சிலபாரமென்று எடுத்துக்கொடுத்துவிட்டார்
கையுள்ளகுட்டை கட்டழகாதாருமென்றாள்
இதுவேர்சிலபாரமென்று எடுத்துக்கொடுத்துவிட்டார்
உம்மைப்போலபார்த்திருக்க உத்தமனேயெந்தனுக்கு
தாடியுமீசையுந் தரவேணுமென்றுசொன்னாள்
கத்தரிக்கோல்கொண்டு கத்தரித்துக்கைகொடுத்தார்
அத்தையும்வாங்கின ளரிவையந்தமாதகியாள்
தலையிலுள்ளகுடிமியை தரவேணுமென்றுசொன்னாள்
அண்ணுக்கபர் நீச்சீலே ஆணழகர்தாருமென்றாள்
அத்தையுந்தானரிந்து அரிவையவள்கைகொடுத்தார்
உந்தன்வடிவழகை எந்தனுக்குத்தாருமென்றாள்
எப்படிநான்கொடுப்பே னிளங்கொடியேயென்னழகை
சூரிகத்திகொண்டுவந்து கரண்டினால்பல்லூத்தி
பாறையின்மேல்படுக்க வைத்தாளேமாதகியும்
கம்பளியைமூடினாள் கட்டழகிமாதகியாள்
பிடரியில்கைகொடுத்து பொட்டெனவேயமுத்தினாள்
நாகபாம்புபோலே நலமாகக்கருத்ததங்கே
அங்கம்துடிதுடித்து ஆவியெல்லாம்தான்பதறி
வேர்வைவழிந்தது வர்த்தகனார்மேனியெல்லாம்
அத்தானதுதீர்த்தமென்று அன்பாகத்தானெடுத்து
கெண்டியில்வைத்தாளாம் கிளிமொழியாள்மாதகியாள்
அப்போதுகோவலர்க்கு அழகுமிகச்சிந்திடுமாம்
திருப்பதிதிம்மனைப்போல் நின்றாராம்கோவலனார்

மாதகி கோவலர் அழகுமுதல் பறித்து இவரை யென்ன
செய்கிறதென்று தாயைக்கேட்கத் தாய்குளத்தில்
தள்ளென்று சொன்னது.

அப்போதுமாதகியா ளாரணங்குவாராளே
வசந்தமாலைமுன்பாக வந்துநின்றாள்மாதகியாள்
எல்லாம்பறித்துக்கொண்டே னிளங்கொடியேதாயாரே
திருப்பதிதிம்மனைப்போல் நின்றாண்டிகோவலனும்

இனியென்னசெய்கிறது எந்திழையேதாயாரே
சிங்கமுகக்கேணியில் தேன்மொழியேதள்ளுமென்ருள்
அப்படியேநல்லதென்று அரிவையருஞ்சம்மதித்து
கோவலனூர்முன்னே கொம்பனையுமோடிவந்து
முடிமான்சிலையழகா முத்துவிற்கும்வர்த்தகரே
கலைமான்சிலையழகா கப்பலோட்டும்வர்த்தகரே
எக்காலஞ்சென்றிடுமோ என்கணவாயுனைக்காண
என்னைவிட்டுநீர்பிரிய யெப்படிக்குதுணிந்தீரோ
சிங்கமுகக்கேணியிலே சலமுகந்துநீர்கொடுத்தால்
அத்தானுடதீர்த்தமென்றரிவைநான்பார்த்திருப்பேன்
அப்படியேயாகட்டென்ருர் ஆணழகர்கோவலரும்
தாம்புக்கயருஞ்சொம்புந் தையலவள்கைகொடுத்து
சிங்கமுகக்கேணி யருகினில்கொண்டுவந்தாள்
அறுபதுபாகமுள்ள அழகுகிணர்தனக்கு
முப்பதுபாகக்கயர் மொய்குழலாள்தான்கொடுத்தாள்
சலந்தனைமொள்ளுமென்று தேன்மொழிசொன்னுளே
அப்போதுகோவலரும் அந்தசெம்பில்கயிறணிந்து
கயிறைநழுவவிட்டார் கட்டழகர்கோவலரும்
எட்டவில்லைகயிறு என்னசெய்வேன்மாதகியே
இறங்கிமொள்ளுமென்கணவா எனக்கானபுண்ணியரே
நாலுபடிகீழிறங்கி நலமாகமொள்ளலுற்ருர்
இறங்கிஜலமொள்ளலுற்ரு ரின்பமுள்ளகோவலரும்
பிடரியில்கைகொடுத்து பின்னலேதள்ளிவிட்டார்
சிங்கமுகக்கேணியிலே திட்டென்றுவிழுந்துவிட்டார்
பாறையதன்மேல்மூடிப் பாவையரும்வந்துவிட்டாள்
அப்போதுகோவலரும் ஆணழகரேதுசெய்தார்
பெண்ணேஎன்மாதகியே பொற்கொடியேகட்டழகி
ஆசைதந்தமாதகியே அரிவையரேமாண்டாயே
நான்செத்தாலும்சேதமில்லைதேன்மொழியேமாதவியே
மர்தகியைத்தானினைந்து வாடிப்புலம்புகிருர்

மாதகி கிணற்றில்தள்ளின கோவலர் பிழைத்து மாதகியிடம் வருதல்.

அப்போதுகெங்கை அழுத்துதேபூமியிலே
அவர்-உயிர்போகும்வேளையிலே ஆரை நினைக்கலுற்ருர்
பத்தாதபத்தினியே பழுதுபடாரத்தினமே
குற்றமற்றமேல்ரதியே கோவிலிங்கிசீர்மகளே
பத்தாநான்மாளுகிறேன் பைங்கொடிக்குயாருரைப்பார்
உன்புருஷன்மாளுகிறேன் உத்தமிக்குயாருரைப்பார்
நீ-பத்தினியுமெய்யானல் பக்கத்துணையிருக்கவேணும்
பத்தினியைத்தா நினைக்கப் பார்த்தாளேகெங்கையவள்
பத்தினியாடன்புருஷ னிவனைக்கொன்ருல்பாவம்வரும்
என்று-அரைகிணராயிருந்தது முழுகிணராய்பொங்கி
அப்போதுகோவலரும் ஆணழகர்தானெழுந்து
மாதகியாள்காலடியைக் கண்டுமந்தக்கட்டழகர்
காலில்ஜலமெடுத்துக் கட்டழகன்தான்குழைத்து
நெற்றித்திலதமாக இட்டாரேபுண்ணியரும்
மாதகியாள்வீடுதேடி வாராரேகோவலரும்
மாதகியாள்முன்னேவந்து வடிவழகரென்னசொல்வார்
சிங்கமுகக்கேணியிலே தேன்மொழியேயென்னைதள்ளி
மனந்துணிந்துவந்தாயே மாதகியேயென்றுசொல்லி
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
பணிக்கரைநான்தேடிப் பாவையரும்போயழைத்தேன்
நாளைக்குவாரோமென்று நலமாகத்தானுரைத்தார்
இதற்குள்ளேவந்தீரே என்னுடையபாக்கியந்தான்
பஞ்சணைமேலாகப் பாங்குடனேவாருமென்ருள்
அப்போதுகோவலனு ராணழகரென்னசொல்வார்
பொழுதேறிப்போகுதடி போகவேணும்காவிரிப்பூ
நாளேறிப்போகுதடி நடக்கவேணும்காவிரிப்பூ
வாழ்வுக்குதவாவிட்டால் சாவுக்குதவவேண்டும்
என்றுசொல்லிகோவலரு மிளங்கொடியைக்கேட்டாரே

அப்போதுமாதகியா ளாரணங்குநாயகியாள்
தாயார்வசந்தமாலை தையல்முன்னேஓடிவந்து
செத்துமடியவில்லை செட்டிபிள்ளையென்றுசொன்னாள்
அப்போதுவசந்தமாலை ஆரணங்கேதுசொல்வாள்
வாளைகண்டமடுவில் மன்னரைத்தள்ளுமென்றாள்
அப்படியேசம்மதித்து ஆரணங்குமாதகியாள்

பிழைத்துவந்த கோவலரை மாதகி மருபடியும் ஆற்றில் தள்ளுதல்.

செட்டியார்முன்வந்து தேன்மொழிஏதுசொல்வாள்
எக்காலஞ்செல்லுமோ என்முகத்தைநீர்பார்க்க
கையாலேஸ்தானமது கட்டழகாசெய்யவேண்டும்
வாருமென்றுசொல்லி வைகைக்குக்கூட்டிவந்தாள்
வைகைக்கரைதனிலே வடிவழகன்தனையிருத்தி
எண்ணெயைக்கொண்டுவந்து இன்பமுடன்தேய்த்தாள்
அரைப்புகள்கொண்டுவந்து அன்பாகந்தான்தேய்த்து
ஆற்றிலேமுழுகச்சொன்ன ளாரணங்குமாதகியாள்
இருகரையும்சலம்பெருகி ஏகமாய்ப்பெருகினதே
எப்படிக்குநானிறங்கி முழுகுவேனேந்திழையே
ஊணுங்கொடிகொண்டுவந்து உத்தமனைக்கட்டியவள்
ஆற்றிலிறங்குமென்று ளரிவையந்தமாதகியாள்
ஆற்றிலிறங்கின ராணழகர்கோவலரும்
சுழலிலகப்பட்டார் சுந்தரனாப்போது
அடித்துக்கொண்டுபோகுது ஆணழகர்கோவலரை
அப்போதுமாதகியாள் அரண்மனைக்குவந்துவிட்டாள்
அடித்துக்கொண்டுபோகிறதே ஆற்றிலேகோவலரை
ஒரலைக்குமுழுகிறது மற்றலைக்குதேருறதும்
இப்படிக்குவரும்போது இன்பமுடன்கோவலரும்
பெண்ணேஎன்மாதகியே பொற்கொடியேமாண்டேனே
நான்மாண்டால்சேதமில்லை நாயகமேமாண்டாயே
மாதகியைத்தானினைக்க அழுத்துகிறாள்கங்கையவள்

கட்டுவிட்டுமெய்மறந்து கலகலத்துமேனியெல்லாம்
கூண்டுவிட்டுயிர்வருது குதிக்குதுபார் ஆறுதனில்
உயிர்போகும்வேளையிலே யாரை நினைக்கலுற்றார்
பத்தாதபத்தினியே பழுதுபடாரத்தினமே
என்னுயிர்மாளுதையோ வந்திழைக்குயாருரைப்பார்
பத்தாநான்மாளுரண்டி பத்தினிக்குயாருரைப்பார்
மாலைபரிபோகுதடி மணவாளன்மாளுகிறேன்
கூறைபரிபோகுதடி கொற்றவனார்மாளுகிறேன்
பத்தினியுமெய்யானால் பக்கத்துணைவந்திரென்றார்
கர்ணகியுமெய்யானால் கடுகத்துணைவாருமென்றார்
அப்போதுகெங்கை யரிவையருந்தான்பார்த்து
பத்தினியாள்புருஷன்தன்னை கொன்றாலேபாவம்வரும்
என்று-ஆற்றிலொதுக்கிவிட்டு அக்கரையில்தள்ளினாள்

மாதகி ஆற்றில்தள்ளின கோவலர் கர்ணகியிடம் வந்து சேரல்

காவிரிப்பூம்பட்டணத்தில் கரையிலொதுக்கிவிட்டாள்
அப்போதுகோவலனை ஆணழகரேதுசெய்தார்
காத்தவனார்கண்டு களையால்விழுந்துவிட்டார்
கர்ணகியை நினைக்க காதடைப்புத்தீர்ந்ததங்கே
களைசோபந்தான்தெளிந்து எழுந்திருந்தார்கட்டழகர்
கற்கட்டுதிருக்குளத்தில் வர்த்தகனாரப்போது
அத்திமரவோரத்தில் ஆணழகர்வந்திருந்தார்
பூவாதஅத்திமரம் பூவாய்ச்சொரியுதங்கே
காயாதமரங்களுமே காய்ந்துசொரியுதங்கே
அத்திமரத்திலே ஆணழகர்தாமிருந்து
அத்திபழந்தான்பொசித்து ஆணழகன்வீற்றிருந்தார்
கர்ணகியாள்தாதியர்கள் கன்னியர்களேழுபேரும்
செப்புக்குடம்கொண்டு ஜலமொள்ளவாரார்கள்
பூவாதஅத்திமரம் பூர்த்துசொரியுதங்கே
பழமாமிகப்பழுத்து பாவையிளங்கொடியே

மரத்தின்மேலேறி பழம்பறிப்போமென்றுசொல்லி
அண்ணாந்துபார்த்தார்கள் அரிவையிடதாதியர்கள்
திருப்பதிதிம்மனைப்போல் திகைதப்பிவந்துதடி
இந்தமரந்தனில் இருக்குதடி திம்மனது
எல்லாரும்பார்க்கலுற்ருர். இன்பமுடன் திம்மனைத்தான்
தலையிரங்கிக்கொண்டு நின்ருர் தனஞ்சயருமப்போது
அதிலேயொருதாதியவ ளன்பாகத்தான்பார்த்து
குரங்கல்லகுரங்கல்ல கோவலனுரென்பார்கள்
கர்ணகியாள்தன்னுடைய கணவனிவனென்பார்கள்
பத்தினியாள்தன்னுடைய பார்த்திபனென்பார்கள்
வெடிமான்சிலையழகன் மூத்தவிற்கும்வர்த்தகண்டி
கலைமான்சிலையழகன் கப்பலோட்டும்வர்த்தகண்டி
என்றுசொலித்தாதியர்க ளேந்திழைமாரோடிவந்தார்
கர்ணகிமுன்னேவந்து கைகட்டித்தெண்டனிட்டார்
மாலையிட்டஉன்கணவன் மனவாளன்வந்தார்காண்
தாலிதரித்தவுந்தன் தனஞ்செயனுர்வந்துவிட்டார்
கூறைதரித்தநல்ல கோவலனுர்வந்தார்காண்
என்றுமிகச்சொல்லையிலே ஏந்திழையாள்தான்கேட்டு
பல்லக்குதான்கொடுத்தாள் பைங்கொடியாளப்போது
கட்டுவர்க்கம்பூஷணமுங் கர்ணகியாள் தான்கொடுத்தாள்
அலங்காரஞ்செய்து அழைத்துக்கொண்டுவாருமென
அப்போதுதாதியர்கள் அன்பாகவோடிவந்து
அத்திமரத்திலிருக்கும் ஆணழகர்கோவலரை
தாழயிரங்குமென்ருர் தையலந்ததாதியர்கள்
அம்மணமாகவேதான் எப்படிக்கிரங்கிடுவேன்
அங்கவஸ்த்திரமொன்று அன்பாகவிட்டெறிந்தார்
தன்மேலேபோட்டுக்கொண்டு தாழயிறங்கிவந்தார்
அந்தக்குளத்தில் அன்பாகத்தான்முழுகி
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
சிவசிவாமென்றுமே சிவனுரைத்தோத்தரித்து

அரகராவென்றுமே ஆண்டவனைத்தோத்தரித்து
ஆடையுமாபரணம் அடங்கலுந்தானணிந்து
பல்லக்கின்மேலாக பட்டணத்தாரேறினரே
பல்லக்குதானெடுத்து பாங்கியர்கள்வாராரே
காவிரிப்பூம்பட்டணத்தில் கன்னியர்கள்வாராரே
அரண்மனைக்குள்ளாக அவர்களிறக்கிவிட்டார்
கோவலனுருமங்கே கொப்பெனவேதானிறங்கி
தலைக்கடைத்திண்ணையிலே தனஞ்சயனுமுட்கார்ந்தார்
தாதியர்களோடிவந்து தையலர்க்குத்தெண்டனிட்டு
மணவாளர்வந்தாரென்று மங்கையர்கள்தானுரைத்தார்

கர்ணகி தன்புருஷனைக் காணுதல்.

அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குகர்ணகியாள்
அவரழகைப்பார்ப்போமென்று ஆரணங்குவாராளே
அல்லார்தலைகூந்தல் அறுபத்துமூன்றுமுழம்
கர்ணகியாள்கூந்தலது கணக்குமிதங்களில்லை
கூந்தல்விரித்தாளே கொடியிடையாள்கர்ணகியும்
தேகமெல்லாம்மறைத்து தேன்மொழியாள்வாராளே
தலைக்கடைதிண்ணையண்டை தையலரும்வந்துநின்றாள்
கோவலர்தன்னழகை கொடியிடையுந்தான்பார்த்து
என்னைவிட்டுப்போனீரே என்னவரம்பெற்றுவந்தீர்
மாதவியாள்செய்ததெல்லாம் மன்னவரேசொல்லுமென
கூத்தியார்செய்ததெல்லாம்கொற்றவரேசொல்லுமென
வைப்பாட்டிசெய்ததெலாம் வர்த்தகரேசொல்லுமென
தீயாயெரித்திடுவேன் தேன்மொழியாள்கர்ணகியும்
கல்லாகமண்ணாகக் கரியாகச்செய்திடுவேன்
அவள்செய்தஅக்ரமத்தை ஆணழகர்சொல்லுமென்றாள்

கோவலனார் தன்பெண்சாதியுடன் வசனித்தல்.

அப்போதுகோவலனாரணழகன்தான்பார்த்து
காதையடைக்குது களைபாய்வருகுதடி
பசியதுமெத்தனுக்குப் பற்றிப்பிடுங்குதடி

என்பசியைத்தீர்த்தால்இனியெல்லாஞ்சொல்லுகிறேன்
அப்போதுகர்ணகியும் ஆரணங்குதானெழுந்து
அவ்வசனந்தான்கேட்டு ஆணழகரேதுசொல்வார்
தாதிகையால்சமைத்தால் சாதமுண்ணமாட்டேனென
பத்தினியாள் நீசமைத்தால் பட்சணஞ்செய்வேனென
அப்போதுகர்ணகியா ளாரணங்கேதுசொல்வாள்
சுட்டசட்டிதொட்டறியேன் சோற்றுப்பதமறியேன்
ஆக்கவகையறியேன் ஆளனுக்குப்போட்டறியேன்
எப்படிக்குசாதந்தான் இனிவாய்ச்சமைத்திடுவேன்
தாதிகளைத்தானழைத்து தைலந்தக்கர்ணகியும்
செப்புகுடமெடுத்து சலத்துக்குவாராளே
பத்தினியுமுன்னடக்க பாவையர்கள்பின்னடக்க
பவளக்கட்டுதிருக்குளத்தில் பாவையர்கள்வாராரே
முழங்கால்சலத்திலே மெல்லியர்கள்வந்துநின்று
அட்டாளுஞ்சொக்கலிங்கம் ஐயரைதானினைந்து
மதுரைவாழ்சொக்கலிங்கம் மகாதேவரை நினைந்து
அங்கயற்கண்மீனாட்சி அம்மனைத்தானினைந்து
நான்-பத்தினிமெய்யானால் பலிக்கவேணுமென்சாபம்
என்று-பெருவிரல்தன்னாலே சுழட்டினாள்கங்கைதனை
செப்புக்குடம்போல் திரண்டதுகங்கையது
மாளிகைக்குள்ளாக மங்கையரும்வந்தாளே
வன்னசம்பாதன்னரிசி தீட்டியுலையிலிட்டாள்
முத்துப்போல்சாதமது வைத்தாளேமொய்குழலாள்
நந்தியென்னும்பூசணிக்காய் நாலுவிதஞ்சமைத்தாள்
புடலங்காய்சமைத்தாள் பீர்க்கங்காய்பொரியலிட்டாள்
பத்துவிதக்கரியும் பதினெட்டுப்பச்சடியும்
எட்டுவிதக்கரியும் இயலானபோசனமும்
பச்சென்றகீரையும் பாங்கான துவையல்களும்
அவிட்டல்துவட்டல்களும் ஆனதொருகூட்டமுதும்
சாற்றமுதுகட்டமுதும் சரிகுழலாள்தான்சமைத்தாள்
அழகாகத்தான்சமைத்து அடுக்கிவிட்டுமூடியவள்

ஆணழகன்முன்பாக அரிவையருமோடிவந்து
பாலனயதுகைகொடுத்தாள் பட்டணத்தார்கோவலர்க்கு
பாளைகொண்டுபல்விளக்கி வோலைகொண்டுநாவழித்து
வசந்தநீர்தான்கொடுத்து மதிமுகத்தைசுத்திசெய்து
பூஞ்சபண்ணுமண்டபத்தில்புண்ணியனார்வந்துநின்று
நாலிரண்டுமெந்திரமாய் நடத்தினான்பூசைதன்னை
பூசைமுடிந்தது புண்ணியனார்கோவலர்க்கு

கர்ணகி தன் புருஷனுக்கு அன்னமிடுதல்.

வாழையிலைபோட்டு வட்டித்தாள்சாதங்கறி
எட்டுவிதக்கறிகள் இருபத்தோர்பச்சடியும்
பத்துவிதக்கறியும் பாங்கானபச்சடியும்
அவிட்டல்துவட்டலது ஆனதெலாந்தான்படைத்து
வெந்நீரும்மோரும் விதமாகவைத்தார்கள்
தாதிகளோடிவந்து தனஞ்செயரைத்தானழைத்தார்
போசனம்பண்ணுகிறார் பொற்கொடிமார்தாதியர்கள்
கூட்டிக்குழப்பியே கொற்றவனுந்தானுமப்போ
ஒருவுண்டைதான்வைத்தா ருத்தமனார்வாய்தனிலே
அப்போதுகோவலர்க்கு ஆர் நினைவுவந்ததுபார்
ஆசைதந்தமாதகியை அரிவையரைத்தானினைந்து
போசனமுண்ணுமற் புண்ணியருந்தானினைந்து
ஆணையைத்தான்மறந்து அறியாமல்சாதமுண்டேன்
என்றுசொல்லிகோவலனு மிருந்துவிட்டார்மர்மமாக
அப்போதுகர்ணகியாள் ஆரணங்குதான்பார்த்து
கர்ணகைவேம்பானேன் கைசாதம்வேம்பாச்சோ
பத்தினிவேம்பானேன் பகர்ந்தசாதம்வேம்பாச்சோ
எடுத்துப்பொசியுமென்று ஏந்திழையாள்சொன்னாளே
பத்தினியும்வேம்பல்ல பகர்ந்தசாதம்வேம்பல்ல
உத்தமியும்வேம்பல்ல உற்றஅன்னம்வேம்பல்ல
ஆசைதந்தமாதகிக்கு அரிவையட்க்குத்தானுமிப்போ
மாதகியாள்தனக்கு மாக்காற்பொன்கொடுக்கவேணும்

கடன்பணத் துவழிசொன்னால்; கைசாதமுண்பேனே
கையிலேகாசுமில்லை கடன்கொடுப்பாராருமில்லை
மடியிலொருகாசுமில்லை வர்த்தஞ்செய்வோமென்றால்
அவள்கடன்கொடுப்பதெப்போ வீட்டுக்குவாரதெப்போ
என்கையிலொன்றுமில்லை என்னுடையபுண்ணியரே

கோவலர் கர்ணகியைச் சிலம்பு கேட்குதல்.

காற்சிலம்புதந்தாயானால் கனமதுரைவிற்றுவாரேன்
மணிச்சிலம்புதந்தாயானால் மதுரையில்விற்றிவாரேன்
பொற்சிலம்புதந்தாயேல் பொன்மதுரைவிற்றுவாரேன்
செஞ்சிலம்புவிற்றுமே தெய்வதாசிகடன்கொடுப்பேன்
காற்சிலம்பைதாருமென்று கட்டழகன்கேட்கலுற்றான்
கூடப்பிறந்ததொரு கொடியிடையாள்காற்சிலம்பை
கண்ணறிந்ததில்லை கடைத்தெருவிற்போனதில்லை
செட்டியறிந்ததில்லை திராசில்வைத்து நிறுத்ததில்லை
கொல்லனறிந்ததில்லை குண்டுவைத்து நிறுத்ததில்லை
ஒட்டாணிதானுமில்லை உத்தமியாள்காற்சிலம்பு
எப்படிக்குநான்கழட்டி இதமாக்கொடுப்பேனென்றாள்
அட்டாளுஞ்சொக்கரையு மம்மனையுந்தானினைத்தார்
மதுரைவாழ்சொக்கரையு மன்னனையுந்தானினைத்தார்
சொக்கர்கிருபையாலே திருகாணியுண்டாச்சு
ஒட்டாணியுண்டாச்சு உத்தமனார்கிருபையாலே

கர்ணகி சிலம்புகழட்ட அச்சிலம்பு புலம்புவது.

திருகாணியில்கையிட்டு தேன்மொழியாள்வாங்கையிலே
வாயைத்திறந்துதான் மணிச்சிலம்மென்னசொல்லும்
கழட்டாதேகர்ணகியே கணவனுக்குதீம்புவரும்
தென்மதுரைபோனானால் செத்துமடிந்திடுவார்
வடமதுரைபோனானால் மாண்டுமடிந்திடுவார்
இந்தப்பயணத்தால் இனித்திரும்பப்போறதில்லை
மதுரைக்குச்சென்றாலே மறுத்துவாப்போறதில்லை
என்றுசொல்லிசெஞ்சிலம்பு அழுதுபுலம்புகுது

காணுதுபோலேயல்லோ கண்டுவிட்டாள் கர்ணகியாள்
மணிச்சிலம்பழுகிறதை மயிலணையாள் தான்பார்த்து
மதுரைக்குப்போனாலே மாண்டுமடிவீரென்று
மாண்டுமடிவீரென்று மணிச்சிலம்புசொல்லுகுது
ஆகையால்தென்மதுரை ஆணழகாபோகாதே
குற்றாலங்குறநாடு கொற்றவரேபோய்வாரும்
கும்பகோணம்மாயவரம் குறதேசம்போய்வாரும்
மதுரைக்குப்போகாதே மன்னவரேயென்றுரைத்தாள்
செத்தாலுந்தென்மதுரை சிலப்புவிற்றால் நல்லதடி
என்சிலம்புநானெடுத்தா லெனக்குப்பகைவருண்டோ
அல்லதுதிருடவேணும் அணிமதுரைபட்டணத்தில்
என்சிலம்பைவிற்றாலே எனக்குப்பகைவருகுதென்றால்

கோவலர் சிலம் பெடுத்து வருகையில் கர்ணகி பின் தொடர்ந்தது.

சிலம்பைமெள்ளவேயெடுத்துசெட்டியார்தானெழுந்து
மதுரைக்குபோவனென்று வர்த்தகரும்தானெழுந்தார்
நான்கூடவாரேனென்று கர்னகியும்பின்தொடர்ந்தாள்
உன்கூடவாரேனென்று உத்தமியுங்கூறலுற்றாள்
தனந்தேடப்போமிடத்தே தார்குழலேவரலாமோ
பொருள்தேடப்போமிடத்தே பொற்கொடிவரலாமோ
நீ-இங்கேயிருமென்று எழுந்தாரேகோவலரும்
அப்போதுகர்ணகியா ளழகுபெண்ணேதுசொல்வாள்
நீ-போகிறவிடத்துக்கு நான் கூடவருவேனென்றாள்
நான்கூடவாரேனென்று நலமாகவெழுந்திருப்பாள்
மாளிகைக்குள்புகுந்து மங்கையற்குசொல்லிவிட்டாள்
தீவிரமாய்வருவேனென்று தெருத்திண்ணையில்வந்து
இனியிருந்தால்வருவாளென்று எழுந்தேடக்கலுற்றான்
பையெடுத்துதோளில்வைத்து பட்டணத்தார்வாராரே
காதவருந்தூரங் கட்டழகர்வாராரே
அந்தப்புரம்போன ஆரணங்குகர்ணகையாள்

தாதியற்குச்சொல்லிவிட்டு தையலரும்வந்துநின்ருள்
வர்த்தகனைக்காணுமல் மங்கையவளேதுசொல்வாள்

கோவலர் தனித்துப்போனதால் கர்ணகி சாபமிட்டு புருஷனைக்கண்டு இருவரும் போகுதல்.

காதவழிதூரங் கடுகெனவேபோரானே
அவர்போனவழியிலொரு குத்துக்கல்காணவேணும்
ஐந்தெழுத்தும்பாவனையாய் அரிவையர்தோணவே
பத்தெழுத்தும்பாவனையும் பாவையர்போல்தோணவே
திருக்கடையூர்பட்டணத்தில் தெய்வரம்பைமாதகியாள்
அழகுதுலங்கவேணும் ஆனந்தங்கொஞ்சவேணும்
வடிவுதுலங்கவேணும் வடிவழகுகொஞ்சமேணும்
என்றுமிகக்கர்ணகியா ளிட்டாள்பெருஞ்சாபம்
பத்தினியாள்சாபமிடப் பாவையர்போல்தோணுது
இதைக்காணுதுபோலே கண்டுவிட்டார்கோவலரும்
ஆசைதந்தமாதகியே அரிவையரேஏண்டிவந்தாய்
சுகந்தந்தமாதகியே சுந்தரியேஎங்கேவாராய்
திருக்கடையூர்தானிருந்து தேன்மொழியேவந்ததென
உன்னுடையகடனுக்காக உத்தமியாள்சிலம்பெடுத்து
காற்சிலம்புதானெடுத்து கனமதுரைவிற்கப்போரேன்
வழிமறுக்கவந்ததென்ன மங்கையிளங்கொடியே
காலுமிகக்கடுக்க கணுக்காலுங்கொப்பளிக்க
வெய்யலிலுங்கானலிலு மெல்லியரேவந்ததென்ன
மூத்தானவாய்திறந்து உத்தாரஞ்சொல்லும்பெண்ணே
வாயைத்திறக்கவில்லை மறுவார்த்தைபேசவில்லை
தாளைத்திறக்கவில்லை தனிவார்த்தைபேசவில்லை
ஏண்டிபெண்ணேபெண்மயிலே இத்தனைகோபமென
கட்டித்தழுவினுர் கனிவாயைமுத்தமிட்டார்
கட்டியணைக்கையில் கன்னியுடதேகமது
சேர்த்துஅணைக்கையிலே தேன்மொழியாள்தேகமது
கல்லாவுறுத்துதென்று கட்டழகரப்போது

என்றுசொல்லிக்கோவலனு மேந்திழையைப்பார்க்க
கர்ணகிசாபமிடக் கல்லாகத்தோணுகுது
வெடிமான்சிலையழகன் மூத்துவிற்குவியாபாரி
பேரஞ்செய்யப்போமிடத்தே பெண்ணுள்வரலாமோ
தனந்தேடப்போமிடத்தே தையலாள்வரலாமோ
வீட்டிலேயுன்னைவிட்டு மெல்லியரேவந்தேனே
வீட்டைவிட்டுஏன்வந்தாய் மெல்லியிளங்கொடியே
என்னொத்தவர்த்தகர்க ளென்னைமதியார்கள்
சரியொத்தவர்த்தகர்கள் சற்றுமதியார்கள்
ஆனலும்வாடியென்று ஆணழகர்முன்னடத்தார்
ஆணழகர்முன்னடக்க அரிவையரும்பின்னடக்க
காடுமலைகளெல்லாம் கடுகெனவேதானடந்து
சில்லென்றகாடுஞ்செடியும்வனந்தாண்டி
வாராரிருவர்களும் வனமாய்வனந்தாண்டி
மதுரைக்குநேரே வருகின்றகாலையிலே
பத்தாதபத்தினியும் பழுதுபடாரத்தினமும்
குற்றமற்றமெய்ரதியாள் கோவிலிங்கிசீர்மகளும்
வர்த்தகரைப்பார்த்து மயிலனையாளேதுசொல்வாள்
செட்டியாரைப்பார்த்து தோகையவளேதுசொல்வாள்
காதவழிநடந்து கால்களெல்லாம்நோகுதையா
தூரவழிதானடந்து தொடைகளெல்லாம்நோகுதே
எடுத்தடிவைப்பமென்றால் இனிநடக்கக்கூடவில்லை
தண்ணீரதுதாகம் தாங்கமுடியவில்லை
நீருண்மேல்தேகமது நிற்கமுடியவில்லை
தண்ணீர்கொடுவந்தால் தையலரும்நான்பிழைப்பேன்
என்றுசொலிகர்ணகையா ளேந்திழையாள்கேட்கையில்
பெண்சாதிகால்கட்டு பிள்ளையொருகால்கட்டு
கட்டுசாதமூட்டை கைக்குக்கனமென்பார்கள்
அப்படியேஆச்சுது ஆரணங்கேயிப்பொழுது
இந்தவனந்தனிலே யெங்குகொண்டுநான்வருவேன்

என்றுசொலிக்கோவலனர் இட்டுக்கொண்டுவர்ராரே
எட்டிவனச்சோலையிலே ஏந்திழையைக்குந்தவைத்தார்
கெண்டிகையைத்தானெடுத்து ஜலத்துக்குவாராரே
அந்நேரவேளையிலே அவ்வனத்தில்வாழுகின்ற
எதிர்காட்டுக்கள்ளரவரேழுபேர்வாராகள்
வெட்டிகிளைபறிக்கும் வேடர்கள்வாரார்கள்
குத்திக்கிளைபறிக்கும் குலவேடர்வாரார்கள்
பச்சைதலையிலது பவளம்பூளைத்ததுபோல்

கோவலர் தண்ணீர்க்குப்போகக் கள்ளர் கர்ணகியை மடக்குதல்.

கர்ணகியாள்தன்னிடத்தில் கள்ளர்கள்வாரார்கள்
ஆறுபேர்வந்துநின்ருர் ஆரணங்குமுன்பாக
ஆறுபேருக்கிளையான் ஆனதொருகள்ளனவன்
மரத்தின்பேலேறியே ஆள்வரவுபார்க்கலுற்ருன்
அப்போதுகர்ணகையாளாரணங்குதான்பார்த்தாள்
ஆபரணம்தாருமென்று ஆரணங்கைகேட்கலுற்ருர்
உன்னைக்குத்தியெரிந்திடுவேன் கோடாலிக்காம்பாலே
வெட்டியெரிந்திடுவேன் வீரமணிவாளாலே
என்றுசொல்லிகள்ளரவரெதிராகவந்துநின்ருர்
அப்போதுகர்ணகையாளாரணங்குதான்பார்த்து
உச்சியிலேதானிருந்து உள்ளங்கால்தொடங்கி
பூட்டியிருந்தஆபரணம் பொட்டெனவேதான்கழட்டி
தாலிதவிர மற்றதெல்லாம்தான்கழட்டி
கள்ளருக்குமுன்வைத்தாள் கர்ணகையாள்பத்தினியும்
எடுத்துக்கொடுபோங்களென்ருளேந்திழையுமப்போது
மரத்தின்மேல்நின்றவர்கள் மன்னவரைத்தான்பார்த்து
இந்தசெட்டிஉடமையிலே சேர்ந்தார்க்குமெத்தவுண்டு
வர்த்தகனுடமையிலே மாற்றுக்குறைச்சலுண்டு
பத்தரைமாற்று பசும்பொன்னுத்தங்கமது
சூரியன்போலாகத் துலங்குதுமங்கியும்

மங்கிலியம்வாங்கிவா வேண்டுமென்றானப்பொழுது
அவ்வார்த்தைதான்கேட்டு ஆறுபேரோடிவந்து
மங்கிலியந்தாருமென மன்னவர்கேட்கலுற்றார்
அப்போ-கோபம்பிறந்தது கொம்பேரிடையாட்கு

கர்ணகி கள்ளருக்குச் சாபமிடுதல்.

ஆறுபேர்கள்ளர்களை அன்பாகத்தான்பார்த்து
அவர்- குத்துக்கலாகப்போக கொடுத்தாளேசாபமது
பத்தினியாள்சாபம் பலித்ததுகாணப்பொழுது
கட்டாகநின்றார்கள் கட்டழகராறுபேரும்
வௌவாலாய்தொங்கவென்று மாதுசாபமிட்டாளே
அப்படியேதொங்குகிறார் ஆணழகராறுபேரும்
அந்தச்சமயத்திலே ஆணழகர்வாராராம்
செம்புஜலங்கொண்டு தீவிரமாய்வாரார்காண்
அண்டையிலேவந்துநின்றார் ஆணழகர்கோவலனார்
ஆறுபேர்கல்லா யிருக்கிறதைக்கண்டாரே
இவர்-ஆரடிமெண்ணேயென்று அரிவையரைக்கேட்க
ஆபரணங்கேட்டாரிந்த ஆறுபேர்கள்ளர்களும்
வெட்டியெறிவோமென்றார் வேடர்களாறுபேரும்
அஞ்சிப்பயந்துநான் ஆபரணந்தான்கொடுத்தேன்
தாலியைவேண்டுமென்று சண்டாளர்கேட்டார்கள்
ஆறுபேர்கள்ளரைத்தான்கல்லாச்சமைத்துவைத்தேன்
மரத்தின்மேல் நின்றவனை வௌவாலாச்சமைத்தேனே
என்றுசொலிகர்ணகியும் எடுத்துரைத்தாள்கோவலற்கு
அப்போதுகோவலனார் அரிவையரைத்தான்பார்த்து
எழுப்பிவிடச்சொன்னாராம் இன்பமுள்ளவர்த்தகரும்

கர்ணகை கல்லாய்ச்சமைத்த கள்ளர்களை எழுப்பியது.

அப்போதுகர்ணகையா ளரிவையருமேதுசொல்வாள்
கல்லாய்ச்சமைத்தவரை கடுகவெழுப்பிவிட்டாள்
எப்போதும்போல் எழுந்தார்கள்கள்ளரெல்லாம்

கர்ணகையாள் முன்னேவந்து கட்டழகர்தெண்டனிட
ஆறுதப்புநூறுபிழை அடியார்கள்செய்ததெல்லாம்
கோடிதப்புமனம்பொறுத்து கொண்டாணக்கவேண்டும்
அப்போதுகர்ணகையா ளாயனங்கேதுசொல்வாள்
ஒப்புவெரொட்டாக உத்தமரேபோங்களென்ருள்
இப்படிக்குச்சாபமது தந்தாளாங்கர்ணகையாள்
இருவருந்தானெழுந்து வாரார்கள் மதுரைக்கு

சொக்கருடைய ஆலயத்தைக் கோவலரும் கர்ணகையும் கண்டது.

மதுரைக்குச்சமீபமது வருகின்றவேளையிலே
தோற்ருதுபோலேயலலோ தோற்றுகுதுமதுரையது
அதுபோலேதோற்றுவது யாருடையதோற்றங்கள்
அடி-பிட்டுக்குமண்சுமக்கும் பேபாண்டிசொக்கரடி
சொக்கரவராலயந் தோகைபரேயென்றுரைத்தார்
அங்கயற்கண்மீனாட்சி அம்மனுடவாலயந்தான்
அப்பாலேதோற்றுவது யாருடையவாலயந்தான்
மருந்திலாப்பிணிதீர்க்கும் வயித்தீசநாதரடி
அப்பாலேதோற்றுவது யாருடையவாலயங்கள்
கள்ளக்குருக்களவர் கள்ளவிநாயகராம்
அப்பாலேதோற்றுவது யாருடையவாலயங்கள்
தானுய்முளைத்தெழுந்த தாயுமானஜம்புலிங்கர்
அப்பாலேதோற்றுவது யாருடையவாலயங்கள்
ஆயிரம்பாண்டியர்கள் அணிதிரளாமன்னவர்கள்
பாண்டியர்களாலயங்கள் பைங்கொடியென்றுரைத்தார்
முன்பாகத்தோற்றுதே ஆருடையவாலயங்கள்
மானுமதுரையது வண்ரோந்தெப்பக்குளம்
என்றுமிகத்தானுரைத்தார் வர்த்தகனுங்கோவலரும்
இப்படிக்குச்சொல்லியே இருவருமப்போது

கர்ணகி விநாயகரை ஆருடங்கேட்டு அவர் சொல்லியது.

கள்ளவிநாயகர்முன் கர்ணகையாளோடிவந்து
கைகூப்பிதெண்டனிட்டு கர்ணகையாள்கேட்கலுற்ருள்
சிலம்புகொண்டுவாராரே செட்டிப்பிள்ளைகோவலனர்
அவர்சிக்குசிலுவில்லாமல் திரும்பிவருவாரோ
இழும்புகளில்லாமல் இவர்வந்துசேருவாரோ
வாயைத்திறக்கவில்லை மறுவார்த்தைபேசவில்லை
தாளைத்திறக்கவில்லை தனிவார்த்தைபேசவில்லை
மௌனமாய்த்தானிருந்தார் மங்கையற்குமுன்பாக
கோபம்பிறக்குதங்கே கொடியிடையாள்கர்ணகிக்கு
அடிமடியில்கைபோட்டு அம்பலத்திலிழுக்கலுற்ருள்
சொல்லுகிறேமென்றவர் சொல்லுகிருர்விநாயகரும
இந்தந்ப்பயணம் இனிமதுரைபோவாரானல்
மாண்டுமடிந்திடுவார் வரப்போவதில்லையென்ருர்
துரும்பெடுத்துமேல்போடுந் துன்மார்க்கமதுரையது
நிந்தையிட்டுதலைவெட்டும் நீதியில்லாதென்மதுரை
இந்தமதுரைக்கு இனிப்போனலுன்கணவன்
இனிதிரும்பப்போறதில்லை இயலானவுன்புருஷன்
தட்டானேதாயாதி பாண்டியனேபங்காளி
மூத்தமகனென்று அவனுடையபிள்ளையென்பான்
வாத்தியாரடித்ததினல் வனம்போனபிள்ளையென்பான்
ஒப்பாரிகொண்டு உறவுசொல்லித்தானழைப்பான்
கட்டினகட்டோடே கச்சேரிகொண்டுபோவான்
நீதிகோளாப்பாண்டியர் நிற்கத்தலைவெட்டிவைப்பார்
பழிகாரமதுரைதேடிப் பட்டணத்தார்போனலே
இறந்துமடிந்திடுவார் இனித்திரும்பப்போரதில்லை
பின்வருங்காரியத்தை முன்னமேசொல்லிவிட்டேன்
என்றுவிநாயகரும் எடுத்துரைத்தார்கர்ணகிக்கு
அவ்வசனங்கேட்டு அரிவையரும்வாராளே
கோவலனர்முன்னே கொம்பனையாள்வந்துநின்ருள்

விநாயகர்சொன்னதெலாம் விபரமாய்த்தானுரைத்தாள்
கட்டழகர்கோவலற்கு கர்ணகியாள் தானுரைத்தாள்
இவ்வசனங்கேட்டு இன்பமுள்ளகோவலனர்
எழுந்துநடந்தாராம் இயலாகவப்போது
மதுரையைத்தான்தேடி வாராரேகோவலனர்
யானுமதுரையது வண்டோன்தெப்பக்குளம்
இந்தநல்லபட்டணத்தில் அடைக்கலமாய்வைக்க
ஆர்வீடுதேடியுன்னை அடைக்கலமாய்வைப்பேண்டி
வெள்ளாழன்வீடுதேடி மெல்லியரேவைக்கட்டுமோ
வெளாழன்வீட்டில்வைத்தால் வேலைகள்மெத்தவுண்டு
முப்போகம்விளைந்தாலும் உப்புக்குநெல்லில்லையென்பர்
ஆர்வீடுதேடிவைப்பேன் அரிவையரேஉந்தனையே
வன்னியாவீடுதேடிப் பாவையரேவைப்பேனோ
ஏருழும்வேளையிலே நாற்றுநடவாருமென்பார்
ஆர்வீடுதேடியுன்னை அடைக்கலமாய்வைப்பேண்டி
கோமுட்டிவீடுதேடி கொம்பனையேவைப்பேனோ
கடைவிற்கும்வேளையெலாம் கடைவிற்கவாடியென்பார்
சேணியர்வீடுதேடி தேன்மொழியேவைப்பேனோ
தறிபேடும்வேளையெலாம் நூலிழைக்கவாடியென்பார்
செட்டியார்வீடுதேடி தேன்மொழியேவைப்பேனோ
அரைக்கமிளகிடுவார் அரைக்கணக்கெழுதிவைப்பார்
கறிக்குமிளகிடுவார் கால்கணக்கெழுதிவைப்பார்
விருந்தாளிவந்தாலே வருந்தியுலைவைக்கமாட்டார்
ஆர்வீடுதேடியுன்னை அடைக்கலமாய்வைப்பேண்டி
இப்பெரியபட்டணத்தில் இடையர்வீடில்லையோதான்
இடையர்வீடுவைத்தாலே பசியாதுமோர்குடிப்பேன்
என்றுமிகவுரைத்து இருவரும்வாராரே
வைகைக்கரையோரம் வந்துநின்றாரிருவருமாய்
அந்தச்சமையத்திலே ஆச்சியவள்சுத்திடைச்சி
தயிர்ப்பானைதானெடுத்துத் தையலரும்வாராளே

அட்டாளுஞ்சொக்கரென்று ஆச்சிமனதிலெண்ணி
அடிவணங்கிதெண்டனிட்டான் ஆணழகர்கோவலரை
வந்துபணிந்தவளைக் கண்டந்தகோவலனுர்
சிவசிவாவென்று திருச்செவியில்கையைவைத்தார்
அரகராவென்று அருஞ்செவியில்கையைவைத்தார்
ஆரென்று நீபணிந்தாய் அரிவையிளங்கொடியே
சொக்கரல்லசொக்கரல்ல சாதியிலேச்செட்டிப்பிள்ளை
கூத்திகடனுக்காகக் கொண்டவள் சிலம்பெடுத்து
கொண்டவள்சிலம்பி கொடிமதுரைவிற்கவந்தேன்
என்பேருகோவலனுர் என்கூத்தியார்மாதகியாள்
கூத்தியார்மாதகியாள் கொண்டவள்பேர்கர்ணகியாள
கூத்தியார்கடனுக்காக கொடிசிலம்புகொண்டுவந்தேன்
இந்தமதுரையிலே இன்பமுடன்விறகவந்தேன்
என்றுமிகச்சால்லையிலே எழுந்தாளே ஆச்சியம்மாள்
அந்தப்புரத்துக்கு அரிவையரும்வாராளே
ஆச்சிக்குமுன்பாக அழகுள்ளகோவலரும்
கர்ணகியாள்மாதரும் கடுகெனவேவாரார்கள்
ஆச்சியம்மைதன்மனைக்குள் அன்பாகத்தானுழைந்து
தலைக்கடைதிண்ணையிலே தனஞ்செயனுருட்கார்ந்தார்
கர்ணகியாளைப்பார்த்து கட்டழகரேதுசெல்வார்
பசியாயிருக்குதடி பாவையிளங்கொடியே
பசியிளப்பத்தீர்ந்துவிட்டால்பட்டணம்போய்வாரேன்
செஞ்சிலம்பைவிற்றுநான் தேன்மொழியேவாரேனே
அவ்வார்த்தைகேட்டு அருங்கிளியாளேதுசெய்தாள்
கையிலேகாசுமில்லை கடன்கொடுப்பாராருமில்லை
எப்படிக்குசாதம்நான் இதமாகச்செய்வேனென்ருள்
ஆச்சியிடத்தில்வாங்கி அரிவையரேசமையல்செய்யும்
ஆச்சியரைப்பார்த்து அரிவையுமேதுசொல்வாள்
இளைப்பாகத்தானிருந்தார் என்கணவன்கோவலனுர்
அமுதுபடிதந்தாலே ஆணழகர்கோவலர்க்கு

சமையல்செய்துபோடுகிறேன் தையலரத்தையரே
அமுதுபடிகாய்கறிகள் அத்தனையுந்தான்கொடுத்தாள்
பானைகழுவி பனிநீருலைவார்த்து
முத்துப்போல்சாதம் வடித்தாளேமெல்லியரும்
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
எட்டுவிதக்கறியும் இருபத்தோர்பச்சடியும்
புத்துருக்குநெய்யும் பொன்போல்சிறுபருப்பும்
அத்திவிறகொடித்து தித்திக்கப்பால்காச்சி
இத்தனையுஞ்செய்துவைத்தாள் ஏலக்கருங்குழலாள்
பானைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
தீர்த்தநீர்வாங்கியவர் திருமுகமுஞ்சுத்திசெய்து
வசந்தநீர்வாங்கியல்லோ மதிமுகமுஞ்சுத்திசெய்து
பூசைமுடித்தாரே புண்ணியனார்கோவலரும்
வாலையிலைபோட்டு வட்டித்தாள்சாதமது
அருங்கறிபோஜனமும் அன்பாகத்தான்படைத்தாள்
போஜனங்களுண்டு பொடியிட்டுக்கைதிமிரி
தாம்பூலந்தரித்துக்கொண்டார் தனஞ்செயகோவலனார்
பட்டுப்பாய்போட்டாள் படுத்தாரேபட்டணத்தார்
ஆச்சியம்மையருகாக அருங்கிளியும்போய்ப்படுப்பாள்
வெள்ளிமுளைக்குதடி வெடிகோழிகூவுதடி
அப்போதுகோவலனும் ஆணழகன்தானெழுந்து
அந்நேரவேளையிலே ஆணழகரேதுரைப்பார்
கர்ணகியைப்பார்த்து கட்டழகரேதுரைப்பார்
மதுரைக்குப்போய்வாரேன் மங்கைவிடைகொடடி
ஆச்சியுடதன்வசத்தில் அடைக்கலமாய்வைப்பேனே
கர்ணகியைக்கைபிடித்து கட்டழகரேதுசொல்வார்
ஆச்சியரைத்தானழைத்து அன்பாகவேதுசெல்வார்

கோவலர் கர்ணகியை ஆச்சியிடத்தில் ஒப்பிவித்தது.

கர்ணகி அடைக்கலக்கும்மி.

கர்ணகியுந்தனடைக்கலமம்மா
காரிகையுந்தனடைக்கலமம்மா
பத்தினியுந்தனடைக்கலமம்மா
பார்வதியுந்தனடைக்கலமம்மா
உத்தமியுந்தனடைக்கலமம்மா
உமையவளுந்தனடைக்கலமம்மா
ஆட்டாலேமாட்டாலே மிகுந்தவளேதாயே
ஆபனையென்னாளும் மிகுந்தவளேதாயே
மாயனையெந்நாளும் வளர்த்தவளேதாயே
மதுரைக்குநான்போய் வருமளவுந்தாயே
மயிலனையாளுந்த னடைக்கலமம்மா
தென்மதுரைநான்போய் வருமளவுந்தாயே
தேன்மொழியாளுந்த னடைக்கலந்தாயே
கனமதுரைநான்போய் வருமளவுந்தாயே
கர்ணகியுந்த னடைக்கலமம்மா

கர்ணகியைத்தான்பிடித்து காரிகையாள்கைகொடுத்தார்
சிலம்பெடுத்துதோளில்வைத்து செட்டியார்தானங்கு
கர்ணகியைத்தான்பார்த்து கனமதுரைபோரேண்டி
நல்வாக்குநீகொடடி நாயகமேயெந்தனுக்கு
போய்வாருமென்றாளே பொற்கொடியாள்கர்ணகியும்
ஆச்சியரைத்தான்பார்த்து ஆணழகர்கேட்கலுற்றார்
போகட்டுமாவென்று புண்ணியருங்கேட்கலுற்றார்
போய்வாருமென்றாளே பொற்கொடியாளப்போது
கர்ணகையுமோடிவந்து கட்டழகர்முன்னே நின்று
எனக்கோரடையாள மின்பமுடன்செய்யுமென்றாள்

கோவலர் கர்ணகிக்கு அடையாளஞ்செய்தல்.

பெட்டிகொண்டுவந்துமே புண்ணியனுரே துசெய்தார்
திருவிளக்கேற்றிவைத்தார் சீரானபெட்டியிலே
மாங்கனியுமல்லிகைப்பு வைத்தாராம்பெட்டியிலே
தேங்கனியுங்கொண்டுவந்து சீராகவைத்தாராம்
சந்தனத்தைதாணுரைத்து வைத்தாராம்பெட்டியிலே
நான்மதுரைக்குச்சென்று வருமளவுமங்கையரே
தேங்காயுடையாது செம்புஜலங்குறையாது
மல்லிகைப்பூவாடாது மாங்கனியுமழுகாது
சந்தனமுலராது தையலிளங்கொடியே
வைத்தஅடையாளம் மாருமல்தானிருக்கும்
மாண்டுமடிவேனுனல் மங்கையரே நீகேளும்
திருவிளக்கு நின்றுவிடும் தேன்மொழியேபார்த்துக்கொள்
தேங்காயுடைந்துவிடுஞ் செம்புஜலங்குறையும்
மாங்கனியழுகிவிடும் மல்லிகைப்பூவாடிவிடும்
பெட்டியுடைந்துவிடும் சந்தனமும்கீப்ந்துவிடும்
இதுதானடையாள மேந்திழையேயுந்தனுக்கு
மதுரைக்குப்போவதொரு மனதில்லையென்றுசொல்ல
சிலம்பெடுத்துவைத்தாரே செட்டிபிள்ளைகோவலனுர்

கோவலனுர் வீடுவிட்டு வரும்போது துற்குறிகாணுதல்.

பல்லிபலபலென்னும் பீனமாத்திலாந்தைசீறும்
வீடுவிட்டுவெளியில்வந்தான் வாசற்படிதலையிடிக்கும்
தலைவாசல்வருகையிலே தலைப்பாகைதவறிவிழும்
அந்தசகுணம்விட்டு ஆணழகர்வெளியில்வந்தார்
குட்டியிட்டகருப்பூனை குறுக்காகவந்ததங்கே
அந்தசகுனந்தப்பி அப்பாலேவாராரே
எருமுட்டைதலைமொட்டையு மெதிரில்வரக்கண்டாரே
ஒரிகுறுக்காச்சு ஒற்றைப்பார்ப்பானெதிரானுன்
வாழாக்குமரிய்வள் மீளாநெருப்பெடுத்தால்
எண்ணைக்குடமெடுத்து எதிரில்வரக்கண்டாராம்

ஏணியுஞ்சாணுனும் எதிரில்வரக்கண்டாராம்
கட்டோலைக்கைப்பிடித்து கணக்கன்வரக்கண்டாராம்
ஆணோடுபெண்கோட்டா னலறியழக்கண்டாராம்
அசரீரிவாக்காக ஆரணங்குபுலம்புகிருள்
காராம்பறச்சியவள் கதறியழக்கண்டாராம்
மதுரைக்குபோகாயோ மாண்டிமடியாயோ
தென்மதுரைபோகாயோ செத்துமடியாயோ
என்றுசொல்லிப்பறச்சி நின்றுபுலம்புகிருள்
ஒற்றைக்குரலிட்டு ஓங்கியழுகிருளே
அத்தனையுந்தள்ளிவிட்டு ஆணழகர்வாராரே
மதுரையைத்தான்தேடி வருகின்றவேளையிலே
மதுராபுரிபட்டணத்தை மன்னவருங்கண்டுவிட்டார்
இப்பெரியமதுரையிலே யென்சிலம்பைவிற்கையிலே
மதுரைக்குள்ளாகவேதான் வடிவழகன்போனுரே
அரண்மனைகளாஸ்தான மானழகர்கண்டுவிட்டார்
கோட்டையுங்கொத்தளமுங் கோவலனுர்கண்டுவிட்டார்
கோவிலின்முன்பாக கோவலனுர்வந்துநின்ருர்
இந்தச்சிலம்பைத்தான் மதுரையிலேவிற்ருலே
செங்கல்லால்கோவில் கருங்கல்லால்கட்டிவைப்பேன்
நெருங்கின்றவீதியிலே நெருங்காதமோட்டிவைப்பேன்
அபிசேகஞ்செய்வதற்கு அபாஞ்சிதானளிப்பேன்
இப்படிக்குபிரார்த்தனைகள் செய்தாரேகோவலனுர்
சிந்தாமணிதாசிவீதி செட்டிப்பிள்ளைவாராரே

கோவலர் சிலம்புவிற்குங்கும்மி.

சிலம்போசிலம்போ சிலம்போசிலம்பு
தென்மதுரைப்பெண்டுகளா சிலம்போசிலம்பு
பச்சைச்சிலம்பையுங் கொள்வாருமுண்டோ
பசும்பொன்னுற்சிலம்பு கொள்வாருமுண்டோ
உத்தமியாள்காற்சிலம்பை கொள்வாருமுண்டோ
உமையவள்காற்சிலம்பை கொள்வாருமுண்டோ

இந்தசிலம்பை கொள்வாருமுண்டோ
இதுக்கேற்றவிலைதனைக் கொடுப்பாருமுண்டோ
தென்மதுரைபெண்டுகளா சிலம்போசிலம்பு
விலையில்லாசிலம்பை விலையொன்றாய்க்கூறி
வீசிநடந்தாராங் கோவலருமங்கே
வெள்ளானைகட்டிநான் வாழ்ந்ததுபோதும்
வேசிமருந்தாலே நொந்ததுபோதும்
தங்கானைகட்டினன் வாழ்ந்ததுபோதும்
தாதிமருந்தாலே தோற்றதுபோதும்
மூவாயிங்கப்பல் தண்ணீரிலேவிட்டேன்
கப்பலுஞ்சோங்கு கரைதட்டிப்போச்சு
வர்த்தகங்கட்டி சிலம்பெடுத்துவந்தேன்
வாழ்மதுரைதன்னில்சிலம்புகொள்வீரோ

வேறு.

இப்படியாய்கோவலரு மின்பமுடன்கூறிவாரார்
கூறிக்கூறிவாரார் கோவலச்செட்டியாரும்
சிந்தாமணிதாசியவள் தேன்மொழியாளோடிவந்து
வர்த்தகரையவள்பார்த்துவாருமென்றுதானழைத்தாள்
வாருமென்றுதானழைக்க வாராரேகோவலரும்
சிலம்பையேதாருமென்று தேன்மொழியாள்கேட்டாள்
எடுத்துகொடுக்கவே யெடுத்தாராங்கோவலரும்
வாய்விட்டழுததங்கே மயிலனையாள்பொற்சிலம்பு
பத்தினியாள்காற்சிலம்பு பரஸ்திரீக்கேற்காது
உத்தமியாள்காற்சிலம்பு உந்தனுக்கேற்காது
வாய்விட்டழுததங்கே மயிலனையாள்காற்சிலம்பு
எடுமென்றுசொன்னால் ஏந்திழையாள்சிந்தாமணி
இந்தச்சிலம்புமே எந்தனுக்குஏற்காது
ஆராறுபோடவேணும் ஆரணங்குகாற்சிலம்பு
மீனாட்சிபோடவேணும் சொக்கரவர்பார்க்கவேணும்
வள்ளியும்போடவேணும் வடிவேலர்பார்க்கவேணும்

லட்சுமிபோடவேணும் மகாவிஷ்ணுபார்க்கவேணும்
இந்தச்சிலம்புமே எந்தனுக்கேற்காது
எடுத்துமெள்ளக்கட்டுமென் றேந்திழையாளப்போது
ஆனையின்மேல்பணந்தான் அள்ளித்தருவேனென்றாள்
தாசியவள் நீகொடுக்கத் தனஞ்சயனார்வாங்குவேனே
அவளரண்மனையைவிட்டு ஆணழகர்வாராரே
நாலுபக்கந்தென்மதுரை நடுவில்பிள்ளையார்கோவில்
கோவிலிங்கிவீதிதன்னில் கோவலனார்வாராரே
சிலம்பேசிலம்போவென்று செட்டிபிள்ளைவாராரே

இராஜகன்னி சிலம்பு சொட்டையாகத் தட்டானிடங் கொடுத்தது.

இராஜகன்னிதன்சிலம்பை நாயகியாளப்போது
வஞ்சிபத்தன்கைகளிலே மயிலனையாள்தான்கொத்தாள்
சொட்டை நிமிர்த்திக்கொண்டு வாவென்றுசொன்னாரே
அவனெடுத்துக்கொண்டுபோயறிவையிடகாற்சிலம்பை
ஆரைசுவர்மீதில் வைத்தானேவஞ்சிபத்தன்
வஞ்சிபத்தன்புறக்கடையில் புளியமரத்தடியில்
கெருடனுங்கூண்டுகட்டி குஞ்சுகள் தான்பொரிக்க
குஞ்சிக்கிரைதேடப் போச்சுதுகெருடனது
அந்தச்சமயத்திலே ஆரணங்குமுத்துமாலை
அரைக்கீரைத்தானறிய வந்தாள்புறக்கடையில்
அதிலேயொருமுள்ளு அன்பாகத்தைத்துதங்கே
அய்யோசிவனேயென்று அழுதுகொண்டுவீடுவந்தாள்
கெருடனுக்கிடங்கொடுத்து காலுக்கிடராச்சு
அய்யோசிவனேயென் றழுதுகொண்டுதானிருந்தாள்
பள்ளிக்கூடம்படித்துப் பாலகர்வீடுவந்தார்
அப்போதுமுத்துமாலை அழுதுகொண்டிருக்கிறதை
அழுதுகொண்டிருக்கிறதைப் பார்த்தார்பிள்ளைகளும்
ஏனம்மா அழுகிறு யென்றுசொல்லிக்கேட்டார்கள்
அரைக்கீரையாயப்போனேன் அங்கேஒருமுள்ளைத்து
வேதனைகளாச்சுதென்று சொன்னாளேமுத்துமாலை

அந்தவிசேஷமது ஆணழகர்தான்கேட்டு
அந்தமாத்திலே ஆணழகர்தானேறி
கெருடனுடகூண்டை சீராகக்கலைத்துவிட்டார்
கழுத்தைமுறித்துக்கொண்டு கடுகவிட்டெறிந்தார
அந்தச்சமயத்தில் அன்பானகெருடனது
குஞ்சுக்கிளைதேடி கொப்பெனவேவந்துதங்கே
ஆரெடுத்தாகுஞ்சையென்று அழுதுகொண்டுபார்த்து
வஞ்சிபத்தன்மைந்தர்செய்த வேலைகளென்றுசொல்லி
பழிக்குப்பழிவாங்கவென்று பாங்கானகெருடனது
பார்த்துக்கொண்டிருந்ததங்கே பண்பானகெருடனது
அப்போதுவஞ்சிபத்த னவனுடையசெஞ்சிலம்பை
ராஜகன்னிசெஞ்சிம்பை நலமாகக்காயவைத்தான்

கெருடன்முட்டையை யுடைத்தபடியால் சிலம்பு கொண்டு போவது.

இதுதான்சமயமென்று இன்பமுடன்கெருடனது
காலாலேகவ்விக்கொண்டு கடுகவருகுதங்கே
ஏழுகடலுக்கப்பால் இருப்பாற்கடல்தனிலே
ஆயிரங்கண்ணிபுற்று ஐந்துதலைநாகமது
ஐந்துதலைநாகன்கையி லவன்சிலம்பைஒப்பிவித்து
பற்றியெடுத்துமது பாங்காகவைத்ததங்கே
ராஜகன்னிகோவிலங்கி நற்சிலம்பைகேட்கலுற்ருள்
தாரேன்தாரேனென்று தனஞ்செயனும்சொல்லலுற்ரு
அந்நேரவேளையிலே ஆருயிரம்பாண்டியர்கள்

பாண்டியர்கள் வஞ்சிபத்தனைக் கண்டிக்கிறது.

வஞ்சிநல்லபத்தன்றனை வரவழைத்தாரப்போது
இன்றையதினத்திலே சிலம்புதந்தாலாச்சுது
நாளையதினத்திலே நலமாகவுந்தனைத்தான்
யானையின்காலிலே யடைவாகப்புரட்டிடுவோம்
என்றுமிகத்தீர்ப்பு இன்பமுடன்கொடுத்துவிட்டார்
அப்போதுவஞ்சிபத்த னவ்வார்த்தைதான்கேட்டு

மனையர்களைத்தானழைத்து மன்னவனேதுசொல்வான்
என்னடிபெண்ணே நீ இளங்கொடியே முத்துமாலை
அந்தசெஞ்சிலம்புதன்னாலே தீப்புலந்துநேர்ந்ததடி
நாளையதினத்தில் நலமாகபாண்டியர்கள்
ஆனையின்காலிலே ஆணழகர்கொல்லவென்றார்
நீமஞ்சளதுதானிழந்தாய் மனமிழந்தாய்பூவிழந்தாய்
இனிஎன்னசுகமென்று எந்திழையாளுனக்குரைப்பேன்
தாலியறுத்துமந்த தையலருவிட்டெறிந்தாள்
இப்படிக்குத்தானிருக்க வின்பமுடனந்நேரம்
அந்தச்சமயத்திலாணழகர்கோவலனார்

ராஜகன்னிவீதிக்குக் கோவலர் சிலம்கூறி வந்தது.

சிலம்புவிற்றுவாபாரே தென்மதுரைகோவலரும்
ராஜகன்னிவீதியிலே நலமாகக்கூறிவாரார்
சிலம்பென்றுகூறிவாரார் செட்டிபிள்ளைகோவலனார்
மணிச்சிலம்பென்றுசொல்லி மணியழகர்கூறிவாரார்
பத்தினியாள்காற்சிலம்பு பட்டணத்தில்கொள்வாரோ
உத்தமியாள்காற்சிலம்பை யுத்தமர்கள்கொள்வாரோ
என்றுமிகக்கூறையிலே எந்திழையாள்தான்கேட்டாள்
குரலோசையிவ்வழகு கொற்றவனாரெவ்வழகோ
சிலம்புவிற்குமன்னவனை தேன்மொழியழையுமென்றாள்
தாதிமாரோடிவந்து தனஞ்செயரைத்தானழைத்து
மூன்றாம்படித்தளத்தில் வந்துநின்றார்கோவலரும்
முத்துமணைதான்கொடுத்தார் மெத்தெனவேதாதியர்கள்
இராஜகன்னிகோவிலிங்கி நலமாயெழுந்திருந்தாள்
முத்துதிறைவளைத்து மெள்ளியிளங்கொடியாள்
வர்த்தகரைத்தான்பார்த்து மயிலனைகேட்கலுற்றாள்
எந்தவூரெந்தநாடு எனக்கறியச்சொல்லுமென்றாள்
அப்போதுகோவலனாரணழகரேதுசொல்வார்
கஞ்சிகொண்டுமதவடைக்கும் காவிரிப்பூநன்னாடு
காவிரிப்பூம்பட்டணத்து கரைதுறைக்கும்வர்த்தகர்கள்

மாணுகன்செட்டி மாச்சேசாட்டான்செட்டியென்றும்
மாணுகன்செட்டிபெற்ற மணியாசன்கோவலனுர்
என்பேருகோவலன் கூத்தியார்பேர்மாதகியாள்
கூத்தியார்மாதகியாள் கொண்டவள்கர்ணகியாள்
தாசிகடனுக்காகத் தனிச்சிலம்பை நானெடுத்தேன்
வேசிகடனுக்காக மெல்லியிடசிலம்பெடுத்தேன்
மெல்லிசிலம்பெடுத்து மேன்மையுடன்விற்கவந்தேன்
சிலம்பையவரெடுத்து தேன்மொழியாள்கைகொடுத்தார்
இராஜகன்னிவாங்கையிலே நலமாகப்பொற்சிலம்பு
அமிர்தஞ்சொரிகிறது ஆரணங்குநாயகிக்கு
கண்ணீரைசோரவிட்டு கதறியழுகிறுளே
தவமாய்தவமிருந்து தையலரைப்பெற்றெடுத்தேன்
வரமாய்வரமிருந்து வைகையிலேஒப்படைத்தேன்
அன்றுகண்டேன்மகளேயின்றுகண்டேன்பொற்சிலம்பு
அழுதுபுலம்புகிரு ளாரணங்குராசகன்னி
கோவலனைத்தான்பார்த்து கொம்பனேஎதுசொல்வாள்
பாம்பெடுத்துமேற்போடும் பழிகாரதென்மதுரை
இந்தமதுரையிலே இறந்துபோகநாளாச்சே
ஆனையிலேதிரவியத்தை யனுப்புகிறேனுன்மனேக்கு
அத்தையெடுத்துமூந்தனாண்மனேக்குப்போய்ச்சேரும்
இந்தச்சிலம்புதா னேற்காதுஎந்தனுக்கு
நாகரத்தினசிலம்பிதுதா நாயகிக்கேற்காது
எடுத்துமெள்ளக்கட்டுமென ஏந்திழைதானுரைத்தாள்
அப்போதுகோவலனுர் ஆணழகர்வாராரே

கோவலர் வாத்தியாரைக் காணுதல்.

வேதவாத்தியார்பள்ளிக்கூடம் விதமாகத்தேடிவாரார்
இவரழகைத்தான்பார்த்துஎழுந்துவாராார்வாத்தியார்
அட்டாளுஞ்சொக்கரென் றடிபணிந்துதெண்டனிட
சொக்கரல்லசொக்கரல்ல ஜாதியிலேசெட்டிபிள்ளை
கூத்தியார்கடனுக்காகச் சிம்பெடுத்துவிற்கவந்தேன்

என்றுமவர்சொல்லையிலே இயலானவாத்தியாயர்
பள்ளிக்கூடத்திலே பாங்காகக்குந்தவைத்தார்
பசியாறுமென்றுசொல்லி பசியிளப்பைதீர்த்துவிட்டார்
தாம்பூலந்தரித்து தனஞ்செயனார்கோவலரும்
அப்போதுவாத்தியா ராணழகரென்னசெய்வார்
பழிகாரமதுரையிலே கோவலரேயேன்வந்தீர்
நிந்தையிட்டுதலைவாங்கும் நீதியல்லாமதுரையிது
அந்நீதமாய்மாளவந்தீ ராணழகர்கோவலரே
காராம்பசுவைவிட்டுக் கட்டழகாவுந்தனுக்கு
கூத்தியார்கடனடைக்க கொற்றவரேநான்தாரேன்
இதையெடுத்துஉந்த னரண்மனைக்குப்போய்வாரும்
இவ்வார்த்தைகேட்டு எடனந்தபுண்ணியனும்
பள்ளிக்கூடத்தைவிட்டு பாங்காகத்தானடந்தார்
வஞ்சிபத்தன்பிள்ளைகள் வகையுடனேதுசொல்வார்
வாத்தியாரைப்பார்த்து வகையுடனேதுசொல்வார்
ஒண்ணுக்குப்போரோமென்று கேட்டார்பசங்கள்ளங்கே
போங்களென்றனுப்புவிட்டார் புகழானவாத்தியாரும்
அரண்மனையைத்தேடி ஆணழகர்வாரார்கள்
தாயுந்தகப்பனையும் தான்பார்த்துஏதுசொல்வான்
சிலம்பையெடுத்தொருவன் தென்மதுரைவிற்கவந்தான்
ஆனலழகுமன்ன னதனார்வர்த்தகனும்
சிலைபோல்வடிவழகன் செட்டிபிள்ளைகோவலரும்
சிலம்புகொண்வாராரே செட்டிபிள்ளைகோவலரும்
அவனையனுப்புகிறே னணழகாவுன்னிடத்தில்
மூத்தமகன்முதல் தமையன்பிள்ளையென்று
ஒப்பாரிகொண்டு உறவுகொண்டுநீயழைத்தால்
செஞ்சிலம்பைபறிகொடுத்து திருடனென்றிருகக்கட்டி
இராசர்முன்கொண்டுவந்தால் நலமாகவெட்டிடுவார்
நீர்-தப்பிப்பிழைத்திடுவீர் தனஞ்செயரேயென்று
என்றவர்க்குச்சொல்லிவிட்டு இன்பமுடனோடிவந்தார்
கோவலனைக்கண்டு கொற்றவர்களென்னசொல்வார்

வஞ்சிபத்தன்வீதிக்கும் மன்னவரே போவீரானல்
சிலம்பையவன்தானெடுத்துச் செட்டியாரைக்கொண்டு
இராசரிடகச்சேரிக்கு நலமாகக்கொண்டுவாரான்
சொக்கரென்றுசொல்லி எல்லவருந்தெண்டனிட்டார்
அட்டாளுஞ்சொக்கரென் றடிபணிந்துதெண்டனிட
அப்போதுவஞ்சிபத்த னணழகனே துசொல்வான்
சிலம்புகொடுபோனதொரு திருடனைக்கொண்டுவந்து
அவன்காலில்விழுந்தீர்களேக னங்குலைந்தராசர்களே
கம்மாளன்சொற்கேட்டு கலங்குகிருர்பாண்டியர்கள்
அப்போதுசொக்கலிங்க மாண்டவனுரே துசெய்தார்
வெண்ணீறைத்தானெடுத்து விமலாம்தூவிவிட்டார்
வஞ்சிபத்தன்சொற்கேட்டு மதிமயங்கவேண்டுமென்று
அட்டாளுஞ்சொக்கலிங்க மையரவர் தூவிவிட்டார்
அரிவுகெட்டுமதிகுலைந்து ஆணழகர்பாண்டியர்கள்
சிலம்புகொண்டுபோனதொரு திருடனகப்பட்டான்
மணிச்சிலம்புகொண்டுபோன வன்னகப்பட்டான்
எட்டுநாள்முன்பாக எடுத்துக்கொண்டுபோனவன்தான்
ஆரைச்சுவர்மேலே காயவைத்தபொற்சிலம்பை
ஒட்டுப்பார்த்துளவிருந்து உங்கள்சிலம்பெடுத்து
கம்மாளன்தெருவிலே ஊசிவிற்கவந்தான்காண்
என்றுமிவன்சொல்லையிலே இயலானபாண்டியர்கள்
இந்தட்சணத்திலே இவனை நீங்கள்கொண்டுபோய்
காளியம்மன்கோவிலிலே கடுகப்பலிவாங்கிடுங்கள்
அப்போதுமந்திரிக ளாணழகர் தான்கேட்டு
கொலுவைவிட்டெழுந்தார் கொற்றவர்கள்மந்திரிகள்
உத்தியோகம்விட்டு உத்தமர்கள்தானெழுந்தார்
இப்பெரியதீர்ப்பதுதான் செய்வீரோபாண்டியரே
நியாயத்தைதான்கேட்டு நலமாகத்தீர்ப்புசெய்து
ஆக்கினைசெய்யவேண்டும் அழகானபாண்டியரே
இந்தநல்லதீர்ப்பு ஏற்காதுஎங்களுக்கு
அப்போதுபாண்டியர்க ளன்பாகஎதுசெய்தார்

பாண்டியர்களுடைய மந்திரிகள் கோவலனை விசாரித்தல்.

இது-ஆருடையசிலப்பு ஆனைழகா சொல்லுமென்றார்
என்னுடையசிலம்பு என்றானே கோவலரும்
கூத்திகட்கு ஒக்காக கொடிமதுரைவிற்கவந்தேன்
திருடனென்றுகட்டிக்கொடு வந்தானேவஞ்சிபத்தன்
என்றுமேசொல்லி யெடுத்துரைத்தார்கோவலரும்
என்னுடையதென்று எடுத்துரைத்தான்வஞ்சிபத்தன்
ராசகன்னிதான்கொடுத்த நற்சிலம்பென்றுசொன்னான்
அப்போதுமந்திரிகளாலோசனைகள்செய்து
சேவகரைத்தானழைத்து செஞ்சிலம்புகைகொடுத்து
இராசகன்னிதன்னிடத்தில் கொண்டுபோய் நீங்களுமே
தன்னதெனச்சொல்லுவ தல்லவெனச்சொல்லுவதும்
இரண்டிலொருசேதி அறிந்துவாருஞ்சேவகரே
ராசகன்னிகைதனிலே நலகாகத்தந்தார்கள்
அப்படியேகொண்டுவந்தா ரானைழகர்சேவகர்கள்
இது-ஆருடையபொற்சிலம்பு அறியேனென்காவலரே
என்றுசொல்லிச்சிலம்பை எறிந்துவிட்டாள்ராசகன்னி
அப்போதுகாவலர்க ளங்கெனவேகொண்டுவந்து
மந்திரிகள்முன்பாக கொண்டுவந்துவைத்தார்கள்
அவள்சிலம்பல்லவென்று ஆரணங்குதானுரைத்தாள்
வர்த்தகர்கைகொடுத்து வணக்கமுடனனுப்புமென்றாள்
வஞ்சிபத்தன்தனக்கு ஆக்கினைகள்செய்யுமென்றாள்
இப்படிக்குசொன்னார் இயலானசேவகர்கள்
அப்போதுமந்திரிக ளானைழகர்கோவலனை
சிலம்பையவர்கைகொடுத்துச்சீர்பெற்றுப்போமென்றார்
வஞ்சிபத்தனை இன்று வதைசெய்துபோடுமென்றார்
அப்போதுவஞ்சிபத்த னானைழகனேதுசொல்வான்
சத்தியஞ்செய்யவேணும் தனஞ்செயரேயென்றானும்
அப்போதுமந்திரிக ளாலோசனைகள்செய்து

பிடாரனைத்தானழைத்து பாம்புகொண்டுவாருமென்றார்
அப்போதுபிடாரர்கள் பாம்புகொண்டுவந்தார்கள்
புதுக்குடத்தில்போட்டார் பொட்டெனவேபாம்பதனை
மஞ்சள்சீலைகட்டினார் மன்னவர்கள்பொற்குடத்தை
பொன்னரிசிபோட்டார் பொட்டெனபொற்குடத்தில்
அந்தக்குடத்திலே ஆணழகர்கோவலனை
கையிற்றெடுமென்றார் கட்டழகர்மந்திரிகள்
அப்போதுகோவலனு ராரை நினைக்கலுற்றார்
பத்தாதபத்தினியே பழுதுபடாரத்தினமே
கர்ணகையுமெய்யானால் கடுகத்துணைவரவேண்டும்
கர்ணகையைத்தானினைத்து கட்டழகர்கைபோட்டார்
பத்தினியைத்தானினைக்கப் பாம்புகளும்பார்த்து
இவரைக்கொன்றால்தோஷமென் றிடைந்ததுசர்ப்பம்
பொன்னரிசியள்ளிப் புண்ணியனார்சபையில்வைத்து
அப்போதுமந்திரிக ளாணழகரேதுசொல்வார்
அவன்பேரில்குற்றமில்லை யென்றார்கள்மந்திரிகள்
அப்போதுபாண்டியர்க ளடைவாகவதுசெய்தார்
இன்னமொருசத்தியந்தா னினிசெய்யச்சொன்னாரே

கோவலற்கு முதலாவதாக்கினை நீக்கி இரண்டாவதாக்கினை வருதல்.

வேங்கைசத்யம்செய்ய வேண்டுமென்றுசொன்னார்கள்
வேங்கைக்காரரை வேங்கைகொண்டுவாருமென்றார்
அப்படியேவேங்கையை அன்புடன்கொண்டுவந்தார்
புலியொன்றுகொண்டு புண்ணியனாரெதிரேவைத்தார்
கோவலனையழைத்துக் கொற்றவர்களேதுசொல்வார்
போனுக்குள்ளேதள்ளிவிட்டார் கோவலசெட்டியாரை
கர்ணகியைத்தானினைத்துக் கதறியழுகையிலே
பாராததுபோலே பார்த்ததுவேங்கையது
கோவலனையப்போது கொடிவேங்கைதள்ளிவிடும்

கோவலர்க்கு மூணாவது நெய்யும் நாலாவது மழுவும் வருதல்.

நெய்யிலேசத்தியந்தா நேராகச்செய்யுமென்றார்
கொப்பரையிலகாச்சி கோவலரைத்தள்ளிவிட்டார்
அதுக்கும்பிழைத்தெழுந்தா ராணழகர்கோவலரும்
மழுவுகொண்டுகாச்சி மன்னவனார்க்கொடுத்தார்
எனதுசிலம்பென்று ஏந்தினார்மழுவதனை
மழுவுகொண்டுதானேந்தி வாராராம்கோவலரும்
சொக்கரிட கோவிலிலே வாசற்படிமுன்னேவைத்தார்
மழுவுமதுதானுருவி வாசற்படியாச்சுதங்கே
அந்நேரவேளையிலே ஆணழகர்கோவலரும்
இராசசபைக்குமுன்னே வாராராங்கோவரும்
அப்போதுபாண்டியர்க ளாக்கினைகளேதுசொல்வார்

கோவலர்க்கு ஐந்தாவது யானைச்சத்தியம் வருதல்.

யானைநல்லசத்தியந்தா னடைவாகச்செய்யுமென்றார்
மாராளவுபள்ளம்வெட்டி மன்னவரைத்தானழைத்து
செவ்விளநீர்நாட்டிவைத்தார் செட்டிப்பிள்ளைசுத்திவர
பள்ளத்தில்குந்தவைத்து சாலெடுத்துமூடிவிட்டார்
ஆனையைத்தூரத்தினார்க ளாணழகர்கோவலன்மேல்
அப்போதுகோவலரு மழுதுபுலம்புகிறார்
ஆனையதுகிட்டவந்து ஆணழகர்கோவலரை
கும்பஸ்தனத்தில்வைத்து கூத்துகளாடுதங்கே
இவர்-ஆனையின்மேலேறி அங்குசக்கோல்கைபிடித்து
கோலம்வருகிறாரே கோவலச்செட்டியாரும்
இராசகன்னிவீதியிலே நலமாகவரும்போது
அப்போதுகோவிலிங்கி ஆரணங்குதானெழுந்து
உப்பரிகைமேலேறி உத்தமியும்பார்க்கலுற்றாள்
பார்த்துஅழுகலுற்றாள் பைங்கொடியாள்ராசகன்னி
அந்தச்சமயத்திலே ஆறாயிரம்பாண்டியர்கள்
உப்பரிகைமேலேநின்று உத்தமியைக்கண்டுவிட்டார்

கோபம்வருகுதங்கே கொற்றவர்கள்பாண்டியற்கு
ஆனையின்மேல்வாரவனை அட்சணமேதானிறக்கி
பாசக்கயிற்ருலே பக்குவமாய்க்கட்டுமென்ருர்
மழுவரசரையழைத்து மன்னவனைவெட்டுவென்ருர்
அப்போதுகோவலனு ராணழகரேதுசொல்வார்
அன்னீதமாய்வெட்டசொன்னுர் அழகானபாண்டியரே
ஒருவன்பழிக்குநாளை உலகம்பழிவாங்கிவைப்பாள்
மதுரைகொளுத்திடுவாள்மன்னர்களைக்கொன்றிடுவாள்
கர்ணகியாள்வந்தாலே கண்டதுண்டஞ்செய்திடுவாள்
என்றுமந்தகோவலனு மெடுத்துரைத்தாரந்நேரம்

கோவலரைவெட்ட மழுவரசர்கொண்டுவருதல்.

அப்போமழுவரசர் அன்பாகக்கொண்டுவந்தார்
காளியம்மன்கோயில்முன்னேகடுகவே கொண்டுவந்தார்
அப்போமழுவரசர் கோவலருக்கேதுசொல்வார்
வெட்டமனமுமில்லை வீரியரேபோய்விடுங்காண்
அப்போதுகோவலரு மாணழகரேதுசொல்வார்
சிலப்புகொண்டுவந்த திருடனென்றுபெயராகி
காற்சிலம்புதிருடிவந்த கள்ளனென்றுபெயராச்சு
என்னை-கொன்றுவிடுமென்ருராங்கோவலருமப்போது
மாட்டோமென்றுபின்னடைய மழுவரசரேழுபேரும்
அந்தக்குளத்திலே ஆணழகன்போய்முழுகி
சொக்கரையும்அம்மனையும் தோத்தரித்தாரப்பொழுது

கோவலருக்குமீனுட்சிவந்துபூர்வக்கியானம்சொல்லுதல்.

அங்கையர்கண்மீனுட்சி ஆரணங்குஓடிவந்து
கோவலன்முன்பாக கொடியிடையும்வந்துநின்ருள்
மீனுட்சிதன்னைக்கண்டு மெத்தவழுதாராம்
ஏனப்பா நீயழுதா யென்மகனேகோவலனே
ஜாதகமும்பொய்க்காது தலைவிதியும்தப்பாது
உனக்கென்னவரம்வேண்டும் என்னை நீகேளுமென்ருள்

மாலையிட்டுமூலைவைத்தேன் மருவிச்சுகமறியேன்
கூறையிட்டுமூலைவைத்தேன் கூடிச்சுகமறியேன்
வீணுக்குமாலையிட்டு விருதாவாயனுக்கலானாள்
தாலிபறிபோகுதே தலைவனிங்கேமாளுகிறேன்
இந்தவசனமுமே ஈஸ்வரியாள்தான்கேட்டு
அவளுனக்குத்தாயல்லவோ நீயவட்குபிள்ளையல்லோ
பதினாறுவயதுதன்னில் மாளவே நீபிறந்தாய்
சற்பாறைக்கென்றுசொல்லி கட்டழகா நீவளர்ந்தாய்
சாதகமுந்தப்பாது தலைவிதியும்பொய்க்காது
நீ-முன்பிறப்பில்வாணியன் மாதகியுன்பெண்சாதி
கர்ணகைகாளியப்பா கட்டழகாயேனழுதாய்
ஒருவன்பழிக்குமவளுலகம்பழிவாங்கவந்தாள்
இப்படிக்குசொல்லையிலே ஆணழகர்கோவலரும்
மீனாட்சியைப்பார்த்து கோவலரும்கேட்கலுற்றாள்
கர்ணகிமீனாட்சி கட்டழகியாணையிட்டேன்
ஆணைவிடுதல்பண்ணும் ஆணழகிமீனாட்சி
ஆணையிட்டேன்தோஷமில்லையென்றுளேமீனாட்சி
செத்தாலுங்கைலாசஞ் சிவன்பாதஞ்சேரவேண்டும்
மாதகியையென்னுட னுடன்கட்டைசேர்க்கவேண்டும்
எனக்குமந்தமாதகிக்கும் பதவிகொடுக்கவேண்டும்
அப்படியேதந்தேனென்று ளருங்கிளியாள்மீனாட்சி
அப்போதுமீனாட்சி யம்மனுந்தான்மறைந்தாள்
காளிகோவில்முன்பாகக் கட்டழகர்வந்துநின்று
மழுவரசனைப்பார்த்து வாருமென்றுதானழைத்தார்
தன்னைவெட்டுமென்றுர் தயவுடனேகோவலரும்

மழுவரசர் கோவலரை வெட்டுகின்றது.

வாளெடுத்துவீசினார் மழுவரசரப்போது
மாலையாய்விழுந்தது வர்த்தகன்கழுத்திலேதான்
வாளைமெள்ளகீழேபோட்டு மன்னவரோடிவிட்டார்
அப்போதுகோவலனு ராணழகரேதுசெய்தார்

கர்ணகைவருமளவுங் கார்த்திகெங்களென்னுடலே
இந்தச்சகாயமது எந்தனுக்குச்செய்யுமென்றார்
பத்தினியைத்தானிணைத்து பாலாவுக்தானெடுத்தார்
உச்சிவழியிலே யுத்தமன்தானும்வைத்தார்
பத்தினி நீமெய்யானால் பாங்காயுருகவேண்டும்
பத்தினியாள்பேர்சொல்லப் பக்குவமாயுருகுதங்கே
ஒன்றாயிருந்தவர்தா னிரண்டாய்பிளந்துகொண்டார்
வாழையைவெட்டினாப்போல் பாறையிலேவிழுந்தார்
மாண்டுமடிந்தாரே வடிவழகர்கோவலரும்
சொக்கரிடத்திலே சேர்ந்ததுகாண் பஞ்சபூதம்
தங்கச்சிமிழ்தனிலே தானடைத்தார்சொக்கலிங்கம்
அப்போதுபமூவரச ராணழகரோதுசெய்தார்
காகம்பாவாமல் கழுகுகள் தீண்டாமல்
கல்லால்பரணேகட்டி காத்திருந்தாரேழுபேரும்

கோவலனுதிரம் சபையிலனேவோரும் போட்டிடுதல்.

அதிலேயொருமன்னவன்தா னுணமுகனோடிவந்து
பாண்டியர்கள்முன்னேவந்துபாங்காயெடுத்துரைப்பார்
வாளும்உதிரங்களும் மன்னவர்க்குக்காட்டினானே
ஆளுக்கொருதிலக மள்ளியிட்டார்ராசாக்கள்
வஞ்சிபத்தனோடிவந்து வாரிவாரித்தான்கொடுத்தான்
எந்தனுக்குத்தியாகம் கொடுமென்றான்வஞ்சிபத்தன்
நாளைபத்தினத்திலே வாருமென்றார்மன்னவர்கள்
அப்படியேசம்மதித்து அரண்மனைக்குட்போனார்கள்
வஞ்சிபத்தன்போனபின்பு மன்னவர்கள்தாமிருந்தார்

மதுரையில் பாண்டியர்கள் துற்குறி காணுதல்.

அப்போமதுரையிலே அவசகுனங்காணுதங்கே
காலமழைபேயுதங்கே கனத்தமதுரையிலே
இரத்தமழைபொழியுதங்கே நேரானமதுரையிலே
கோட்டையிடியுதங்கே கொடிமரம்சாயுதங்கே
எட்டுசுற்றுகோட்டைகளும் இடியுதுமதுரையிலே

கழுதைகளோலமிட்டுக் கதறியழுகுதுபார்
அப்படிமதுரையிலே அவசகுனங்காணுதுபார்

பாண்டியர்கள் பயந்து மதுரையில் திட்டஞ்செய்தல்.

அந்தச்சமயத்திலே ஆணழகர்பாண்டியரும்
நாலுகோட்டைவாசலும் நலமுடனேசாத்துமென்றார்
சாத்திக்கதவடைத்து தாள்பூட்டிவையுமென்றார்
அப்படியேசெய்தார்களந்தமதுரையிலே
தண்டோருபோடவைத்தார்தனிமதுரைபட்டணத்தில்
என்னவென்றுதண்டோரு போடுமென்றார்பாண்டியர்
கோவலனைக்கொன்றகதை கொற்றவர்சொன்னாலும்
கைசாடைகாட்டினால் கையைத்துணித்திடுவோம்
வாயாலேசொன்னாலே வாயைத்தரித்துவைப்போம்
அண்டைவீடு அசல்வீடு ஆராகிலும்போனால்
அவர்கள்தலைதுணிப்போமென்றுதமுக்கறையும்
இப்படியேசொல்லி தமுக்கறைந்தார்பட்டணத்தில்
மதுராபுரிப்பட்டணத்தில் மகாசனங்களத்தனையும்
சாத்திக்கதவடைத்து தாள்பூட்டிமண்ணறைந்தார்
தங்கள்தங்கள்மாளிகையைச் சாத்தியவரிருந்தார்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
மாநுமதுரையிலே வாழ்விடைச்சிதன்மனையில்
ஆச்சியரண்மனையில் ஆரணங்குகர்ணகையும்
பஞ்சணைமெத்தையிலே படுத்திருக்கும்வேளையிலே

கர்ணகை சொர்ப்பனங்காணுதல்.

கர்ணகைதூங்கையிலே காணுகிறாள்சொர்ப்பனங்கள்
பெட்டியுடையக்கண்டாள் பூவதுவாடக்கண்டாள்
ஏற்றியதிருவிளக்கு இருளடைந்துபோகக்கண்டாள்
ஒற்றிவைத்தசந்தனந்தா னுமிபோலுதிரக்கண்டாள்
தேங்காயுடைந்ததங்கு செம்புசலம்குறையக்கண்டாள்
வாடாதமல்லிகைப்பூ வாடியிருக்கக்கண்டாள்

அட்டாளுஞ்சொக்கர் அணிமதுரையிடியக்கண்டாள்
வாழ்மதுரைப்பட்டணத்து மதிலிடியக்கண்டாளே
உள்ளூர்ரதமதுதான் உடையக்கண்டாள்கர்ணகையும்
அசனூருத்தேரதுதா னச்சுமுறியக்கண்டாள்
கொண்டைகலையக் கொண்டைப்பூவாடக்கண்டாள்
மாலைகசங்கித்தான் மணவாளன்மாளக்கண்டாள்
முன்னூறுவேதியர்கள் முகூர்த்தமிட்டமங்கிலியம்
கடகங்கழன்றுவிழக் கண்டாளேகர்ணகையும்
கோதும்பைத்தாவடமுங் கொலுசுமுதிரக்கண்டாள்
வயிரமணிதாமறந்து மயிர்பெருகக்கண்டார்கள்
உட்கழுத்துவயிரமணி நழுவிவிழக்கண்டாளே
மஞ்சளழியக்கண்டாள் மணமழிந்துபோகக்கண்டாள்
தாலிபறிபோகக்கண்டாள் தலைவனங்குமாளக்கண்டாள்
மாலைபறிபோக மணவாளன்மாளக்கண்டாள்
காளியம்மன்கோவில்முன் கண்ட துண்டங்கண்டாளே
குலைவெட்டிசாய்த்ததுபோல் கோவலர்சாயக்கண்டாள்
மரம்வெட்டிசாய்த்ததுபோல் வர்த்தகர்சாயக்கண்டாள்
கடுகவேவெட்டியங்கே கற்பாறைமேல்சாயக்கண்டாள்
அவர்-உதிரம்பலபலவென் றுதிரவாய்ப்பூச்சொரிய
இரத்தம்பலபலவென் றிரத்தவாய்ப்பூச்சொரிய
சிறுகுடலும்பெருகுடலும் சிதறிவிழக்கண்டாளே
மணிகுடலும்பெருகுடலும் மண்மேல்விழக்கண்டாளே
இப்படியாய்சொற்பனங்கள் கண்டாளேகர்ணகையும்
சொற்பனங்கண்டவள் துடிதுடித்துத்தானெழுந்தாள்
ஆச்சிமுகம்பார்த்து ஆணழகியேதுசொல்வாள்
மதுரைக்குப்போனிடத்தில் மாண்டாரேஎன்கணவன்
சிலம்புவிற்கப்போனிடத்தே செத்துமடிந்தார்காண்
மாண்டபடுகளத்தில் மயிலனையாள்போகவேண்டும்
செத்தபடுகளத்தைத் தேன்மொழியாள்காணவேண்டும்
கொன்றவனைக்கண்டு கொடியபழிதீர்க்கவேண்டும்
மாண்டவரைக்காண்டு மன்னர்களைக்கொல்லவேணும்

ஒருவன்பழிக்காக உலகம்பழிவாங்கவேண்டும்
மன்னன்பழிக்கு மதுரைபழிவாங்கவேண்டும்
மார்கண்டம்துடிக்குதிங்கே மணவாளன்மாண்டிருக்க
மாண்டபடுகளத்தில் மயிலனையாள்போய்வாரேன்
செத்தபடுகளத்தில் தேன்மொழியாள்போய்வாரேன்
போகவிடைகொடம்மா போய்வாரேன்தென்மதுரை
என்றாளெழுந்திருந்தாள் ஏந்திழையாள்கர்ணகியும்
ஆச்சியம்மாள்தான்பார்த் தரிவையுமேதுசொல்வாள்
அடைக்கலமாயுன்னைவைத்து அணிமதுரைபோனாரே
செஞ்சிலம்பைவிற்பதற்கு தென்மதுரைபோனாரே
சிலம்பையவர்விற்றுக்கொண்டு செட்டியாரிங்கேவந்து
கர்ணகையாளெங்கேயென்று கட்டழகர்கேட்பாரே
அதற்கென்னநானுரைப்பே னாரணங்கேகர்ணகையே
நீபோரகாரியத்தை நான்போய்ஜெயித்துவாரேன்
நான்போய்வாரேனென்ருள் நலமுடனேயம்மாது
அவருடையசேதிதன்னை அறிந்துகொண்டுவாரேனே
புருஷனுடசேதியெல்லாம் போயறிந்துவாரேனே
வீட்டிலிருநீயென்றாள் மெல்லியிடைச்சியவள்
என்னத்தினாலேயல்லோமதுரைக்குப்போராயென்றாள்
பால்மோருவிற்கப்போரேன் பட்டணத்திலேயின்று
பால்விற்றுப்போலேயவர் சேதியறிந்துவாரேன்
என்றந்தஆச்சியல்லோ ஏதுசொல்வாள்கர்ணகியும்
அப்படியேபோவாயானு லருஞ்சேதிசொல்லுகிறேன்
வெறும்பானைவெறுங்கூடை மெல்லியரே நீயெடுத்து
ஆற்றிலேதான்முழுகி அரிவையரை நீநினைத்தால்
அஞ்சுஅறைதனிலே அன்பானபானையிலே
அஞ்சுஅறைதனிலே அஞ்சுவிதமுண்டாகும்
அதன்விலைகூறி அன்னீதமாய்விற்ருயானுல்
அவர்சேதிதான்தெரியும் ஆரணங்கேயுந்தனுக்கு
என்றந்தக்கர்ணகையும் எடுத்துரைத்தாளாச்சியர்க்கு
நல்லதென்று ஆச்சியவள் நலமாகச்சம்மதித்து

அப்படியேபோவேனென்று ஆரணங்குவாராளே

இடைச்சி மதுரைக்குச் செல்லுதல்.

தயிர்பானை தானெடுத்து தையலரும்வாராளே
ஆற்றில் முழுகினளே ஆரணங்குவாழ்விடைச்சி
பானைகழுவியவள் பக்குவமாய்க்காயவைத்து
அஞ்சுகைஜலமெடுத்து அரிவையரும்விட்டாளே
அஞ்சுவிதமாச்சு அரிவையுடகிருபையினல்
பால்மோர்தயிர்வெண்ணெ பக்குவமாயுண்டாச்சு
பத்தினியாளென்றுசொல்லி பக்குவமாக்கைகுவித்து
சிட்டுசிமிலெடுத்து சிம்மாடுகோலிவைத்தாள்
பால்கூடைதனையெடுத்து பாங்காய்வருகிருளே
மதுரைக்குள்ளாகவல்லோ மயிலனையாள்வாருளே
நாலுகோட்டைவாசல்களும் நலமாகசாத்திருக்கும்
தெற்குநல்லவாசலிலே தேன்மொழியும்வந்துநின்ருள்
அங்கிருக்கும்சேவகர்கள் ஆணழகர்தான்பார்த்து
வழியைமறித்துமவர் போகாதேயென்றுசொன்னர்
அப்போதவள்தந்துசொல்லி ஆரணங்குவுள் நுழைய
மதுரையாதியந்தமும் சாற்றியிருக்குதுகாண்
கர்ணகைசொன்னது மெய்யென்றுஎண்ணியவள்
என்னவென்றுகூவுகிருள் ஏந்திழையுமதுரையிலே
ஒருபடிமுத்தளந்தால் ஒருவுழக்குநெய்வார்ப்பேன்
இரண்டுபடிமுத்தளந்தா லிரண்டுழக்குநெய்வார்ப்பேன்
இப்படிக்கதன்விலையைக் கூறியவள்வாராளே
மதுரையிலுள்ளபெண்கள் தயிர்கொள்ளவாருர்கள்
தயிர்பாலுமோருங்கொள்ள தையலர்கள்வாரார்கள்
ஆச்சிமுன்னேவந்து அனைவோரும்நின்ருர்கள்
அவர்கள்மனதின்படி அனைவோரும்நின்ருர்கள்

இடைச்சி மதுரைக்குவந்து கோவலன் சங்கதியறிதல்.

அதிலேயொருத்திதன்னை அன்பாகத்தானழைத்து
மதுரையிலுள்ளசேதிமர்மமெலாம்சொல்லுமென்ருள்

ஆரோவொருவனவன் அணிமதுரைதேடிவந்தான்
சிலம்புகொண்டுவந்தானுஞ் செட்டிபிள்ளைகோவலரும்
சிலம்பரித்துக்கொண்டு திருடனென்றுகொன்றூர்கள்
மாண்டுமெடிந்தானும் வடிவழகன்கோவலரும்
மாண்டதின்பிற்பாடு மதுரையெல்லாம்சாத்திவிட்டார்
என்றுமவன்சேதி யெடுத்துரைத்தானவட்கு
அவ்வார்த்தைதான்கேட்டு அழுதுவாராளவ்விடைச்சி
மதுரையைவிட்டந்த மாட்டிடைச்சிவாராளே
மாட்டுக்காரப்பிள்ளைகளை மயிலனையாள்தான்பார்த்து
செட்டியார்படுகளந்தா னெங்கேயென்றுதான்கேட்டார்
காளியம்மன்கோயிலில் கண்டதுண்டஞ்செய்தார்கள்
திருப்பரங்குன்றக்காடு தெய்வகாளிகோயிலம்மா
வெங்கலப்பாறையிலே வெட்டிவைத்தார்கோவலரை

இடைச்சி கோவலர் படுகளத்தைக்கண்டு புலம்பல்.

அவ்வசனங்கேட்டு அழுதுகொண்டுவாராளே
படுகளத்தைத்தேடியல்லோ பாவையரும்வாராளே
மாண்டிருக்கும்படுகளத்தை மயிலனையாள்தான்பார்த்து
செத்திருக்கும்படுகளத்தைத் தேன்மொழிதான்பார்த்து
தலைமாட்டிலே நின்று தயிர்ப்பானைபோட்டுடைத்தாள்
தயிர்ப்பானைபோட்டுடைத்து தானேயழுகலுற்றாள்
ஏண்டாவந்தாய்மகனே ஈடழிவான்மதுரையிலே
அப்போதுசொன்னேனே ஆணங்குழந்தனுக்கு
போகாதேயென்றுளே பேச்சுத்தள்ளிவந்தாயே
பேச்தனைக்கேளாமல் பிழைமோசம்வந்ததுகாண்
வார்த்தைதள்ளிவந்து வகைமோசம்வந்ததுகாண்
என்றுசொல்லித்தானழுதா ளேந்திழையாள்வாழ்வி

இடைச்சி அழுததால் அவளை ராசர்முன் கொண்டு வருதல்.

அழுதகுரல்கேட்டு அவ்வரசரோடிவந்து
கட்டிக்கொண்டுவாரார்கள் கனமாகராசர்முன்னே

பாண்டியர்கள்பார்த்து பாவையருக்கேதுசொல்வார்
ஏண்டியழுதாயென்று இனிதாகக்கேட்டார்கள்
கைதவறிப்பானைதன்னைக் கடுகவுடைத்தேனே
பானைக்கழுததில்லை பாண்டியனேயென்றுரைத்தாள்
தயிருக்கழுததில்லை தயிர்ப்பானைதனக்கழுதேன்
மோருக்கழுததில்லை மோர்ப்பானைதனக்கழுதேன்
என்றுமவள்சொல்லேயில் பாண்டியருமேதுசொல்வார்
மண்பானைவிலைபெறுமா பொன்பானைய்த்தனையும்
உரல்பெற்றவிலைபெறுமோ உலகங்களத்தனையும்
அப்போதுவாழ்விடைச்சி அரசருக்கேதுசொல்வாள்
மண்டைதுள்ளிப்போகாதே மடக்கவருவாள் நாளை
ஆண்மைகொண்டுதுள்ளாதே அடக்கவருவாள் நாளை
என்றுமிகச்சொன்னளே ஏந்திழையாள்வாழ்விடைச்சி

இடைச்சி கர்ணகிக்கு மனங்தேறப் பலசாரக்கு கோண்டுவருதல்.

சின்னக்கடைகருகு தேன்மொழியாள்வாராளே
கர்ணகிக்குவேண்டுமென்று என்னென்னவாங்கலுற்றள்
கோடிப்புடவையொன்று கொப்பனையும்வாங்கலுற்றள்
கம்பியுடன்கோடிசேலை கர்ணகிக்குவாங்கலுற்றள்
சீப்புசிக்கங்கோலமது தேன்மொழிக்குவாங்கலுற்றள்
மல்லிகைப்புட்பமது மயிலனைக்குவாங்கலுற்றள்
நல்லெண்ணெய்சீயக்காய் நாயகிக்குவாங்கலுற்றள்
மஞ்சள்மருக்கொழுந்து மயிலனையாள்வாங்கலுற்றள்
இத்தனையும்வாங்கிக்கொண்டு ஏந்திழையும்வாராளே
மானுமதுரைக்கு வாழ்விடைச்சிவாருளே
அந்தச்சமயத்தி லருங்கிளியாள்கர்ணகியும்
அடுக்காய்ச்சமையல்செய்து ஆரணங்குமூடிவைத்தாள்
வரும்வழிபார்த்திருந்தாள் மயிலனையாள்கர்ணகியாள்
அந்தச்சமயத்தில் ஆச்சியம்மைவந்துவிட்டாள்
தலைக்கடையிலுட்காந்தாள் ஊதையவிடைச்சியவள்

கர்ணகியாள்முன்னேவந்து காரிழையேதுசொல்வாள்
மதுரைக்குப்போனரே வர்த்தகர்சேதியென்ன
தென்மதுரைபோன சேதியென்னசொல்லுமென்றாள்
மாண்டார்மடிந்தாரோ வடிவழகர்சேதியென்ன
தெரியவேசொல்லுமென்றாள் தேன்மொழிகர்ணகியாள்
அப்போதுமாவிடைச்சி அருங்கிளிக்கேதுசொல்வாள்
மதுரைக்குப்போனவிடத்தில் வர்த்தகரைக்கண்டேனே
தென்மதுரைபோனபின்பு செட்டியாரைக்கண்டேனே
கண்டுவந்தேனென்று கட்டழகிசொன்னாளே
என்னசொன்னரென்கணவ ரெனக்கறியக்கூறுமென்றாள்
கோடிப்புடவையது கொற்றவனைக்கேட்டையாம்நீ
வாங்கிக்கொடுத்தாரே வடிவழகர்கோவலரும்
பாக்குமஞ்சள்வெற்றிலையும் பாலகரைகேட்டையாம்நீ
அதுவுங்கொடுத்தார்காண் ஆணழகர்கோவலரும்
நல்லெண்ணெய்சீயக்காயும் நலமாகத்தான்கொடுத்தார்
இத்தனையுங்கொடுத்தாரென்று எடுத்துரைத்தாளர்ச்சி
கண்டவுடனேயவள் கதறியழுகின்றாளே
மாலையிட்டநாள்முதலாய் வாங்கிக்கொடுத்ததில்லை
செத்ததின்பிற்பாடு சீரனுப்பிவைத்தாரோ
ஆருக்குயேற்குமது ஆரணங்குமாதகியும்
அவருக்குயேற்றவளாம் ஆரணங்குமாதகியும்
அவளுக்குயேற்குமது அரிவையற்கேற்காது
புருஷன்படுகளமே போகிறேனென்றாளாம்
மாளவில்லையுன்கணவன் மயிலனையேகர்ணகியே
என்றுமிவள்சொன்னாளே ஏந்திழைவாழ்விடைச்சி
சாதத்தைப்போட்டுத் தையலரைச்சாப்பிடென்றாள்
இவள்பிடித்தபிடிசாதம் புழுவாய்சொரியுதங்கே
அப்போதுகர்ணகிதன் ஆரணங்கேதுசொல்வாள்
மாண்டதுமெய்தான்காண் மாமதுரைப்பட்டணத்தில்
என்றுமிவள்சொல்ல ஏந்திழையாளெனசொன்னாள்
பாலாகிலுங்குடித்து பசியாறுமென்றுசொல்லி

சொம்பிலேநற்பாலும் தோகையற்குத்தான்கொடுத்து
சொம்பில்வைத்தநற்பாலும் சீரழுத்தமாச்சுதப்போ
கர்ணகியுந்தான்பார்த்து கன்னிமனதுநொந்து

கர்ணகி இடைச்சிவீட்டைக் கோபத்திநற்
கொளுத்தியது.

அப்போதுகர்ணகியா ளாரணங்குதான்பார்த்து
எனக்குப்பொய்சொன்னவிந்த இடைச்சிவீடுவேகவே
கைமூறித்துச்சாபமிட்டாள் கட்டழகிகர்ணகியும்
கலந்துபற்றிஎரியுதங்கே கட்டழகிவீடதுதான்
வெந்துதணிகிறது வாழ்விடைச்சிவீடுமங்கே
அப்போதுவாழ்விடைச்சி அலறிக்கொண்டோடிவந்து
கர்ணகிகாலிலே கடுகெனவேபோய்விழுந்தாள்
பத்தாதபத்தினியே பழுதுபடாரத்தினமே
குடியிருந்தவீட்டில் கொள்ளிவைக்கஞாயமுண்டோ
உண்மையைச்சொல்விகிறே னுத்தமியேயுந்தனுக்கு
செத்தழிந்துபோனுரே செட்டிப்பிள்ளை கோவலரும்
மாண்டதுமெய்தான்காண் மயிலணையேகர்ணகையே
ஆறுதப்புநூறுபிழை அடியாள்செய்த அவசாரம்
கோடிதப்புமனம்வைத்து கொண்டணைக்கவேணுமடி
அப்போதுகர்ணகியா ளவள்மேல்மனதிரங்கி

கர்ணகி இடைச்சிவீட்டையுண்டுபண்ணி மதுரைக்கு
வருதல்.

எப்போதும்போலவந்த இடைச்சிவீடுண்டாச்சு
கூந்தல்விரித்தாளே கொம்பனையாள்கர்ணகியும்
எல்லார்தலைக்கூந்தல் ஒருபாகமிருபாகம்
கர்ணகிதலைக்கூந்தல் அறுபத்துமூன்றுபாகம்
அறுபத்துமூன்றுபாகம் அழகுள்ளபொற்கூந்தல்
கூந்தல்விரித்தாளே கொடியிடையாள்வந்தாளே

கணவன்படுகளத்தே கர்ணகியும்வாராளே
காடுசெடிதாண்டி கடுகெனவேவாராளே
சில்லென்றகாடும் செடியும்வனந்தாண்டி
சூரைமுள்ளுகாரைமுள்ளும் தொண்டையுருகப்பாயும்
காரைமுள்ளுஞ்சூரைமுள்ளும் கடுகெனவேதைக்குது
துறட்டுமுள்ளுதைக்குதுபார் துணியைக்கிழிக்குதுபார்
செடிக்கொருமயிரதுதான் சிக்குபட்டுவாராளே
ஐயோசிவனேயென்று அழுதுகொண்டுவாராளே
கொக்குகுருவிகளா கோவலரைக்கண்டதுண்டோ
காட்டானைபுலிகளே கண்டதுண்டகோவலரை
சிங்கங்கரடிகளே செட்டியாரைக்கண்டதுண்டோ
செக்கச்சிவந்தழகர் செங்கீரைத்தண்டழகர்
பார்க்கவழகுடையோர் பாக்குமெத்தஇன்பவராம்
செஞ்சிலம்புகொண்டுவந்த செட்டியாரைபார்க்கிலையா
அங்கிருக்குமிருகமெல்லா மரிவையர்க்கேதுரைக்கும்
போம்போதுகண்டதுண்டு வரும்போதுகண்டதில்லை
என்றுசொல்லகர்ணகிக்கு ஏந்திழையாரப்போது
அப்போதுநான்சொன்னே னணிமதுரைபோகாதென
வார்த்தைதள்ளிப்போனதினல் வகைமோசம்வந்தது
பேச்சுதள்ளிப்போனதினல் பிழைமோசம்வந்ததுவே
செத்தபடுகளந்தான் தேன்மொழியாள்நானறியேன்
நீ-மாண்டபடுகளந்தான் மயிலனேயேநானறியேன்
மாட்டுக்காரப்பிள்ளைகளே மயிலனையாள்கண்டுவிட்டாள்
மாடுமேய்க்கும்பிள்ளைகளா மாட்டாங்கோல்தம்பியரே
ஆளன்படுகளத்தை யரிவையற்க்குச்சொல்லுமென
புருஷன்படுகளத்தை பொற்கொடிக்குச்சொல்லுமென
என்னதனுக்காகேட்டீர் இளங்கொடியேசொல்லுமென
மதுரையைத்தான்கொளுத்த மயிலனையும்போரேனே
நெருப்புகொண்டுபோரீரோ நேரானதென்மதுரை
வாயாலேசொன்னலே மதுரையதுவெந்துவிடும்
அப்போதுபிள்ளைகளும் அருங்கிளிக்கேதுசொல்வார்

இளைப்பாயிருக்குது எங்களுக்கென்றுசொன்னார்
பசியிளப்பைதீர்த்துவிட்டால்படுகளம்சொல்லுகிறோம்
அப்போதுகர்ணகியா ளரிவையருமேதுசொல்வாள்
எப்படிக்குச்சாதம்நான் இதமாகச்சமைப்பேனென்றாள்
எப்படிக்குதென்மதுரை இனிதாய்க்கொளுத்துவாயோ
அப்படிக்குச்சாதமது அடைவாகச்சமையுமென்றார்
அப்போதுகர்ணகியா ளாரணங்குதான்பார்த்து

கர்ணகி மாட்டுக்காரப் பிள்ளைகளுக்குச் சாப்பாடிடுதல்.

பத்தினிசுரூபத்தைப் பசங்களுக்குக்காட்டவென்று
ஆற்றுமணலெடுத்து அரிசிகளையுண்டுபண்ணி
காய்கறிகளுண்டுபண்ணாள் கன்னியிளங்கொடியும்
பானைசட்டியுண்டுபண்ணாள் பாவையருமப்போது
காயும்பதார்த்தமும் கட்டழகிதான்சமைத்தாள்
இலைபறித்துவாங்களென்று எந்திழையும்சொன்னாளே
வடதாரிதானுருவி மடிதனிலேகட்டிக்கொண்டு
ஆளுக்கொருகலப்பை அவர்களெடுத்துவந்து
அவளதுமுன்னேவைத்தார் கட்டழகர்பாலரெல்லாம்
இதுதானோயிலையென்று எந்திழையும்கேட்கலுற்றாள்
அதைவிடவேறேயில்லை யென்றுமேதானுரைத்தார்
ஏர்க்குளங்கேயென்று இளங்கொடியாள்கேட்கலுற்றாள்
கலப்பையைமுன்னேவைத்தார் கட்டழகரப்போது
பத்தினியாடான்பார்த்து பாவையருமேதுசொல்வாள்
கைகாலலம்பிக்கொண்டு கட்டழகர்வாங்களென்றாள்
மடியிலிலைகளெல்லாம் வகையாகப்பரப்பிக்கொள்ளும்
அப்படிப்பரப்பிக்கொண்டா ரந்தநல்லபிள்ளைகள்தான்
பத்தினியுமெய்யான லிலையொன்றாகவேண்டும்
என்று-கர்ணகையாள்சொல்லக் கலந்திலைகளெல்லாம்
சாதங்கறிவகைகள் சட்டமாய்வட்டித்தாளே
போசனமுண்டுமவர் புண்ணியனார்தாமெழுந்தார்
இப்போதாகிலுஞ்சொல்லும் கணவன்படுகளத்தை

பலகாரந்தந்தாலே பக்குவமாய்ச்சொல்வோமென்றார்
ஆற்றுமணலெடுத்து ஆளுக்கொருபிடிகொடுத்தாள்
அவளுடையசத்தியந்தான் அவலுங்கடலையாச்சு
அப்போதுபிள்ளைகளும் அன்பாகத்தான்பயந்து
செம்பருந்துங்கரும்பருந்தும் சேர்ந்துபறக்குதங்கே
மாமரச்சோலைகளும் வடபத்திரகாளிகோயில்
திருப்பரங்குன்றக்காடு தெய்வகாளிகோயிலண்டை
அகடக்கல்சகடப்பாறை அச்சமில்லாகச்சுகொம்பு
உய்யகொண்டான்பாதையது உயர்ந்தமலைகளது
இரணிபுத்துப்பரணியின்மே லிருபிளவாய்ச்செய்தார்
இருபிளவாய்ச்செய்திடத்தில் மறுபிளவாய்ச்செய்தார்
தோற்றுதுபடுகளந் தோகையரேபாருமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அலறிக்கொண்டுவாராளே
காட்டேரிதுர்க்கையைப்போல் கன்னியரும்வாராளே
தலைவிரித்துக்கொண்டுமவள் தார்குழலும்வாராளே
கர்ணகிவருகிறதைக் கண்டார்கள்மழுவரசர்
பரணைவிட்டுக்கீழிறங்கிப் பக்குவமாயோடிவாரார்
அந்தச்சமயத்தில் அருங்கிளியும்வந்துவிட்டாள்

கர்ணகி இறந்துபோன புருஷனைக்கண்டு புலம்பல் கண்ணி.

வந்தாள்விழுந்தாள் புரண்டழுதாள்
ஐயோசிவனேயென் றழுதுமாரடிப்பாளாம்
தக்கோலந்தின்னுந் தனிவாயைக்கண்டு
முத்தங்கொடுத்தவளும் மோதியழுவாளாம்
வெற்றிலைதின்னும் வெள்வாயைக்கண்டு
முத்தங்கொடுத்து மோதியழுதாளாம்
சுத்திவருவாளாம் சுழண்டுவருவாளாம்
துக்கம்பெருகியுமே மாரடிப்பாளாம்
பற்றிவருவாளாம் பறந்துவருவாளாம்
பக்கத்தில்நின்றுமே மாரிலடிப்பாளாம்

இப்படியாக இளங்கொடியும்தானழுதாள்
பாறைக்கென்றுசொல்லி பட்டணத்தில் நீர்வளர்ந்தீர்
கற்பாறைக்கென்றுசொல்லி கட்டழகா நீர்வளர்ந்தீர்
பாறையுறுத்தலேயோ பட்டணத்தார்கோவலரே
கற்பாறையுறுத்தலேயோ கட்டழகாவுந்தனுக்கு
மாதகியாள்பஞ்சணையில் மயிரிருந் துறுத்துதென்று
கட்டிவைத்துதானடித்தீர் கட்டழகாவர்த்தகரே
பொற்பாறையுறுத்தலேயோ புண்ணியரேஉந்தனுக்கு
நீமாளவயதல்லவே மாண்டிருக்கநாளல்லவே
இறக்கவயதல்லவே இறந்திருக்கநாளல்லவே
பகர்ந்தால்பிராயமது பதினாறுக்குள்ளாகும்
இந்தவயதிலே இனிமாள நீதியுண்டோ
அஞ்சுவயதுதன்னில் அறியாதநாளேயிலே
மாலையிட்டுமூலைவைத்து மாதகியாள்வீடுவந்தீர்
கூறையிட்டுமூலைவைத்து கூத்தியிடப்போய்ச்சேர்ந்தீர்
பன்னிரண்டுதன்வருஷம் பரஸ்திரீயாள்வீட்டிருந்தீர்
அவ்விடத்திலிருந்ததுபோல் என்னிடத்திலிருப்பீரா
கொள்ளிவைக்கபிள்ளை குடமுடைக்கமைந்தருண்டோ
ஆழியிடுங்கையாலே அரிசியிடமைந்தனுண்டாம்
உற்றுருமைசெய்வதற்குப் புத்திரனுமீன்றெடுப்பீர்
செம்புக்கிறைத்தீரே செவ்வாழைவைத்தீரே
வேம்புக்கிறைத்தீரே விருதாவாய்நின்றீரே
எருக்கநீர்சொரிந்து எத்தனைப்பூபூத்தாலும்
மருக்கொழுந்துபோல்வருமோ மாதகியாள்நேசமது
என்றுமவளழுதாளேந்திழையாளப்போது

கர்ணகி இறந்த தன்புருஷனை யெழுப்பிவாய்ப் பிறப்பறிதல்.

மாண்டவரைத்தானெழுப்பி மனதையறியவேண்டும்
செத்தவரைத்தானெழுப்பி சேதியறியவேண்டும்
சொக்கரைமனதினில் தோகையரும்தானினைந்து

ஆவியுடன்தன் னுயிரை யனுப்பவேண்டுமென் றுமே
அப்போ துசொக்கலிங்கம் ஆண்டவர் தான்பார்த்து
தங்கச்சிமிழதனில் தனஞ்செயர் தன் னுயிரும்
தங்கச்சரடுகளும் தங்கத்திணு னூசியுமே
பொற்பிறம்புங்கோல துவும் விபூதிருத்திராட்சமுடன்
அந்தரத்தில்விட்டெறிந்தார் ஆணழகர்சொக்கலிங்கம்
கர்ணகியாள்தன்னிடத்தே கடுகெனவேவந்ததப்போ
அப்போ துகர்னகியா ளாரணங்குதானெழுந்து
மாண்டதொருசெட்டி மன்னவரைத்தான்சேர்த்து
மணிக்குடல்சிறுகுடலு மயிலணையுந்தானெடுத்து
இருக்குமெதாஸ்தான மேந்திழையாள்வைத்தாளே
மணிக்குடலுஞ்சிறுகுடலு மயிலணையுமொன்றுக
ஈரலிறைச்சிதனை எதாஸ்தானமாகவைத்து
இரண்டாயிருந்தவரை ஒன்ருய்த்திரட்டிவைத்தாள்
தங்கநல்லவூசியிலே தகுந்ததொருநூலகோர்த்து
உச்சியிலேதானிருந்து ஓட்டிவிட்டாள்பொற்சரடு
சரடேறச்சரறேட சதையேறிவருகுதங்கே
கால்வழியாய்வரும்போது கடுகெனவேபொற்சரடு
இரண்டுவிரற்கடைதான் மீந்ததுபொற்சரடு
பெருவிரல்சரடுமிட்டாள் பொற்கொடியாள்கர்ணகியும்
தங்கச்சிமிழதனை தையலருந்தான்திறந்தாள்
அவருடையபஞ்சவுயிர் பொந்தியிலடைந்ததுவே
வெண்ணீறுதான்தூவி மெல்லியிளங்கொடியாள்
பொற்பிரப்பங்கோலாலே பொற்கொடியாள்தட்டிகுள்

இறந்த கோவலன் பிழைத்து தன் பெண்சாதியுடன் வருத்தங்கூறல்.

தூங்கியெழுந்ததுபோல் திடுக்கிட்டுத்தானெழுந்தா
வேங்கைமரமதனில் மெல்லியவள்போயொளிந்தாள்
அப்போ துகோவலரும் அலண்டுயெழுந்திருந்து
மாதகியோகர்ணகியோ வந்தவர்படுகளத்தில்

மாதகியாள்வந்தாளே வாடியென்மடிமேலே
கர்ணகியாள்வந்தாலே கடக்கப்போய் நில்லுமென்றார்
இந்தவிசேஷமது ஏந்திழையாள் தான்கேட்டு
கூத்தியாரேன்வாராள் கொண்டவள் நான்வந்தேனே
என்றுமவள்சொல்லி எதிரில்வந்து நின்றாளே
ஆனைகொண்டாள்கர்ணகியாள் ஏறிக்கொண்டாள்மாதவியாள்
ஆனைகொண்டாள்வந்தேனிங் கேறிக்கொண்டாள்என்வருவாள்
தோட்டங்கொண்டேன்கர்ணகியாள் பூமுடித்தாள்மாதவியாள்
தோட்டங்கொண்டாள்வந்தேனிங்கு பூமுடித்தாள்என்வருவாள்
பட்டுக்கொண்டன்கர்ணகியாள் பறித்துக்கொண்டாள்மாதவியாள்
பட்டுக்கொண்டேன்வந்தேனே பறித்துக்கொண்டாளேன்வாராள்
கிண்ணிகொண்டேன்கர்ணகியாள் கீறியுண்டாள்மாதவியாள்
கிண்ணிகொண்டாள்வந்தேனிங்கு கீறிக்கொண்டாள்என்வருவாள்
மாலையிட்டாள்வந்தேனிங்கே மாதகியாளேன்வருவாள்
கொண்டவள்நான்வந்தேன் கூத்தியார்வந்தாளோ
கூத்தியாரில்லையென்று கொடியிடையேவரலாமோ
வடவால்வடிவழகர் வர்த்தகருமேதுசொல்வார்
சிலம்புவிற்கவந்திடத்தே தேன்மொழியேன்வந்தாய்
மணிவாரவந்திடத்தே மயிலனையேவரலாமோ
பொருள்தேடவந்திடத்தே பொற்கொடியேவரலாமோ
என்குலத்தார்கண்டாலே என்னைமதியார்கள்
ஏளிதங்கள்தேடிவைத்தாய் ஏந்திழையேஎந்தனுக்கு
அப்போதுகர்ணகியும் ஆரணங்கேதுசொல்வாள்
சிலம்புகொண்டுவந்தீரே தென்மதுரைப்பட்டணத்து
பறையின்மேலேன்படுத்தீர் பைங்கொடிக்குசொலும்
சிலம்பதுஎங்கேயென்று தேன்மொழியுங்கேட்கையில்
அப்போதுகோவலருமரிவையருக்கேதுசொல்வார்
சிலம்புகொண்டுவந்திடத்தே ஜென்மபலகைநேர்ந்ததடி
கள்ளனென்றுசொல்லி கட்டிப்பிடித்தார்கள்
ஐந்துநல்லசத்தியங்க ளடைவாகச்செய்தேன்காண்
ஐந்தாவதுசத்தியத்திலானையின்மேல்கோலம்வந்தேன்

இராசகன்னிபார்த்தாளென் றெண்ணிக்கொன்றாரே
காளியம்மன்கோவில்முன் கண்டதுண்டம்செய்தாரே
இவ்வளவுதானென் றெடுத்துரைத்தார்கோவலனார்
நல்லவர்பொல்லாதவரை நாயகிக்குச்சொல்லுமென
உன்னாலேயாவதென்ன உத்தமிவேசொல்லுமென்றார்
என்னாலேயாகுங்கா ணெனக்கறியச்சொல்லுமென்றாள்

கோவலர் தனக்காகாதவர்களை யெல்லாங் கர்ணகிக்குச் சொல்வது.

வஞ்சிபத்தன்பிள்ளைகள் சுந்ரலிங்கம்சோமலிங்கம்
இருவரும்பொல்லாதவர் என்னையவர்காட்டிவிட்டார்
அப்போதுவஞ்சிபத்தன் ஆணழகனோடிவந்து
ஒப்பாரிகொண்டுமவ னுறவுகொண்டெனையழைத்து
அண்ணன்பிள்ளையென்று அன்பாகவெனையடழைத்து
கலத்திலேசாதம்வைத்து கழுத்தறுக்கவெண்ணனான்
செஞ்சிலம்பைதான்பறித்து திருடனென்றுகட்டினான்
அவனுடையதேவி முத்துமாலையோடிவந்து
மலட்டுலக்கைகொண்டுவந்து மண்டையிலடித்தாளே
நீதிகெட்டபாண்டியர்கள் நிற்கதலைவெட்டச்சொன்னார்
மந்திரிகள்தான்பார்த்து மன்னவர்களேதுசொன்னார்
ஞாயத்தைக்கேட்டு நலமாகவெட்டவேண்டும்
என்றுமேமந்திரிக ளெடுத்துரைத்தாரந்நேரம்
அப்போதுதிர்ப்புக ளடைவாகச்செய்யச்சொன்னார்
அப்படிக்குச்செய்தனடி ஆரணங்குமங்கையரே
பாம்புமொருசத்தியம் வேங்கையொருசத்தியந்தான்
நெய்யுமொருசத்தியம் மழுவுமொருசத்தியம்
ஆனையொருசத்தியம் அன்பாகச்செய்யச்சொன்னார்
ஆனையின்மேலேறிக் கோலம்வரும்போது
அப்போதுகோவிலிங்கி அரிவையரும்பார்த்தாளே
மெத்தையேறிப்பார்த்தாளென்று வெட்டச்செய்தார்
மழவரசர்நல்லவர் வாளுமதுகெட்டது

ஆனையது நல்லது தான் மாவெட்டியான் கெட்டவன்
வேங்கையது நல்லது வேங்கைக்காரன் கெட்டவன்
பாம்புமது நல்லது ஜோகியவன் கெட்டவன்
நெய்யுமது நல்லது காச்சினவன் கெட்டவன்
மழுவுமது நல்லது தான் மற்றது கெட்டது
மந்திரிகள் நல்லவர் தான் மன்னவர் பொல்லாதவர்கள்
இராசகன்னி பொல்லதவள் நாயகியேயெந்தனுக்கு
அவளாலேயென்னையவர் அன்னீதம்செய்தார்கள்
என்றுமிவர்கர்ணகிக்கு எடுத்துரைத்தாரந்நேரம்
என்னுடையசிலப்புமது ராசகன்னியிடமிருக்கு
அப்போதுகர்ணகியு மருங்கிளியாளேது சொல்வாள்
ஒருவன் பழிக்குநாளை உலகம்பழிவாங்கிவைப்பேன்
சிறுகுடலும்பெறுகுடலுஞ்சேர்த்துப்பிடுங்கிடுவேன்
மணிக்குடலைநான்பிடுங்கி மாலையாய்நான்தரிப்பேன்
மார்தட்டிச்சபதஞ்செய்தாள் வர்த்தகனுர்முன்னுலே
அப்போதுகர்ணகியும் அருங்கிளியாளேதுசொல்வாள்
வர்த்தகரைப்பார்த்து மயுலனையாளென்னசெதல்வாள்
என்னவரம்வேண்டும் என்னை நீகேளுமென்ருன்
பாண்டியர்கள் தன்குடலை பாவையரேகொண்டுவந்து
என்கூட வைத்துக்கொளுத்திவிட்டா லென்திரோகம்
அப்படி நீசெய்யவேண்டும் ஆரணங்கேயென்ருனே
செத்தாலுங்கைலாயஞ்சிவன்பாதம்சேரவேண்டும்
மாதகியுமென்னையுந்தா னுடன்கட்டிசேர்க்கவேணும்
இருவருக்குப் காட்சி யேந்திழையேகொடுக்கவேணும்
அப்படியேதாரேனென்று ஆரணங்குகைகொடுத்தாள்
மாமரத்திலேறிக் கனிபறித்துத்தாருமென்ருள்
கனிபறித்துத்தாருமென்று கட்டழகிகேட்கலுற்ருள்
அப்போதுமரத்திலேறி ஆணழகர்கோவலரும்
சொத்தைக்கனியறுத்து தோகையர்க்குதான்போட்டு
நல்லகனிகளை நலமாகத்தான்பறித்து
மாதகிக்குவேண்டுமென்று மடியிலேகட்டினரே

மரத்தைவிட்டிறங்கினரே மணியரசர்கோவலரும்
எந்தனுக்குசொத்தகனி இனிதாகநீர்போட்டீர்
நல்லகனியாருக்கு வைத்தீரே நாயகரே
ஆசைதந்தமாதநிக்கு அருங்கிளிக்குவேண்டுமென்றார்
நீர்-செத்துமறக்கவில்லை தேன்மொழியாள்தன்னை

கர்ணகி மறுபடியுங் கோவலரைக் கொன்று விட்டது.

வர்த்தகரைகுத்தவைத்து மயிலனையாளேதுசெய்தாள்
தலைபார்க்கும்போதேயந்த தார்குழலால்கர்ணகியும்
உச்சிசாட்டை உருவிவிட்டாளப்போது
ஒன்றாயிருந்தவரும் இரண்டாய்விழுந்துவிட்டார்
குலைவெட்டிசாய்த்ததுபோல் வர்த்தர்விழுந்துவிட்டார்
வாழைவெட்டிசாய்த்ததுபோல் வர்த்தகனார்விழுந்து
அப்போதுகர்ணகியா ளாரை நினைக்கலுற்றார்
கொக்கினத்தைத்தானே கோவலர்க்குகாவலென்றாள்
மானினத்தைத்தானழைத்து வர்த்தகர்க்குக்காவலென
கட்டெறும்பைத்தானழைத்துகண்கள்ரண்டும்காவலென
சிற்றெறும்பைதானழைத்து செவிகள்ரண்டும்காவலென
காவலில்லாக்கோவலர்க்கு காவல்வைத்தாள்கர்ணகியும்

கர்ணகி மகாவுக்கிரத்துடன் மதுரைக்கு வருதல்.

மதுரைதனைத்தேடி வாராளேகர்ணகியும்
கோவலரைகாவல்வைத்து கொம்பனையும்வாராளே
ஆராயிரம்பாண்டியரை அருங்கிளியாள்தேடிவாராள்
அறிவுகெட்டபாண்டியர்க ளெங்கேஎன்றுதேடிவாருள்.
நாலுமதுரையெல்லாம் நலமாகசாத்திருக்கும்
தெற்குநல்லவாசலிலே தேன்மொழியாள்வந்துநின்று
கதவைத்திறவென்று கன்னியவள்கேட்கலுற்றாள்
நீ-ஆரென்றுகேட்டார்கள் அங்கிருந்தசேவகர்கள்
திருடனுடதேவிநான் தேன்மொழியாள்வந்தேனடா
இராசாக்கள்பேட்டிகாண நாயகியும்வந்தேனடா

கதவைத்திறவென்றாளே கன்னியிளங்கொடியாள்
சேவகர்தான்பார்த்து திடுக்கிட்டுமெய்மறந்து
திறந்திருந்தபொற்கதவை திடீரென்றுமூடிக்கொள்ள
கர்ணகியுந்தான்பார்த்து காந்தாளம்பொங்கியவள்
எட்டியுதைத்தாளே யேத்திழையும்பொற்கதவை
அவன்தாண்டிஉதைக்கையிலேதவிடுபொடியாச்சுது
பொடிப்பொடியாச்சுது பொற்கொடியாள்தன்னுதை
அப்போதுஉள் நுழைந்தா ளரிவையந்தக்கர்ணகியும்
அதிலேயொருவனையும் ஆணழகிதான்பிடித்து
முன்பின்னாய்திருப்பிவிட்டு மூதேவிகேளுமென்றாள்
திருடனுடதேவிநான் தேன்மொழிவந்தேனென்றாள்
என்னைவந்துகாணச்சொல் இரண்டுங்கெட்டராசாக்கள்
அப்போதுபாண்டியர்க ளவன்முகத்தைதான்பார்த்து
இப்படிச்செய்தவர்க ளெனக்கறியச்சொல்லுமென்றாள்
அப்போதுசேவகனு மரசர்களுக்கேதுசொல்வான்
திருடனுடபெண்சாதி தேன்மொழியும்வந்தாளிங்கே
என்றுசொல்லிதா துவர்க்ளெடுத்துரைத்தாரன்னேரம்
எதிர்வந்துகாணச்சொன்னாள் நாயகர்உங்களைத்தான்
திருடனுடபெண்சாதி தேன்மொழிமங்கையரும்

கர்ணகி பாண்டியர்களைக் கண்டு பேசுதல்.

அப்போதுபாண்டியர்க ளருங்கிளியாள்முன்னேவந்து
பாண்டியரைத்தான்பார்த்து பாவையுமேதுசொல்வாள்
பழிகொடடாபழிகொடடா பத்தாவைக்கொன்றவனே
ஆளனைக்கொன்றபழி அரிவையற்குநீகொடடா
எதுக்காகவெட்டிவைத்தாய் எதுங்கெட்டபாண்டியனே
அள்ளினரா திருடினரா அணிமதுரைபட்டணத்தில்
அள்ளினகோவலற்கு அழிவிலங்குபோடொணாதோ
திருடினரோ அள்ளினரோ தென்மதுரைபட்டணத்தில்
திருடினகோவலற்குச் சேர்விலங்குபோடொணாதோ
சேர்விலங்குபோட்டு சேதிசொல்லியனுப்பிவைத்தால்

சேதிகண்ட நாழிகைக்கு தேன்மொழி நான்வந்திடுவேன்
கோட்டையேறிகுதித்தாரோ கொலைகளவுசெய்தாரோ
அகழேறிகுதித்தாரோ ஆடுமாடுகளைசாய்த்தாரோ
உன்னை-கொண்டவளிடத்தில் கூடியிருக்கக்கண்டாயோ
என்னகுற்றஞ்செய்தார்கள் ஏதுக்கடாவெட்டிவைத்தீர்
அவர்-ஈணுதவாழை யிளவாழைகண்டலவோ
கொலைதள்ளாவாழை கோவலனைக்கொன்றுயடா
என்னகுற்றஞ்செய்தார் இரண்டுதுண்டாக்கிவைத்தார்
சாகவயதல்லவே தனஞ்செயனுர்கோவலரும்
மாளவயதல்லவே மன்னரந்தக்கோவலரும்
காய்க்கும்பிராயமவர் கன்னிகட்டுந்தற்காலம்
பூர்க்கும்பிராயமவர் பிஞ்சிவிடுந்தற்காலம்
ஈனுதவாழை யிளவாழைகண்டொடித்து
அறிவுள்ளகோவலனை அன்னீதமாய்வெட்டிவைத்தார்
ஆர்பழிவீண்போனாலும் ஆளன்பழிவீண்போமோ
பழிக்குப்பழிகொடடா பாதச்சிலம்புதாடா
என்றந்தகர்ணகியா ளேந்திழையுங்கேட்கலுற்றுள்

கர்ணகிக்குப் பாண்டியர்கள் மறுமொழிகூறல்.

அப்போதுபாண்டியர்க ளாணழகரேதுசொல்வார்
காற்சிலம்பைகொண்டுபோன கள்ளனைதான்வெட்டி
உன்-சிலம்பைவரவழைத்தால்கள்ளன்பழிதாரோமென

கர்ணகி சிலம்பை வரவழைத்தல்.

அப்போதுகர்ணகியும் அருங்கிளியாளேதுசெய்வாள்
அந்தச்சபையில்நின்று அழைக்கிறுள்சிலம்பை
இராசசபையில்நின்று நலமாகஅழைக்கலுற்றுள்
என்னசொல்லியழைத்தா ளேந்திழையாள்காற்சிலம்பு
கூடப்பிறக்கிலையோ கூடடுப்பாலுண்ணலையோ
ஒக்கப்பிறக்கில்லையோ ஒருஸ்தனப்பாலுண்ணலையோ
எங்கேயிருந்தாலு மேந்திழையேவாருமென்றுள்

வாருமென்றுசொல்லி மங்கையருந்தானழைத்தாள்
அப்போதுபாண்டியர்க ளவருடையபொக்கிஷத்தில்
பெட்டிக்குள்ளேதானிருந்த பொற்சிலம்புபார்த்தது
எழுகட்டுத்தானுடைத்து எழுந்துதேசெஞ்சிலம்பு
பத்துகட்டுந்தானுடைத்து பாவையிடபொற்சிலம்பு
அங்கிருந்தகாவலர்கள் ஆயிரம்பேர்தலையுடைத்து
ஆவென்றசத்தத்துடன் அண்டரண்டந்தானதிர
சக்கரம்போலேசுழன்று தனிமதுரைப்பாண்டியர்முன்
கர்ணகிக்குமுன்னேவந்து காற்சிலம்புநின்றதங்கே
பத்தினியாள்தான்பார்த்து பாவையருமேதுசொல்வள்
கிட்டவரவேண்டாம் எட்டநில்லுசெஞ்சிலம்பே
சேரவரவேண்டாந் தூரநில்லுசெஞ்சிலம்பே
என்னண்டைவரவேண்டாம் அப்புறத்தேஒதுங்கிநில்
என்-தாலிபறிக்கவந்த நற்சிலம்பேதூரநில்லு
கூறைபறிக்கவந்த கொடும்பாவியொதுங்கிநில்லு
வேசியுன்னைப்பார்த்தாளோ விலைமாதுகொண்டாளோ
தாசியுன்னைப்பார்த்தாளோ தகாதவள்தொட்டாளோ
மஞ்சள்பறிக்கவந்த மாபாவியொதுங்கிநில்லு
சிலம்பிங்கேவந்ததிதோ திறமைகெட்டபாண்டியனே
காற்சிலம்புவந்ததுவே கர்ணகியாள்பழிகொடென்றாள்

பாண்டியர்கள் கர்ணகியைத் தங்கள் சிலம்புகேட்குதல்.

அப்போதுபாண்டியர்க ளாணழகரேதுசொல்வார்
உன்சிலம்புவந்ததிங்கே உத்தமியாள்பத்தினியே
என்சிலம்பைவரவழைத்தாலுன்பழியைத்தாரோமென

பாண்டியர்கள் சிலம்பை கர்ணகியாள் வரவழைத்தல்.

அப்போதுகர்ணகியா ளரிவையருமேதுசொல்வாள்
மட்டமாங்கருடனைத்தான் வாவென்றுதானழைத்தாள்
அப்போதுகெருடனது அந்தரமாய்த்தான்பார்த்து
இவன்பழியைவாங்கித்தாரே னென்சிலம்பைக்கொண்டு

மைந்தன்பழிவாங்கித்தாரேன் மணிச்சிலம்புகொண்டு
பிள்ளைபழிவாங்கித்தாரேன் பொற்சிலம்பைக்கொண்டு
அப்போதுகெருடனது அந்தரமாய்த்தான்பறந்து
ஏழுகடலுக்கப்பால் திருப்பாற்கடலிறங்கி
கன்னிபுற்றைத்தான்தேடிக் கருடனுமங்கேவந்து
நான்வைத்தபொற்சிலம்பை நலமாகத்தாருமென
ஐந்துதலைநாகமது அன்பாகக்கருடன்கையில்
அப்போதுகெருடன்கையில் அழகாய்க்கொடுத்ததங்கே
கெருடனுந்தான்வாங்கி கீர்த்தியுடனப்போது
அப்போதுகெருடனுமே அவசரமாயோடிவந்து
பாண்டியர்கள்தன்கொலுவில பக்குவமாய்வந்துநின்று
செஞ்சிலம்புகொண்டுவந்து தேன்மொழிகைகொடுக்க
அந்தச்சிலம்பையப்போ ஆரணங்குதான்வாங்கி
உன்சிலம்புவந்ததிங்கே யென்பழியை நீகொடடா
பழிக்குப்பழிகொடடா பாண்டியனேஎந்தனுக்கு
அறிவுகெட்டபாண்டியனே ஆளன்பழி நீகொடடா
புத்திகெட்டபாண்டியனே புருஷன்பழி நீகொடடா
விபரங்கெட்டபாண்டியனே வேந்தன்பழி நீகொடடா
என்கணவன்பழிகொடடா இனிவுகெட்டபாண்யனே
புருஷனையேண்டாகொன்றாய் புத்திகெட்டபாண்டியா
ஆளனையேண்டாகொன்றாய் அறிவுகெட்டபாண்டியா
எந்தபழிவீண்போனாலும் என்பழிவீண்போமோ
கணவனைக்கொன்றபழி கன்னியர்க்குத்தாடாவென்றாள்
என்றுமிவள்கேட்டாளே ஏந்திழையாள்கர்ணகியும்
அப்போதுபாண்டியர்கள் ஆலோசனைசெய்தார்
இந்தச்சிலம்பை இன்பமுடன்தானெடுத்து
சேவகர்கைதனிலே திறமாகத்தான்கொடுத்து
இரண்டுசிலம்புகளை இன்பமாகத்தான்கொடுத்து
ராசகன்னிதன்னிடத்தில் நலமாகககொடுங்களென்றாள்
சிலம்பையவரெடுத்து தீவிரமாயோடிவந்து
இராசகன்னிமுன்பாக நலமாகக்கொண்டுவந்தார்

செஞ்சிலம்பைதானெடுத்து தேன்மொழியாள்கையில்
அப்போதுராசகன்னி ஆரணங்குயேதுசெய்தாள்
நாகரத்தினச்சிலம்பிதுதான் என்னதல்லவென்றுமே
வேற்றுச்சிலம்பதுவே விதமாகவென்னதென்ருள்
என்சிலிப்பல்லவென்று ராசகன்னிதான்கொடுத்தாள்
அந்தசிலம்பெடுத்து ஆணழகர்வாராரே
ராசாக்கள்முன்னேவந்து நலமாகவேதுசொல்வார்
கோவிலிங்கிசொல்மொழியைக் கொற்றவர்கள்தானுமே
நாகாத்தினசிலம்பு தன்னதல்லவென்றுரைத்தாள்.
அப்போதுபாண்டியர்கள் மிரளவிழித்தார்கள்
கர்ணகியுந்தான்பார்த்து கண்டிதமாயேதுசொல்வாள்
உன்சிலம்பும்என்சிலம்பும் உன்சபையில்வந்துதடா
என்பழியைநீகொடடா ஏதுங்கெட்டபாண்டியனே
அப்போதுபாண்டியர் ஆரணங்குக்கேதுசொல்வாள்
சிட்டுப்போல்கத்துகிற தேன்மொழியைத்தள்ளுமென
அடா-சிட்டென்ருல்வீண்போமோ கன்னிபழிவாங்க
கிரியைப்போல்கத்துகிருள் கிளிமொழியைத்தள்ளும்
கிரியென்ருல்வீண்போமோ ஐந்துபழிவாங்கலையோ
நாயைப்போல்கத்துகிருள் நங்கையரைத்தள்ளும்
நாயென்ருல்வீண்போமோ நாலுபழிவாங்கலையோ
எந்தன்பழிவீண்போச்சு எந்தனபழிவீண்போக
என்-ஆளன்பழிகொடடா அறிவுகெட்டபாண்டியனே
பத்தாபழிகொடடா பாரங்கெட்டபாண்டியனே
என்றுமிவளகேட்க ஏதுசொல்வார்பாண்டியர்கள்
மாதரைப்போல்கூவுகிருள் மயிலனையைதள்ளுமென
பெற்றமகள்மாதரென்ருல் பூமியிடங்கொள்ளுமோடா
வளர்த்தமகள்மாதரென்ருல் வையகங்கொள்ளுமோடா
பத்துக்கும்அர்த்தம்சொன்னுல் பத்தாபழிதாரோமென
அப்படியேஅர்த்தஞ்சொலி அருங்கிளியாள் நின்ருளே
என்புருஷன்பழிகொடடா புத்திகெட்டபாண்டியனே

அப்போதுபாண்டியர்க ளரிவையருக்கேதுசொல்வார்
அறியாமல்கொன்றுவிட்டோ மாரணங்கேயென்றார்
தெரியாமல்கொன்றுவிட்டோம் தேன்மொழியேயென்று
அப்போதுகர்ணகியாள் ஆரணங்குவதுசொல்வாள் [ர்
முதற்பழியிற்பழிதா னிப்பழிதாருமென்றாள்
இப்படிக்குச்சொன்னாலே ஏந்திழையேநான்விடுவேனா
அப்படியேசொல்லுகிறோம் ஆரணங்கேவிட்டுவிடு

கர்ணகி பாண்டியர்களைக் கொன்றுவிடுதல்.

கோட்டைவெளிதனிலே கொற்றவரைவாருமென்றாள்
அப்படியேநல்லதென்று அனைவோரும்வந்தார்கள்
ஆறுயிரம்பாண்டியர்கள் ஆணழகர்வந்துநின்றார்
தாழ்வுவந்துநேர்ந்திருக்குத் தலையிற்கிரீடமென்ன
தலையில்கிரீடத்தைத் தாழவையுமென்றுரைத்தாள்
புஜகீர்த்திதான்கழற்றி பூமிதனில்வையுமென்றாள்
பூணூல்கழற்றிவையும் புத்திகெட்டபாண்டியரே
கணையாழிமோதிரத்தை கழற்றிவையுமென்றுரைத்தாள்
அத்தனையுந்தான்கழற்றி ஆணழகர்தான்வைத்தார்
மந்தைவெளிமாடதுபோல் மன்னர்களை நிற்கவைத்து
முதற்பழியிற்பழிதா இப்போதுமூன்றுபழி
சொல்லிவாய்மூடுமுன்னே தோகையிளங்கொடியும்
வாவென்றுதானழைத்தாள் வருகிறதுமறுரூபம்.
காளியென்றரூபமதைக் கர்ணகியுந்தானெடுத்து
சிங்கப்பல்லும்செஞ்சடையும் சிவனுடையரூபமும்
கோடாலிப்பல்லழகும் கோழிமுட்டைகண்ணழகும்
இரண்டுகரந்தனில் எடுத்தாளேதிரிசூலம்
சூலமொருகையிலே சுக்குமாந்தடியொருகை
பாசமொருகையிலே பன்னிருவேல்தானிருகை
மாடறக்குஞ்சூரி மடியில்ரண்டுபோங்குடனே
ஆறுயிரம்பாண்டியரை அன்பாகத்தானிருத்தி
சூலத்தைகொண்டுமல்லோ குத்தியேபாண்டியரை

சிறுகுடலும்பெருகுடலும் சேர்த்துப்பிடுங்கினளே
தோளிலேமாலைகொண்டு தோகையிளங்கொடியும்
பாண்டியனைக்கொன்றுவிட்டு பாவையும்வாராளே

கர்ணகி தனக்காகாதவர்களையெல்லாங் கொல்லுதல்.

வஞ்சிபத்தன்வீடுதேடி வாராள்மயிலனையாள்
பைங்கொடியைப்பழங்கலத்தில் பாங்காகமூடிவைத்து
பானையேலொளித்திருந்தான் பாதகன்வஞ்சிபத்தன்
ஆடாவென்றுசொல்லி அதட்டினள்கர்ணகியும்
அதட்டினசத்தத்தில் பழங்கலந்தானுடைந்தது
பழங்கலந்தானுடைந்து பாவையிளங்கொடியாள்
அப்போதுமுத்துமாலை ஆரணங்குவெளிப்பட்டாளே
எட்டிசிகைபிடித்து இரண்டுஉதைஉதைத்து
பானையிலிருந்தவனை பற்றியேதானிழுத்து
குத்திசரித்துமவன் குடலைபிடுங்கிக்கொண்டாள்
தோள்மாலைதானணிந்தாள் தோகைமயிலனையாள்
ஐந்துபாதங்கொர்ப்பமலோ அரிவையந்தமுத்துமாலை
வயிற்றிற்கருவெடுத்து வாய்தனிலேகவ்விக்கொண்டு
கோவிலங்கியரண்மனைக்குக் கொம்பனையும்வாருளே
வஞ்சிபத்தன்பிள்ளைகள் வாராரிருவருமாய்
அப்போதுகெருடனவன் அவர்களைத்தான்பார்த்து
மைந்தனைக்கொன்றவர்கள் வாராரிருவருமாய்
பிள்ளையைக்கொன்றபழிவாங்கித்தாவேண்டுமென்று
சொன்னவுடனேயந்த தோகைமயிலனையும்
வாவென்றுசொல்லியே மன்னர்களைத்தானழைத்து
எழுத்தாணிகொண்டு யேந்திழையம்குத்தினளே
சிறுகுடலும்பெருகுடலுஞ் சேர்த்துமேதான்பிடுங்கி
ஆகாயமாகவேதான் அந்தரத்தில்விட்டெறிந்தாள்
காலாலேகவ்விக்கொண்டு கடுகெனவேபோச்சுதுகாண்
கோவிலிங்கியரண்மனைக்கிக் கொம்பனைவாருளே
மகடசாலைதனிலிருந்தாள பைங்கொடியாள்கோவிலிங்கி

எட்டிசிக்கைபிடித்து இழுத்துவந்துவாசலிலே
தாயென்றுபாராமல் தள்ளியேகுத்தினாளே
சிறுகுடலும்பெருகுடலுஞ் சோத்துப்பிடிங்கினாள்
வேதவாத்திபள்ளிக்கூட மெல்லியரும்வந்துநின்றாள்
மதுரைவிட்டு அப்பாலே மன்னவனேவிலகுமென்றாள்
சிந்தாமணிதன்னை தேன்மொழிபோய்விடென்றாள்
பன்னிரண்டுமந்திரிகளை பத்தினியும்போங்களென்றாள்
அங்கிரிந்துகர்ணகியா ளாரணங்கெங்கேவாராள்
நாலுமதுரையது நடுமதுரைவந்துநின்று

கர்ணகி மதுரையைக் கொளுத்தல்.

தன்சிலப்புத்தானெடுத்து தனிமதுரைவிட்டெறிந்தா
அதுபட்டவிடங்களெலாம் அக்கினியாய்ப்பற்றுதங்கு
தாயார்சிலம்பெடுத்து தனிமதுரைவிட்டெறிந்தாள்
அதுபட்டவிடங்களெல்லாம் அக்கினியாய்பற்றுதங்கு
தென்மதுரைவடமதுரைதேன்மொழியுந்தான்பார்த்து
வலதுஸ்தனந்திருகி வடமதுரைவிட்டெறிந்தாள்
இடதுஸ்தனந்திருகி எழில்மதுரைவிட்டெறிந்தாள்
பால்பட்டவிடங்களெல்லாம் பற்றியெரியுதுபார்
நாலுமதுரையெல்லாம் நன்றாயெரியுதங்கே
நடுமத்தியில்நின்றுகொண்டு மகாவுக்கிரமாயிருந்தாள்
சிவந்தபுகைகறுத்தபுகை தேன்மொழியுங்கண்டாளே
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
வெண்ணெக்குடமெடுத்து வாராளேதயிரிடைச்சி
வெண்ணெயெடுத்துமல்லோ விட்டெறிந்தாள்மாரில்
களஞ்சாறியோர்பறைச்சி கட்டழகியங்கேவந்து
வெண்ணெயுருகிறதை மெல்லியருந்தான்பார்த்து
தன்—முந்தாணிதான்பிழிந்து மார்பில்வரிந்துகட்டி
முறத்தால்விசிறினாளேமெல்லியந்தசீர்பறைச்சி
திரேகங்குளிர்ந்தவுடன் திரும்பிபார்த்தாள்கர்ணகியும்
இடைச்சிபறைச்சியர்க்கு என்னவரம்கொடுப்பாள்

எந்தத்தெருவெந்தாலும் இடைத்தெருவேகாது
பார்மதுரைவெந்தாலும் பறைத்தெருவேகாது
வாழ்த்திவரம்கொடுத்து மாதர்களைப்போங்களென்றாள்
படுகளத்தைத்தான்தேடிப் பத்தினியும்வாறாளங்கே,

கர்ணகிமாதக்கு ஓலையெழுதியனுப்புதல்.

ஓலையெழுதுகிறாளுத்தமிமாதகிக்கு
என்சக்களத்திமாதகியே என்வார்த்தைநீகேளு
உன்கடனுக்காகவேதா னுத்தமனார்கோவலரும்
செஞ்சிலம்புவிற்கவந்த செட்டியார்தான்மடிந்தார்
மாண்டுமடிந்துவிட்டார் வடிவழகர்கோவலரும்
இப்படிக்குச்சொல்லி யெழுதினாளோலைதனை
சுருக்காகத்தானழைத்து சுருளோலைகைகொடுத்தாள்
ஓலைச்சுருளெடுத்து காகமதுவோடிவந்து
மாதகிக்குமுன்னேவந்து மடக்கோலைபோட்டுதங்கே
ஓலைச்சுருள்பார்த்தா னொளியுடனேமாதகியும்
துக்கம்பெருகியந்த தோகையருமுள்நுழைந்து
செட்டியார்தான்கொடுத்த திரவியங்களத்தனையும்
நாலுபங்குதான்பகுத்தாள் நலமுடனேமாதகியும்
கோவிலுக்கோர்பங்குதான் குருக்களுக்கோர்பங்கு
தாயிக்கொருபங்கு தருமத்துக்கோர்பங்குவைத்து
கோடாலிமுடிபோட்டு மஞ்சள்துகிலுடுத்தி
தாம்பூலபழமுந் தன்மடியில்கட்டிக்கொண்டு
அழுதுகொண்டுவாராளே அணிமதுரைவீதியிலே
கணவன்படுகளத்தில் கதறிக்கொண்டுவாராளே
மாதகியாள்வரவுகண்டு மயிலணையும்போயொளித்தாள்
ஆளனைக்கண்டுவிட்டு ஆரணங்குமாதகியும்
அழுதுபுலம்புகிறா ளந்தநல்லமாதகியும்

மாதகி கோவலரைக் கண்டு புலம்பல்.

வந்தாருருண்டாள்வருந்திப் புரண்டழுதாள்
ஐயோசிவனே அழுதுமாரடிப்பாளாம்

பற்றிவருவாளாம் பறந்துவருவாளாம்
பக்கத்திலே நின்று மாரையடிப்பாளாம்
சுற்றிவிழுவாளாம் சுழன்றுவிழுவாளாம்
துக்கமிகுந்தவள் மாரையடிப்பாளாம்
அண்டைவருவாளாம் அகலவருவாளாம்
ஐயோ சிவனேயென்று மாரடிப்பாளாம்
தக்கோலந்தின்னுந் தனிவாயைக்கண்டு
முத்தங்கொடுத்தவள் மோதியழுவாளாம்
வெற்றிலைதின்கிற வெல்வாய்தனைக்கண்டு
முத்தங்கொடுத்தவள் மோதியழுதாளே

வேறு.

கூத்தியார்வந்தேன்காண் கொண்டவளேன்வருவாள்
வேசிநான்வந்தேன்காண் மெல்லியவளேன்வருவாள்
தாசிவந்தேன்வந்தேன்காண் தையலருமேன்வருவாள்
என்றுமிவளழுதாளேந்திழையாள்மாதவியும்
நான்கூடவந்தேனென்று நாயகியாளோடிவந்து
எதிரில்வந்துமாரடித்தாளேந்திழையாள்கர்ணகியும்
இருவருமாய்மாரடித்தார் இறந்தபொருகோவலர்க்கு
கர்ணகியும்பார்த்து மாதவிக்கேதுசொல்வாள்
செட்டியார்தன்னுடனே தேன்மொழிமாளுகிறேன்
எங்களிருவரையும் எடுத்துத்தகனஞ்செய்யும்
அப்போதுமாதவியாளாரணங்கேதுசொல்வாள்
பலன்கண்டமாதவியும் பத்தினியாளேதுசொல்வாள்
பலன்கண்டநானிருக்கப் பத்தினிநீமாளுவானேன்
சுகங்கண்டநானிருக்கத் தோகைநீமாளுவானேன்
நீ-என்னசுகமறிவாய் என்றன்தமக்கையரே
நான்கூடமாளுகிறேனாயகனார்தன்னுடனே
எங்களிருவரையு மெடுத்துத்தகனஞ்செய்யும்
சம்மதியோவென்றுரைத்தாள் தையலந்தமாதவி
அப்படியேசம்மதித்தாளருங்கிளியாள்கர்ணகியும்

கர்ணகி கோவலரையும் மாதகியாளையும் தகனஞ்செய்தல்.

வாழைமரத்தைவெட்டி மகாகாஷ்டந்தானடுக்கி
கோவலனைதானெடுத்துக் கொம்பனைமாரிருவர்களும்
கழுவிக்குளுப்பாட்டிக் கால்கட்டுகட்ட லுற்றுர்
காஷ்டத்துமேலேவைத்தார் கட்டழகர்கோவலனை
மாதகியாளப்போழுது மன்னருடன்தான்படுத்தாள்
இவர்சிரசு அவள்கைமேல் அவர்சிரசுஇவள்கைமேல்
கட்டியணைத்துக்கொண்டு கட்டழகிதான்படுத்தாள்
கொள்ளிவையுமென்றுசொன்னுள் கொம்பனைகர்ணகி
கொள்ளிக்கட்டைஎடுத்து குடமொன்றுதானெடுத்து
கொள்ளிவைக்கபிள்ளை குடமுடைக்கமைந்தருண்டோ
என்றுசொல்லிகர்ணகியா ளெடுத்தாளேவாய்க்கரிசி
ஆழியிடுங்கையிலே அள்ளியிட்டாள்வாய்க்கரிசி
கொள்ளிவைக்கபிள்ளை குடமுடைக்கமைந்தருண்டோ
என்றந்தக்கர்ணகி மெடுத்தாளேபச்சைவாழை
ஈணுதவாழை இளவாழைத்தண்டெடுத்து
அட்டாளும்சொக்கரை ஆண்டவர்மனதிலெண்ணி
இதுதான்கொள்ளிஎன்று இருவருக்கும்வைத்தாளே
கர்ணகிமெய்யானல் கலந்துபற்றிவேகவென்ருள்
பத்தினியாள்சொல்லையிலே பற்றியெரியுதுபார்
கலந்துபற்றிபோகையில் கர்ணகியாளேதுசொல்வாள்
மாதகிஎன்றுசொல்லி மயிலனையாள்தானழைத்தாள்
ஏனம்மாஎன்றுசொல்லி எடுத்துரைத்தாள்மாதகியும்
மூன்றுதரமழைத்தாள் மூன்றுகுரல்கொடுத்தாள்
சந்தோஷப்பட்டாளே தையலந்தக்கர்ணகியும்
காஷ்டந்தணிந்தபின்பு கண்டாளேகர்ணகியும்
சுட்டதொருஅஸ்திகட்குச் சேர்த்திட்டுநீர்தெளித்து

கர்ணகி இவருடைய அஸ்திகளைக் கங்கையில் விடுதல்.

இவருடைய அஸ்திகளை ஏந்திழையாளெடுக்கையிலே
மாதகியாள்மடிதனிலே வைத்திருந்தபுட்பமுதல்
வைத்தபடியிருக்கக் கண்டாளேகர்ணகியும்
பத்தினியாளென்றுசொல்லி பாவைமனதிலெண்ணி
இருவருட அஸ்திகளை ஏந்திழையாள்தானெடுத்து
காசிநதிதேடிக் கர்ணகியாள்வாராளே
அப்போதுசொக்கலிங்கம் ஆண்டவனுரேதுசெய்தார்
இவ்விடத்திலாலயங்க ளனேகமாயுண்டுபண்ணுர்
அங்கொருவேதியர்போல் ஆண்டவனுர்வீற்றிருந்தார்
வேதியனைத்தான்கண்டு மெல்லியவளேதுசொல்வாள்
காசிநதியெங்கேயென்று கர்ணகியாள்கேட்கலுற்ருள்
இதுதான்நற்காசிநதி யென்றுரைத்தார்வேதியரும்
அந்தநதிதனிலே அஸ்தியெலாம்விட்டுவிட்டாள்
கோவலனுரஸ்தியெலாம் மல்லிகைபுட்பமாச்சு
மாதகியாள் அஸ்தியெலாம் பூத்தொடுக்கநாராச்சு
நாருநல்லபூவதும் ஜலத்திலேமிதக்குதுபார்
பத்தினியாளென்றுசொல்லி பாவைமனதிலெண்ணி
அப்போதுகர்ணகியா ளாரணங்குயெங்கேவாராள்
வேம்பூருஎல்லைதாண்டி விலகாமல்வாராளே
மலையாளஎல்லையிலே மயிலனையாள்வந்திருந்து
பகவதியாளென்றுசொல்லி பட்சமுடன்பேர்பெற்று
அங்கேசிலகாலம் இருக்கப்பொருந்தாமல்

கர்ணகியாள் திருவொற்றியூருக்கு வருதல்.

கடலோரம்நல்வழியாய் கர்ணகியும்வாராளே
ஒற்றிநகர்தேடி உத்தமியும்வந்துநின்ருள்
திருவொற்றியூர்தனிலே தியாகரிடம்அம்மனுமாய்
சொக்கட்டாஞடிவந்தார் சுந்தரற்குதூதுவந்தோர்
பகடை தளாடிவந்தார் பாவையர்க்குத்தூதுவந்தோர்

சதுரங்கமாடிருந்தார் சங்கிலிக்குத்தூதுவந்தோர்
அந்தச்சமயத்தில் கர்ணகியாள்வந்துவிட்டாள்
கர்ணகியைக்கண்டவுடன் கடுகெனவேதியாகர்தேவி
அந்தப்புரந்தனிலே அம்மனவள்போயொளித்தாள்
அந்தச்சமயத்திலே அழகான தியாகரண்டை
கைதனிலேதானிருந்த பகடைதனைவிட்டெறிந்து
எங்கேவந்தீரென்று இளங்கொடியைகேட்டாரே
தாகமுண்ணத்தாருமென்றாள் தயவுடனேகர்ணகையும்
அப்போதுதியாகரவர் ஆண்டவனாரேதுசொல்வார்
ஆளச்சுனையிறங்கி அள்ளிப்பொசியுமென்றார்
பாசிகையையெடுத்து பாவைசலமுண்ணுமென்றார்
அப்படியேநல்லதென்று ஆரணங்குதானிறங்க
இறங்கினசாடைகண்டு ஏதுசெய்தார் தியாகரவர்
பாறையைக்கொண்டுமவர் பக்குவமாய்மூடிவிட்டார்
கற்பாறையைக்கொண்டுமவர் கடுகெனவேமூடிவிட்டார்
காணகியுந்தான்பார்த்து கணமோசம்வந்ததென்று
நம்புரிமார்வீதியிலே நலமாயெழுந்திருந்தாள்
அதுவறிந்துதியாகரவர் அங்கொருகல்மூடிவிட்டார்
பூந்தோட்டமுன்பாக பெருமையுடன்தானெழுந்தாள்
அதுவறிந்துசுவாமியார் அங்கொருகல்மூடிவிட்டார்
காசிகுளமேடருகே கர்ணகியாள்தானெழுந்தாள்
அதுவறிந்து ஆனழகர் அங்கொருகல்மூடிவிட்டார்
கர்ணகியாள தான்பார்த்து கன்னிகலக்கமுற்றாள்
அதுவறிந்து ஆண்டவனார் தியாகரவரேதுசொல்வார்
இன்றுமுதற்கொண்டு இங்கேயிருந்துவிடு
சித்திரைமாதத்திலே சிறப்பானநாளையிலே
முதற்பூசையுந்தனுக்கு மேலாகத்தாரோமென்றார்
இன்னமுனக்கென்னவேண்டும் எனக்கறியச்சொல்லும்
எட்டுகுட்டிஎட்டுபொட்டை எட்டுபுட்டிஎட்டுசட்டி
கம்மாளபெலியெனக்கு கர்த்தரேதரவேணும்
வருஷத்துக்கொருபலியே வகையாகக்கொடுக்கவேணும்

அப்போதுதியாகராவர் அப்படியேதருவனென்ருர்
வட்டபலியொன்று வகையாகக்கொடுக்கவேணும்
ஆண்டுக்கொருதினந்தான் அழகுள்ளகம்மாளனை
பெலிவாங்கிக்கொண்டு பூவையத்தகாணகி[illegible]
அப்போதுஒருவருடம் ஆண்டொருகம்மாளனை
பத்தும்பதிகமது பாவையர்க்[illegible]ன்படித்தான்
கெங்கையாய்பாலதுதான் கிள[illegible]ழிக்குதான்சுரக்க
வட்டபுரியம்மனவள் மனமகிழ்ந்தேதுசொல்வாள்
இன்றுமுதலெந்தனுக்கு இந்தபழிவேண்டாமென்று
எருமைகடாகாவுகந்தால் இஷ்டமுடன்கொள்வேன்
அப்படியேசம்மதித்தார் ஆதிபுரியீஸ்வரனுர்
கனவில்வந்துதானுரைத்தார் கலியுகத்துமானிடற்கு
ஆண்டவனுர்சொற்படியே அன்புள்ளகாவலர்கள்
பூசைதவருமல் புண்ணியங்கள்செய்திடுவார்
செவ்வாய்புதன்கிழமை திருவாட்சிமேல்வருவாள்
வந்தவர்க்குவரந்தருவாள் வட்டபுரிதாட்சியம்மன்
வட்டபுரியம்மன்கதை வையகத்தில்படித்தோர்
கற்றவர்கள்கேட்டவர்கள் கலியுகத்தில்சொன்னவர்கள்
ஆல்போல்தழைத்து அருகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றமுசியாமல்வாழ்ந்திருப்பார்
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஷ்வரனுர்

வாழி-விருத்தம்.

கார்வாழிகர்ணகையும் மாதகியுமேவாழி
பேர்வாழிகோவலபன் பெண்மணிமிகவாழி
ஊர்வாழிபத்தினியோடிருந்திடுவோர் தங்கள்
சீர்வாழிபெரியவர்கள் சிறந்துமிகவாழியவே

கோவலன்கதை

முற்றிற்று.

பக்கிரியாபிள்ளையவர்களியற்றிய,

தோத்திரக் கீர்த்தனப்பாமாலை.

இது "புத்தம் புதுப்பாடல், புகழ்வண்ணத் திருப்பாடல், பக்திதரும் பாடல், பக்கிரியாபிள்ளைபாடல்" என்னும் புதுமொழி ஒருபழமொ[illegible]ய் வழங்கிவரும்படி இனியவாக்குகள் அமைந்து இன்பம் பயக்குகின்றதென்ப[illegible] இப்புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்க்கே நன்கு விளங்கும். இதன் விலை அணா 5.

சேந்தமிழ்ச் சரபம் விரகாலூர்

மகா-௱-௱-ஸ்ரீ சுப்பையாபிள்ளை அவர்களியற்றிய,

கோவலன் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0
நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0
அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0
பதிவிரதா சத்தியவான் சாவித்திரித் திருப்புகழ்	0	4	0
இராமாயணத்திருப்புகழ், இலங்காதகனக்காவடிச்சிந்து	0	3	0
சிதம்பரம் நடராஜர் நடனத்திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0
ஞானசௌந்தரித் திருப்புகழ் காவடிச்சிந்து 2-பாகம்	0	8	0
அல்லியரசாணி சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0
பாண்டவாள் சரித்திரப் பாரதக்காவடிச்சிந்து திருப்புகழ்	0	4	0
பரமன்திருமால்முருகன் பக்திரஸக் கீர்த்தனை	0	4	0

சு. துரைசாமி படையாச்சியார் அவர்களியற்றிய.

பாகவதத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	3	0
சப்தகாண்டம் இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து	0	3	0
ஸ்ரீபாகவத குசேல பக்தியானந்தச் சரித்திரத்திருப்புகழ்	0	4	0
பார்வதி சத்தியவான் சாவித்திரி சரித்திரத்திருப்புகழ்	0	4	0
வள்ளி சுயம்வரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0

மகா-௱-௱-ஸ்ரீ உடையார்பிள்ளையவர்களியற்றிய,

கோவலன் சரித்திரம் 1, 2 பாகங்கள்	0	4	0
அல்லியரசாணி சரித்திரம் 1, 2 பாகங்கள்	0	4	0

வேலுச்சாமிக் கவிராயரவர்களியற்றிய

இந்து தேசாபிமானிகள் மீது தேசியகீதங்கள், சிறந்த செந்தமிழ்ப் பாடல்கள்	0	4	0